தென்மொழி

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் நினைவிதழ்

சுவடி : 17

ஓலை : 6-7

ஆசிரியர்

பெருஞ்சித்திரனார்

விலை

உருபா : 2-5

www.thamizham.net - Free E book No 7507

பாவாணர்க்குப் பாவேந்தர் வாழ்த்து!

செந்தமிழ்ச் செல்வச் சிறப்பும் திருநாட்டில்
வந்தேறிகள் அடிக்கும் வாய்ப்பறையும் — இந்தாபார்
என்னும்பாவாணர், எவன் எவ் விடர் செயினும்
இன்னும் பார் என்னுமடல் ஏறு.

ஆதி மொழிஎன் அருமைத் தமிழ் என்றே
ஓதி உலகுக் குணர்த்திடவே — தீதின்றி
ஆவன செய்பே ரறிஞர் அண் ணாமலையின்
தேவநே யப் பாவா ணர்.

தமிழில் தமிழ்சார்ந்த கன்னடத் தெ லுங்கில்
அமைகே ரளத்துளுவில், ஆர்வம் — கமழ்கின்ற
ஆங்கிலத்தில் ஏனை அயல் மொழியில் வல்லுநர் எப்
பாங்கிலுளார் பாவாணர் போல்?

வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும் — தடவியே
அந்தமிழே ஆதிஎன் னும்தேவ நேயர்தாம்
எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து.

என்தமிழிற் கொஞ்சம் இருந்ததெலுங் கிற்கொஞ்சம்
பின்ஆங் கிலத்திலே பீஏயும் — நன்குடையேன்
என்று மொழிவார்போல் இல்லைநம் பாவாணர்
பன்மொழிவல் லார்இந்தப் பார்க்கு.

பன்மொழியில் வல்லரென்று பைந்தமிழர் நாவினிலே
இன்னும் சிலபேர் இருக்கின்றார் — அன்னவர்கள்
நாட்டுக்குச் செய்ததென்ன? நந்தமிழை மாற்றலர்க்குக்
காட்டிக் கொடுக்கும் கயவு.

விண்ணள்ப டாதுதமிழ் மேன்மையினைக் காட்டுவதில்
வாணாளை ஆக்கும்பா வாணர்க்கு — நாணமல்
அல்லல் விளைவிக்கும் அயலார்க் கடியார்கள்
இல்லாம லில்லை இவண்.

நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று
கூவும் அதுவுமோர் குற்றமா? — பாவிகளே
தேவநே யர்க்குச் செயுந்தீமை செந்தமிழர்
யாவர்க்கும் செய்வதே யாம்.

திக்கற்ற செந்தமிழ்த்தாய் வெல்கவே வெல்கென்று
மெய்க்குழைக்கும் தொண்டர்மனம் வேகவே வைக்கும்.
தடிப்பயல் யாவனே தப்புவான்? அன்னோன்
நடுத்தெருவில் நாறும் பிணம்.

புண்ணுளால் நெஞ்சம் தமிழுக்கு ஒன்றுமென்று
அண்ணா மலைப்பல் கலைக்கழகம் — இந்நாளில்
தேவநே யர்க்குத் திருத்தொண்டு செய்ததென்க
யாவரும் ஏத்தும் படி.

வாழ்ந்தாலே நாம்வாழ்வோம் வாழாளேல் நாம்வாழோம்
தாழ்ந்த தமிழகத்தில் செந்தமிழ்த்தாய்-ஆழ்ந்தாழ்ந்து
பாராது பாவாணர்க் கின்னல் புரிவதுமேல்
வாராது வாழ்விற் புகழ்!

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7507



மொழிஞாயிறு பாவாணர் மறைவு

கடந்த அறுபதாண்டுகளாகத் தம் அரிய நுண்மாண் நுழைபுல வண்மையினால், தமிழ் மொழியின் அரிய பெரிய வரலாற்றுண்மைகளையும் அறிவியல், மொழியியல் நுட்பங்களையும் உலகுக்கு எடுத்துக் காட்டிய மொழிநூல் முனைவன், மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்** அவர்கள், மதுரையில் கடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில், 5-1-81 அன்று நடந்த முதல் நாள் பிற்பகல் பொது நிலைக் கருத்தரங்கில் கலந்து கொண்டு, ஒருமணி நேரம் அரியதொரு வரலாற்றுச் சொற்பொழிவை ஆற்றி, அன்று பிற்பகல் ஏற்பட்ட நெஞ்சு வலியால் நலிவுற்று, மதுரை **இரசுக்கின் மருத்துவமனை** என்ற இராசாசி மருத்துவமனையில் சேர்க்கப் பெற்று, இழந்த நினைவினராயிருந்து ,15-1-81 வியாழன் இரவு 12-50 மணியளவில் உயிர் நீத்தார் எனனும் செய்தியை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர் உடல், 16-1-81-இல் சென்னைக்குக் கொண்டு வரப் பெற்று, 17-1-81 அன்று காரிக் கிழமை, அன்பர்களும் அமைச்சர்களும் சூழ்ந்து இறுதி வணக்கம் செய்தபின், கீழ்ப்பாக்கம் கிறித்தவக் கல்லறையில் மாலை 5-30 மணியளவில், கிறித்தவ சமய முறைப்படி நல்லடக்கம் செய்யப் பெற்றது அதன் பின், அங்கு நடந்த இரங்கலுரைக் கூட்டத்தில், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் தலைமையில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் பொன்னடியான், மூன்றுள் நகரத் தந்தை சா. கணேசன், கு.பூங்காவனம், த. ச. தமிழன், இரா. இளவரசு, பொற்கோ, இரா. இளங்குமரன், சிங்கை மா. செ. வீராசாமி, தமிழீழத் தலைவர் அமிர்தலிங்கம் இரா. சனார்த்தனம், அமைச்சர்கள் பொன்னையன், அரங்கநாயகம் ஆகியோர் அழுங்கலுரையாற்றி, மறைந்த பேரறிஞர்க்கு நல் வணக்கம் சாற்றினர்.

www.thamizham.net - Free E book No 7507



பாவாணர் இரங்கல் பதிகம்

கண்ணீர் வற்றிக் கடல்வற்றி — நீள்
  கடலின் அருகில் ஊற்றெடுக்கும்
உண்ணீர் வற்றி உலகளிக்க — மேல்
  உலாவும் மேகத் திரள் வற்றித்
தண்ணீர் வற்றித் தரைமுழுதும் — செந்
  தணலே பற்றித் தீய்த்ததுவே,
ஒண்ணீர் அறிவுப் பாவாண — நான்
  உனையே பிரிந்த போழ்தினிலே !

கண்கள் இருண்டு காதழன்று — இரு
  காலும் சோர்ந்து கையற்று,
மண்கொள் மலைகள் இடிந்துருண்டு — எல்
  மண்டை யழுத்த வளிதிக்கித்
திண்கொள் நெஞ்சம் அறக்கிழிந்தே — எண்
  திசையும் அரத்தம் பாய்ந்ததுவே,
பண்கொள் நாவின் பாவாண — நீ
  படுக்கை சாய்ந்த போழ்தினிலே !

தசையும் காய்ந்து கரியாகி — மெய்த்
  தண்டும் நரம்பும் பொடியாகிப்
பசையும் உருகி நெய்யாகிச் — செம்
  பாலும் சுவர்ந்து வளியாகிப்
பிசையும் நெஞ்சக் குலைவெடித்துச் — சா
  பேய்க்குக் களமாய்ப் போயினவே,
வசையில் இசைசேர் பாவாண — நீ
  வானம் புகுந்த போழ்தினிலே !

www.thamizham.net - Free E book No 7507

நிலமும் வெந்து நீருகி — மண்
நீரும் கொதித்து வளியாகிப்
பொலமொண் தீயும் புகையாகி — வான்
போழும் வளியும் வெளியாகிப்
புலமெண் டிசையும் கிடுகிடுக்க — ஐம்
பூதத் தூழி ஆர்த்ததுவே,
அலமார் நெஞ்சில் பாவாண — நீ
ஆக்கை கழன்ற போழ்தினிலே!

தமிழே தொகைந்து கருவாகித் — தீந்
தமிழே புகுந்துள் ளுயிர்ப்பாகித்
தமிழே புலனுய்ப் பொறிகளுமாய்த் — தாய்த்
தமிழே உருவாய் உலாவந்து,
தமிழே புகட்டி ஒளிதந்தாய் — பின்
தவிர்ந்தாய் வெற்றுச் சருகானேம்,
தமிழாய் வாழ்ந்த பாவாண — நீ
தமிழாய்ப் பொலிந்த போழ்தினிலே!

ஒளிசேர் விழியும் சுடர்நுதலும் — நல்
லுரஞ்சேர் நெஞ்சும் தமிழ்நினைவும்,
வளிவார் முடியும் நரைதலையும் — உயர்
வல்லென் மூளைக் கொழுதிரளும்,
அளிசேர் தமிழ்தோய் ஆருயிரும் — ஓர்
அணுவாய் அணுவாய் உட்கரைந்தே
வெளிசேர்ந் தனவோ பாவாண — நீ
விண்ணில் ஏறிய போழ்தினிலே!

சோலை நிழல்போல் குளிரன்பும் — உயிர்
சோரா துயர்த்துந் தெள்ளறிவும்
காலை ஞாயிறு போலெழுந்து — தமிழ்க்
கதையாய்ச் சொன்னாய்; கதைநிறுத்திப்
பாலை நடுவில் எனைவிடுத்தாய்! — உள்
பதைப்புற் றுயிருஞ் சிதைந்ததுவே,
வாலை அறிவுப் பாவாண — நீ
வாழ்க்கை துறந்த போழ்தினிலே!

பொன்னார் மாடத் திருக்கோயில் — நின்
புலனால் சமைத்துத் தமிழணங்கை
மின்னேர் இறைமைத் திருவுருவாய் — ஒளி
மிளிரச் செய்தே வழிபட்டாய்!
உன்னோர் அழுங்க ஊரழுங்க — என்
உயிரும் உடலும் ஒருங்கழுத,
என்னோர் ஆவிப் பாவாண — நீ
எனையே தவிர்ந்த போழ்தினிலே!

www.thamizham.net - Free E book No 7507

உலவல் மறந்தாய் ஊண்மறந்தாய் — உன்
உறவே வாழ்வென் றுவநததுணைக்
குலவல் மறந்தாய் குளிமறந்தாய் — புதுக்
கூறை வாங்கும் நிலைமறந்தாய் !
கலவல் தமிழ்க்கே தனித்தமிழ்காண் — ஒளி
காழ்க்கும் நினைவின் பாவாண !
பலவல் லின்பம மறந்தாயே — நீ
பாயல் மறந்த போழ்தினிலே !

வேட்கும் தமிழே விளைவாகிச் — சொல்
விளைக்கும் தொழிலே வாழ்வாகித்
தோட்கும் துண்டைப் போர்த்தாமல் — ஒரு
துறவியைப் போலும் மனங்கொண்டே
நாட்கும் மணிக்கும் உழைப்பெடுத்தாய் ! — யாம்
நலிந்தோம் மெலிந்தோம் செந்தமிழை
மீட்கும் முயல்வில் பாவாண — நீ
மீளாத் துயில்காண் போழ்தினிலே !



www.thamizham.net - Free E book No 7507

'கெஞ்சுவதில்லை பிறர்பால்;
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 17 ஓலை: 6-7
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
சுறவம்-கும்பம். தி. பி. ௨௦௧௨-
சனவரி—மார்ச்சு-'81.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்:
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
தென்மொழி ந. முத்துக்குமரனார் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

மொழிஞாயிறு மறைந்தது!

மொழிஞாயிறு மறைந்தது; தமிழ்க்கதிரவன் தலைசாய்த்து விட்டான்; செந்தமிழுலகம் இருண்டது! தொல்காப்பியர், திருவள்ளுவர் ஆகிய பெருமக்களுக்குப் பின், தமிழ் மொழியின் மேலும், அதன் வரலாறு, இனம் ஆகியவற்றின் மீதும், அடர்த்துப் போர்த்து நின்ற அறியாமைக் காரிருளைத் தம் அறிவாண்மையால் அடித்து விரட்டிய தனித்தமிழ்க் கதிரவன், ஒளிப்புலன் ஞாயிறு, செம்புலச் செம்மல் **ஞா. தேவநேயப் பாவாணர்** என்னும் தீந்தமிழ்ப் பேரொளிக்கோளம், தன் ஆய்புல அறிவுக் கதிரைச் சுருக்கிக் கொண்டு, சாவெனும் பேரிருளில் தன் அறிவியக்கத்தை ஒடுக்கிக் கொண்டது! நேரக் கூடாதது நேர்ந்தே விட்டது; நடக்கக் கூடாதது நடந்தே விட்டது! தென்புல மக்கள் தங்கள் வாழ்வு நலன்களை நாடிச் சிறிது சிறிதாக முன்னேறுவதற்குத் தன் தெள்ளிய அறிவாலும், ஒள்ளிய ஆய்வுத்திறனாலும், பேரொளி உமிழ்ந்த பெருங்கதிர் ஞாலம் இறுதியில் மறைந்தே விட்டது! தமிழின வாழ்வில் ஒரு பேரூழி தோன்றி, இருந்து, தலைமறைந்து விட்டது!

www.thamizham.net - Free E book No 7507

இனி, மொழிப் புலன் அறியா மூங்கை மாந்தராய், விழிப்புணர்வற்ற பழிப்புறு மக்களாய்த் தமிழர் இனம், தளர் நடையிட வேண்டி வந்து விட்டது. என் செய்வது? இயற்கையின் அழித்தெழுத வியலாத இயக்கச் சுழற்சியில், என்றாயினும் ஒருநாள் எவரும் ஆட்பட்டே மூழ்கித் தீர வேண்டிய அந்தக் கடைசி அதிகாரமும், பாவாணர் வாழ்வில் கிழித்தெறியப்பட்டு விட்டது.

தொல்காப்பியனுக் கில்லாத தொகைச் சொல் அறிவும், திருவள்ளுவருக்கில்லாத தீந்தமிழ் வரலாற்றறிவும் தேவநேயமாய் முகிழ்த்துத், தமிழினம் தவறவிட்ட மொழித்தடங்காட்டி, வழிநடை தோற்றிப் புதுவரலாறாய்ப் புதுக்கிக் கொடுத்த ஊழிப்பேரொளி, ஒரு நொடியில், கால வெள்ளத்துள் கட்புலன் படாது கரைந்து விட்டது. இனி, இருள்! இருள்! எங்கும் இருள்!

பாவாணரின் அறிவுக் கொழுமையால், தமிழ் வரலாறு தகைந்து, புடைவிரிந்து, புலம்பரப்பி, இவ்வினம் ஈடேறி விடும் என்று நம்பிக் கொண்டிருந்த எம் உள்ளப் புலன், அனல் மெழுகாய் உருகி, ஆற்று வெள்ளமாய்ப் பாய்ந்தோடியது. சிக்கெனப் பிடித்த எம் அறிவுப் பேரிறைவன், எம் முதுபெரும் ஆசான், அடர்த்துப் பிடித்த எம் கையிறுக்கத்தை, நெகிழ்த்துக் கட்டவிழ்த்துக் கொண்டு, ஓட்டோடி மறைந்து விட்டான். இன்று நாம் ஒரு தனி உயிர்த்திரளையாய், உழுவல் துணையின்றி, மொழிவலம் வந்துகொண்டிருக்கின்றோம். என் செய்வோம்? எம் காலக் கடன் கழிய வேண்டியுள்ளது. அழுதழுது புலம்பி, அலறச்சாம்பி, எம் உயிர்முட்டம், உலர உலா வந்து கொண்டிருக்கின்றது. அப்பனுக் கப்பனாய், ஆசிரியனுக் காசிரியனாய், நண்பனுக்கு நண்பனாய், எம் அறிவு வழி காட்டியாய் அமைந்த, செறிவுறு பேருயிர்ப் பாவாணர், எம்மைத் தனியே விட்டுச் சென்று விட்டார். இரட்டையேர் பூட்டி, இருண்டு கருக்கட்டிய வேளையில், முருடு தட்டிப் போன, இத் தமிழ்ப்புலக் கறம்பு நிலத்தை, இருவேமும் இளைப்பின்றி ஓட்டி, உழுது தூய தமிழ் நீர்ப் பாயச்சிச் செந்தமிழ்ப் பயிர் விளைத்து வரும் வேளையில், எம்மை ஓரேர் உழவனாய்த் தனி நிறுத்தி, ஓய்வு கொண்டான் எம் உழுவல் பேராசான்! இனி, என் செய்வேம்? எங்ஙன் பாடாற்றுவேம்? எஞ்சிய எம் வாழ்நாளும் எத்தனைப் படைச்சால் உழுதற்குப் பயன்படுமோ? அறியேம்! அறியேம்!

கொழுமுனை மழுங்காக் கூர்நர் எம் கையுளது! அறிவுப் புலன் மயங்காச் செறிவுணர்வு எம் மூளையுள் சிறகார்ந்துளது! கால்கள் நடைதளராது நெடுந்தொலைவு நடக்க வேண்டுமே! எமக்கு உற்ற துணைவர் யார்? ஊன்றுதரா உழைஞர் யார்? பெற்ற பெரும் பயனைப் பிழைதீர எண்ணிச், சோர்ந்து அயரும் எம் நெடுஞ்சாங் குலைக்கும், தொய்ந்து விழும் எம் துவளறியாத் தோள்களுக்கும் வலியூட்டுவார்

www.thamizham.net - Free E book No 7507

சொற்பிறப்பியல் அகரமுதலி பற்றிப் பாவாணரின் கருத்தும் நோக்கமும்

1. பாவாணர் மறைவுக்குப்பின், அவர் தொடராது விட்டுச் சென்ற சொற்பிறப்பியல் அகரமுதலியைப் பற்றிச் சிலர் மிக எளிதாகக் கருதுவது போல் தெரிகிறது. அதைப்பற்றிய முழு உண்மையை உணராதும், அதற்குத் தேவையான அடிப்படை அறிவைப் பற்றிச் சிந்தியாதும், அவர்கள் அதைத் தம்மாலும் செய்து விட முடியும் என்று அளவிறந்து நினைப்பதாகவும் தெரிகிறது.

2. எனவே, அவர்கள் ஆங்காங்குள்ள தென்மொழியன்பர்களிடமும், பாவாணரை அறிவளவில் நன்கு அறியாதவர்களிடத்தும், அவ்வகர முதலி பற்றி அடிப்படை உணராத அதிகாரிகளிடத்தும், அதுபற்றி ஆழச் சிந்திக்காத அமைச்சர்களிடத்தும், 'தமக்கு அவ்வகரமுதலி செய்வதற்குப் போதிய தகுதியுண்டென்றும், பாவாணர் தம்மை அத்துறையில் பயிற்றுவித்திருக்கின்றார்' என்றும், இடைவிடாது பொய்யும் புளுகுமாகக் கூறி அவர்களை நம்பவைக்க முயற்சி செய்வதாகவும் கேள்வியுறுகின்றோம்.

3. வெறும் வருவாய்க்காகவும், பதவிக்காகவும், ஓர் அரிய வேலையைத் தாம் மேற்கொண்டதாகக் கூறப் பெறும் பெருமைக்காகவும், இப்படிப் பொய்யாகப் பேசியும் எழுதியும் வருவது, பாவாணரையும் அவர் அறிவாண்மையையும் நன்கு விளங்கிக் கொள்ளாததும், அவர்க்கே இரண்டகம் செய்வதும் ஆகும்.

4. சிறந்த மொழிநூலாசிரியராகிய பாவாணர்க்கே இஃதோர் அரிய பணியென்பதை அனைவரும் முதற்கண் உணர்தல் வேண்டும். ஐந்தாண்டுகளில் நூல் முழுவதையும் முடிப்பதாகத் தொடக்கத்தில் கூறிய அவர், தென்மொழித் திட்ட மூன்றாண்டும், அரசுத் திட்ட ஏழாண்டும் அடங்கிய பத்தாண்டுக் காலத்திலும், நூலின் பத்திதான் பதில் ஒரு பங்கினையே செய்ய முடிந்தது என்பதை அன்பர்களும் அறிஞர்களும் அதிகாரிகளும், அரசும் நன்றாக எண்ணிப் பார்த்தல் வேண்டும். 'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி, இடைக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

யாவர்? காலக் காய்ச்சலில் இற்று விழும் எம் நம்புப் பூட்டுக்குக் கட்டவிழா வல்லமையைத் தருபவர் யார்? அவரை எம் உயிர் தேம்பி அருகு அழைக்கிறது! இறைவா, இத் தேய்ந்து போன தொன்மைத் தமிழ்க்கும், தமிழர்க்கும் தொண்டு செய்ய, இன்னும் இரு நூறுயிரம் பிறவியில் என்னைச் சிக்கவை! இவர்களை ஈடேற்றும் வரையில், எம் மூலப்பேரொளியே, உன் அருகில் வந்து, நின்னடி சேர யாம் விரும்ப வில்லை! எம் உயிர் அங்காப்பை ஊக்குவித்து, உறுதுணை நிற்பாயா? ..... நிற்பாய்! உறுதியின் நீ, நிற்பாய்!

— பெருஞ்சித்திரன்

www.thamizham.net - Free E book No 7507

கண் முரிந்தார் பலர்' என்னும் வாய்மையுரை, பாவாணர் வாழ்விலும் மெய்யாகி நிற்கையில், மொழிநூலாய்வில் ஒரு முழந்தானும் நீந்தத் தெரியாத இவர்கள், முழுக்கடலும் வெறுங்கையாலேயே நீந்திக் கடப்போம் என்பது பேதைத் தனமானதும், பிள்ளைத் தனமானதும் ஆகும்.

5. இந்நிலையில் பாவாணர், தென்மொழி அகரமுதலித்திட்ட ஒப்புத லறிக்கையில் (தென்மொழி சுவடி 8 : ஓலை 8, 9.) கூறிய கருத்துரைகளை அன்பர்கள் நினைவு கூர்தல் வேண்டும். அதில் அவர் இச் சொற்பிறப்பியல் அகரமுதலி செய்வதற்குரிய தகுதிபற்றிக் குறிப்பிடுகையில்,

5-1. "மொழியாராய்ச்சியில் ஆழ மூழ்கித் தமிழின் அடிநிலை கண்டு, தமிழே திரவிடத்திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமும் என்னும் உண்மை யுணர்ந்ததனாலும், ... என் மொழியாராய்ச்சி நூல்கள் பல வெளிவர வாய்ப்பு நேர்ந்தமையாலும், **என்னையன்றி வேறெவரும் இவ்வாராய்ச்சி செய்யாமையாலும்**, இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாத பண்புகளெல்லாம் இறைவன் **என்பிறப்பிலேயே அமைத்து** விட்டமையாலும், ஆங்கிலப் பணியாற்ற விருந்த என்னை இறைவன் தமிழ்ப் பணிக்குத் தடுத்தாட் கொண்டதாகவே கருதுகின்றேன்—" என்றும்,

5-2. "நான் **எத்தனையோ நூல்கள்** எழுதினும், என் அரைநூற்றுண்டாராய்ச்சியின் **தலைசிறந்த பயன்**, தமிழ்ப் பகைவர் தொகுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியைத் திருத்துவதும், **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியொன்று தொகுப்பதுமே**" — என்றும்,

5-3. "தமிழ் எதிர்காலத்தில் வாழவும் வளரவும் **இன்றியமையாத பணி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பேயாதலாலும், இதை என்னையன்றி வேறெவரும் செய்யவியலாதாகையாலும், ...**" — என்றும் குறித்திருக்கும் கருத்துகளை அன்பர்கள் நன்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

5-4. இவற்றுள் தெளிவாகத் தெரியவரும் பாவாணர் முடிபுகள் மூன்று. அவை,

5-5 ஒன்று, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியே தமிழை வாழவும் வளரவும் வைக்கும் என்பது ;

5-6. இரண்டு, அவர் **ஒருவரே** அதைச் செய்து முடிக்குமாறு தகுதி பெற்றுள்ளார் என்பது ;

5-7. மூன்று, அவர் எத்தனையோ நூல்கள் எழுதினும், இவ்வகரமுதலியே தலைசிறந்த பயன் தருவது என்பது.

6. மொழியாராய்ச்சி நிலையில், தாம் இதுவரை எழுதிய (ஏறத்தாழ முப்பது) நூல்களாலேயே முழுப்பயன் இல்லை என்று பாவாணரே,

(தொடர்ச்சி 81-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7507

பாவாணர் மறைவால்
அன்பு நெஞ்சங்கள் வடித்த
அரத்தக் கண்ணீர்

www.thamizham.net - Free E book No 7507

தேவநேய மும்மணி

தென்மொழி மறை. நித்தலின்பன்

பாவா ணரையில்லர்ல் போம்வா ணருள் போய், நாம்
'ஓவா நெடுந்தமிழை ஓம்புவார்—ஆவா!'
எனப்போற்றி ஒப்புதற்கே, எங்கோ, எவரை
இனந்தேறிக் காண்போம் இனி?

மழைமுதிர்ந்த கருமுகிலோ?
    மொழிமுதிர்ந்த நிறைபுலமோ?
பிழைமுதிர்ந்த தமிழினந்தான்
    இழையிழையாய்ப் பிணைதலுற;
கழைமுதிர்ந்த கனவலிமை
    தழைந்திடவே குடிபுரிந்த
விழைகலைநூல் மொழித்தேவின்
    விழியுரைதாம் நெறிநமக்கே!

பார்புகழ் இனமே! பார்புகழ் இனமே!
பேர்புகழ் மாந்த வேர்முதல் இனமே!
ஆர்கலி உலகிடை நேர்ந்தெழும் மொழிக்கெலாம்
மூண்டுவந் தெய்திய முதற்றாய் மொழி, தமிழ்!
ஈண்டுவந்(து) அவட்கெதை இணையென் றுரைப்பீர்?
ஊனுயிர் அனைத்துமெம் வானுயர் தமிழே!
ஒப்பரும் அத்தமிழ் செப்பரும் வளமுற,
தாய்மொழிப் பணியே தலைமைசேர் அறமெனத்
தளரா துளுற்றுவம் தமிழரீர் வம்மின்!
ஆடவர், பெண்டீர், ஆர்த்தெழும் இளைஞீர்!
மங்காத் தமிழின் **மறைமலை** யடியுறை
எங்கோப் புலவன் **பாவா** ணன் நெறி
ஈட்டுவம் மாதோ தேட்டமிகு செல்வம்;
ஈங்குறும் புரட்சிக்(கு) ஆங்கதே விதைமுதல்!
இன்னரும் நாட்டீர் இசைந்து வம்மினோ,
துன்னருங் கேடெலாம் தொலையவே சென்றெனன்!

பாவாணர் இரங்கற்பா

தென்மொழி—த. அன்பழகன்

1. முட்டாத பேரறிவுப் பாவாண மூதறிஞீர்!
எட்டாத வானுலகம் ஏன்புகுந்தீர்?—கிட்டாத
'செந்தமிழ்ச் சொற்பிறப்'[1] பார்தொகுப்பார் செங்கதிரோ?
வெந்தமிழ விட்டீரே நீர்.

2. ஆண்டாண்டுக் காலமாய் அல்லும் பகல்நினைந்து
தோண்டாத சொற்புதையல் தோண்டிநின்றீர்
—தோண்டியதைக்
காண்பீரென் றெல்லார்க்குங் காட்டாது சட்டென்று
மாண்டீரே எம்மை மறந்து.

3. மும்மொழியில் மொய்த்த [2]மறையடிகள் தாமுவந்து
செம்மொழியால் பாராட்டிச் சென்றனரே-அம்மொழிதான்
மெய்யென் றறிந்து வியந்தோம் திடுமெனலே
ஐயா அடைந்தீரே ஆங்கு.

4. கீழைக் கலைத்தேர்வும் 'பண்டித'மும் கிட்டியதால்
பேழைப் பெரும்பொன்னாய்ப் பீற்றுழல்—வாழைக்
குலை குலையாய்ச் சொல்லாய்ந்த கொண்டலே எம்மை
நிலைகுலையச் செய்தீரே நின்று

5. [3]'எருத்தந் துறைக்கழக' ஆசானா ஒண்ணிக்
கருத்தங்க ஆங்கிலம் கற்றிருந்தீர்—திருத்தந்த
தெய்வத் தமிழ்வியந்து சீராட்டிப் போற்றிய நீர்
கையற்று நிற்க வைத்தீர் காய்ந்து.

6. பல்லாண்டு பைந்தமிழை மாணவர்க்கும் கற்பித்துச்
சொல்லாண்ட வேந்தாய்ச் சுடர்விட்டீர்—செல்லாண்டு
மாய்ந்துவிட்ட சொல்லும் மணத்துன்னிக் காட்டியின்று
ஓய்ந்துவிட்டீர் ஐயா உடன்.

7. மானம் மதித்ததால் 'அண்ணா மலைக்கழகம்'[4]
ஆன முடியா தகன்றீரே—வானம்
புகழ்முட்ட வாழ்ந்தீர் புலம்பலுற வைத்தீர்
அகமுட்ட யாமும் அழுது.

8. 'தமிழ்வரலா' [5]'ஒப்பியனூல்' [6]சுட்டுவிளக் கந்தான்
'தமிழர் வரலாறு'ம் தந்தீர்—'தமிழமதம்'
'மண்ணில்விண்' காட்டி மறைந்திட்டீர் நும்மிழப்பு
கண்ணில்மண் போட்டளந்த கை.

9. உன்னி மொழியியலில் ஓரா யிரம்படைத்தும்
'இன்னிசைக் கோவை'யும் ஈந்தீரே-பன்னி
இசைப்பாடல் பாடும் இனியவரே இன்று
கசப்பாடச் செய்தீர் கறுத்து.

---

1. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி
2. மறைமலையடிகள்
3. ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம்
4. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
5. ஒப்பியன் மொழி நூல்
6. உகரச்சுட்டு விளக்கம்.

www.thamizham.net - Free E book No 7507

10 மணிவிழாக் கொண்டாடி ஞர்மதுரை மன்றில்;
அணிதிரளப் பாராட் டளித்தார்-பணமுடிப்பை
விட்டிருந்து பெற்றீர் விடியா இரவாக்கி
நாட்டிருந்து சென்றீர் நலிந்து.

11. தணியாத பற்றிருக்கும் தண்டமிழர் தம்மை
அணியாக வேதிரட்ட ஐயா — துணிவோடு
உலகத் தமிழ்க்கழகம் ஒன்றாக்கி யின்றே
விலகித் தனிப்போனீர் விட்டு.

12. நல்லமா ணாக்கரென நாவாரப் போற்றுபாச்
செல்வராம் தென்மொழிச் ‘சித்திரனார்’—சொல்லால்
[7]அகரமுத லித்திட்டம் ஆக்கியின்றே யாதும்
பகரமுடி யாதோய்ந்தீர் பாடு.

13. தாய்த்தொல் தமிழ்மொழிச் சொற்பிறப் பானவகை
வேர்ச்சொல் கிளைத்தவகை விண்டிடவே-மூத்த
‘[8]இய:க்குநர்’ ஆனீர் [9]அருட்செல்வர் ஏந்தால்
கலக்கினீர் கண்ணீர் விட.

14. பேரனே பாட்டனைப் பெற்றான் எனக்கதைத்த
ஆரியப் புன்கருத் தாய்ந்தழித்தீர் — சீரிய
பைந்தமிழ்ப்பா வாணராய் வாழ்ந்திருந்து பட்டென்று
நைந்தழத்தான் விட்டீரே நன்கு.

15. செந்தமிழே ஆரியத்தின் மூலம் திரவிடத்தின்
முந்துதாய் என்றே முழங்கிநின்றீர் — செந்தமிழர்
முன்பிறந்தார் தென்குமரிக் கண்டமென்றீர் முற்றாற்றும்
முன் பிறந்தீர் ‘[10]மாநாடு’ வந்து.

16. அன்பரோ ஆன்ற புலவரோ தாம் நிகழ்த்தும்
இன்பவிழா எதுக்கும் இட்டழைத்தால்-வெண்பாவால்
வாழ்த்தனுப்பி வைப்பீரே வாகான சொல்லடைவால்
மாய்த்தனனே காலன் மறைந்து.

17. வேர்க்கடலே ஆர்வமுடன் மெல்லும் குழந்தையுமைப்
பார்க்கமுடி யாது பரிதவிக்ககோ?-பார்க்கப்
பளபளக்கும் கார்மேனிப் பாவாணச் சான்றீர்
தளுதளுக்க வைத்தீர் தனி.

---

7. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலித்திட்டம்
8. தமிழ் நாட்டரசின் செ. சொ. பி. அ. திட்ட இயக்குநர்
9. திரு. மு கருணாநிதி
10. ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு

www.thamizham.net - Free E book No 7507

18. குலுங்கச் சிரித்திருட் பீர் கூட்டாளி யோடே
அலுங்க நடப்பீரண் ணுந்தே-விலங்காமல்
ஊனுடம்பு போற்றி ஒழுகினீ ரானாலும்
வானுடம்பு வாய்த்ததோ வந்து?

19. பின்தூங்கி முன்னெழூஉம் பேதையை யானுணர்ந்தால்
என்தூங்கும் கண்கள் எமக்கென்றீர் 'ஆய்ச்சியை'[11];
முன்தூங்கப் போனீர் முழுக்காலம் செந்தமிழ்க்காப்
பின்தூங்கா நின்றீர் பிரிந்து.

20. ஆர்வநே யர்க்கும்மற் றல்லார்க்கும் பிள்ளையைப்போல்
தேவநே யர்நீர் திகழ்ந்திருந்தீர்-தேவனே
உம்பாடு கண்டுமுழு ஒய்வு தரல்வேண்டித்
தம்பால இணைத்தானோ தான்.

இரங்கற்பா

புலவர். பசும் பொற்கிழார், அருப்புக்கோட்டை.

தேவ நேயப் பாவின் ஐயா!
ஒப்பனை உடலெனும் சட்டையைக் கழற்றி
ஒய்வுற நினைத்தே, உயர்தமிழ் வருந்த
மறைதல் நன்றோ! மறத்தமிழ் அரிமா!
குறைநாள் வாழ்தல் குறையே யன்றோ!
எத்தனை எண்பது அகவை வாழ்ந்திட
வேண்டிய தாங்கள் விரையல் நன்றோ!
மாபெரும் பாட்டன் மீனாட்சி சுந்தரன்
மறைமலை மற்றும் திரு.வி.க. போன்றவர்
சென்றதன் பின்னர், அவர்கள் விட்ட
குறைதனை நிறைக்க நிறைகுட மாகத்
தோன்றித் தமிழ்த்தாய் தனித்தே இயங்கத்
தொடர்ந்து செய்த தொண்டினைத் தமிழகம்
எப்படி மறக்கும்? இப்படி மறைவதா?
ஊனும் உயிரும் உதிரமும் நரம்பும்
பேணும் உடலும் பெரிதும் கிளர்ச்சியில்
துளிர்த்திடத் தனித்தமிழ் ஊட்டிய நூல்கள்
உன்புகழ் என்றும் நிலைத்திடப் பாடும்!
எனினும் இன்னும் இருந்துநீர் தமிழகம்
தனித்தமிழ் ஆட்சியில் தளிர்த்திடச் செயுமுன்
சென்றது ஒன்றே மாபெரும் துயரம்!
கோப்பெருஞ் சோழன் கூடவே அடங்கிய

11. திருவாட்டி தேவநேயர்

www.thamizham.net - Free E book No 7507

பிசிராந் தைப்போல என்பேரன் றவரும்
பிரியினும் நன்றே! ஆயினும் தங்கள்
ஆற்றிய தொண்டின் ஆணிவேர் அனைய
பாவலர் ஏறு பெருஞ்சித் திரரும்
இருப்பதால் இருக்கிறோம்! விட்டதை முடிக்க
தென்மொழித் தலைவ! இன்மொழிப் புலவ!
என்மொழி கூறி என்துயர் இயம்ப?
உன்போல் பனுவலால் உரைக்க இயலேன்
பெருஞ்சித் திரர்போல் பாப்புனை வோனலன்
இடிஒலி பாய்ந்த அரவுபோல் குன்றி
எண்ணித் துவண்டே ஏன்றன் இரங்கலை
தென்மொழி வழியே தெரிவித் தயர்ந்தேன்!
உங்கள் ஆவி அமைதி யடைய
உயர்திரு அறிவன் ஆற்றலைப் பணிவேன்
என்றும் உங்களை நினைடபோம்! தூய
இன்றமிழ்த் தொண்டைத் தொடர்ந்து தங்கள்
ஏக்கத்தை நிறைத்து வைப்பதே
எங்கள் நன்றியைச் செய்தலென் றகவே!

எப்படித்தான் தாங்கிடுவோம்! என்செய்வோம் யாம்!

— பாவலர் கொ. செ. சின்னப்பனார், கொம்மக்கோவில்

உலகினிலே மூத்ததமிழ்த் தாயிழந்த பெருமையெலாம்
உரமிக்க சான்றுகளால் எடுத்துக் காட்டி
நிலமிதிலே வாழுகிற பலமொழிக்கும் தாய்தமிழ்தான்
என்று நிலை நாட்ட வந்த தேவ நேயா!
அலகில்லாப் பெருஞ்சிறப்பைத் தமிழன்னைக் களித்திடவே
நீ கொண்ட அரியபணி முடிப்பதற்குள்
இலகுபுகழ் மொழியியலின் மூதறிஞா! மறைந்தனையே!
எம்மையெலாம் துயர்க்கடலில் ஆழ்த்தி யந்தோ!

ஆரியந்தான் மூத்தமொழி சிறந்தமொழி தேவமொழி
அதன்குழந்தை தமிழென்றே அறைந்து வந்த
பூரியரின் வாயடங்கச் செய்தவனே! மொழிக்கடலே!
பெரியோனே! தமிழ்மொழியை மூடி வந்த
காரிருளை அடியோடு போக்கவந்த கதிரவனே
கவினுலகில் நீவிட்ட பணிமுடிக்க
யாருண்டு! யாருண்டு! மறைந்தனையே! எமைவிட்டே!
அந்தந்தோ! என்செய்வோம்! என்செய்வோமே!

www.thamizham.net - Free E book No 7507

தமிழ்த்தாயின் கண்களிலே நீராறு பெருக்கெடுக்கத்
தமிழினத்தின் நெஞ்சு துயர்த் தீயால் வேக
தமிழ்கடல்சூழ் இத்தரையில் இருக்கின்ற மொழியறிஞர்
எல்லவரின் நெஞ்சங்கள் பதைபதைக்க
உமதன்பு மக்களெல்லாம் துயர்தாங்க மாட்டாமல்
ஓவென்று கதறியழ உலகை விட்டே
எமதருமைப் பாவாணு! மறைந்தனையே உன்மறைவை
எப்படித்தான் தாங்கிடுவோம்! என்செய் வோமே!

இயற்கையே! இயற்கையே!

பாவலர் கன்னல். க. மு; கரூர்.

வெய்ய கொடுமைகளின் விளைவிடமே! வெந்துயரே!
நையும் தமிழர்களின் நாடுனக்கு இனிக்கிறதா?
காயா விழிக்குளங்கள் கண்காட்சி யாயிருக்கும்
ஓயா தமிழ்நிலத்தை உருவாக்க நினைந்தனையா?
ஆயும் தமிழ்மலையை அழிப்பதிலா உனக்கின்பம்?
நீயும் எம்பகையா? நெஞ்சை முறித்தனையே!
பாயும் வேங்கையினைப் பாழ்படுத்தி வீழ்த்தினையே!
காயும் வறுமையினைக் கனிதமிழுக் காக்கினியே!
பாவாணர் எனஅழைத்தால் பைந்தமிழே தான்தழைக்கும்!
சாவாமை வேண்டுமெனச் சளிக்காமல் வேண்டினமே.
நாமணக்கும் செந்தமிழை நாமென்று தான்கேட்போம்?
பாமணக்கும் சொல்லாற்றல் பைந்தமிழுக் காகாதோ?
நொந்த தமிழர்க்கு நோய்க்குமேல் நோய்தாறு?
வெந்து மடிய வைக்கும் வினைதுயர்கள் செய்வதுமேன்?
மாருக் கொடும் பகையை மாய்க்கும் சீயமெங்கே?
ஆருத புண்ணுக்கி அழித்தனையே தாய்தமிழை!
பாவாணர் அழிந்தால்தான் பைந்தமிழும் அழியுமென
நீயும் நினைத்தாயா நினைவைக் கெடுத்தாயா!
வந்த பகைவர்க்கு வழித்துணையாய் நீவந்து
தந்த பரிசிதுவா? தமிழ்மகனின் பேரழிவா?
நெஞ்சு துடிக்குதம்மா! நினைவெல்லாம் நடுங்குதம்மா!
அஞ்சும் தமிழ்ப்பகைதான் ஆற்றலுடன் வளர்ந்திடுமோ?
ஐயோ என்செய்வோம் அழகுதமிழ் காப்பவர் யார்?
உய்யும் வழியிலையே! ஒண்தமிழுக் கேதுதுணை?
எங்கள் தமிழுக்கே ஏற்றம்தரும் மாமலையை,
எங்கள் நெஞ்சத்தில் இன்னிசைக்கும் தேன விருந்தை,
முந்தைத் தமிழுணர்வை முடுக்கிவிடும் பெரும்புயலை
எங்கே கொண்டுசென்ருய்? எங்களையேன் வாட்டுகின்ருய்?
செந்தமிழன் இருவிழியைச் சேர்ந்து பிடுங்கியதால்
தந்த பரிசென்ன? தாய்தாறு! நீ எல்லாம்?

பாவாணர் புகழ் வளர்ப்போம்

— புலவர். தில்லையாடி. மு. தாமசுதமிழ்ச்செல்வன்

இனநலத்தைக் காப்பதற்கு முயன்றுழைத்த
ஏந்தல்நம் பெரியாரைப் போன்று; தூய
மனத்தினராய்த் தமிழ்மொழியின் நலத்தைக் காக்க
மொழிப்புலவர் பாவாணர் தோன்றி; நன்கு
தனித்தமிழில் உரையாற்றி எழுதிக் காட்டித்
தலைசிறந்த பணிமுடித்துக் கல்லறைக்குள்
தனித்துறங்க சென்றுவிட்ட நிலைமை யெண்ணி
தவிக்கின்றோம் துயரால வாடு கின்றோம்.

ஆரியத்தால் தமிழ்மொழிக்கு வந்த கேட்டை
ஆராய்ந்தே அணுஅணுவாய் உள்ளம் நொந்து
கூரியதம் அறிவாலே ஆய்ந்து வெல்லும்
கோட்பாட்டில் நூலெழுதி முனைப்பாய் நின்றே
ஆரியத்தின் தீமைதனை நீக்கி யென்றும்
அருந்தமிழ்க்கே தொண்டாற்றித் தனித்த மிழ்க்கோர்
பேரியக்கப் பெரும்படையை நடத்திச் சென்ற
பெருந்தகைநம் பாவாணர் மறைந்தார் அந்தோ!

உலகமொழி அனைத்திற்கும் தாயாய் நின்றே
உலகாண்ட முதன்மொழியாம் தமிழை இன்று
புலனறிவு சிறிதுமில்லா வடவர் கூட்டம்
புறக்கணித்து வடமொழியில் கிளைத்தெ ழுந்த
பலமொழியில் தமிழுமொன்றே எனவு ரைத்துப்
பகடிசெய்யும் நிலைபெண்ணிக் கொதித்தெ ழுந்தே
பலர்மருள மாநாட்டில் தூளு ரைத்த
பழகுதமிழ்ப் பாவாணர் மறைந்தார் அந்தோ!

மொழிவெறியால் திமிர்பிடித்த வடவர் கூட்டம்
மறைகெடவே வழிவகுத்துத் தமிழ்மொ ழிக்குப்
பழிவரவே பக்குவமாய் இந்தி தன்னைப்
பரப்புகின்ற நிலையோர்ந்தே அரிமா போன்று
விழிசிவக்கக் கொதித்தெழுந்து தமிழர் தம்மை
விழிப்படைவீர்! எனவுணர்த்தி இந்தி தன்னைக்
குழிபறித்தே அதிற்கிடத்த வழிவ குத்த
கூர்த்தமதிப் பாவாணர் பிரிந்தார் அன்றே!

தமிழாய்ந்த மறைமலைக்குப் பின்னர் இந்தத்
தமிழகத்தில் இலக்கணத்தை இலக்கி யத்தைத்
தமிழர்தம் வரலாற்றை ஆய்ந்து, தூய
தனித்தமிழில் சான்றுடனே நிறுவிக் காட்டித்

www.thamizham.net - Free E book No 7507

" தமிழர்தம் பிறப்பகமே குமரிக் கண்டம்
தனித்தமிழும் அங்கேதான் முகிழ்த்த தென்று"
தமிழாய்வு செய்தமொழி ஞாயி றுன
தேவநேயப் பாவாணர் பிரிந்தார் அந்தோ !

பகுத்தறிவுப் பகலவனும் பெரியார் தோன்றிப்
பார்ப்பனர்தம் மடமையெனும் இருளை நீக்கித்
தகுதியுடன் தமிழரெலாம் ஏற்றங் கொண்டு
தமிழ்நாட்டில் தலையெடுக்கச் செய்த தேபோல்
மிகுதிறமை யுடன்நாளும் முயன்று ழைத்து
மொழியுணர்வைத் தமிழர்க்கே ஊட்டி நின்ற
தகுபுலமைப் பாவாணர் நூல்க ளாய்ந்து
தனித்தமிழை வளர்த்தவர்தம் புகழ்வ ளர்ப்போம்!

தமிழ்த்தாய் அழுங்கல் !

1. பாண்டியனார் தம்மகளாய் நான்வ ளர்ந்தேன் ;
பாரகத்துப் பெண்டிரிலே நானு யர்ந்தேன் ,
வேண்டியாங்கு வெளிநாட்டார் ஆய்வு கொண்டார் ;
வெற்றுச்சொல் லொருமைப்பா டென்ற பேரில்
கூண்டினிலே அடைபட்டேன் ; அடிமை யானேன் ;
கொடுமைதான் எனினும்நான் இன்று கேட்ட
'மாண்டுவிட்டான் மூத்தமகன் தேவ நேயன்'
என்றகொடுஞ் சொல்லைவிடக் கொடுமை யாமோ ?

2. தக்கசில புதல்வர்கள் மாய்ந்த பின்னும்
தரையினிலே உன்நினைவாய் நானி ருந்தேன் ;
மிக்கபுகழ் தேவநேயா ! மிளிரும் உன்றன்
மேன்மைகண் டாற்றாத கால னுன்னைச்
சிக்கெனவே பாசத்தால் சேர்த்துக் கொண்டான்.
சிறப்புடனே எனக்கினியார் தொண்டு செய்வார் ?
முக்கனியே ! கற்பகமே! உன்றன் தொண்டு
முழுமைபெறு முன்பேநீ மாய்ந்த தேனோ ?

— புலவர் சு. நக்கீரதாசன். க. மு. கள்ளிப்பட்டி.

அவர் தமிழ்ப்பல்கலைக் கழகம்!

உண்மைத் தமிழுக்(கு) உழைத்த செம்மல் !
எண்வகைத் தமிழ்ச்சிறப் பியம்பிய ஏந்தல் !
மறைமலை யடிகளின் மாண்புயர் மாணவர்,
கறையிலாத் தமிழைக் காத்திடுங் காவலர் ;
தனித்தமிழ் உயிரெனத் தளரா துழைத்தவர் ;
இனித்திடுந் தூய்மைப் பேச்சினர் ; எங்கள்

www.thamizham.net - Free E book No 7507

அன்பிலும் அறிவிலும் அணுவாய்க் கலந்தவர்
துன்பினிற் றுவளார்; தூய்தமிழ் வளர்த்தார்!
யார்தமிழ் பழிப்பினும் அஞ்சா தயந்தே
வேர்ச்சொல் காட்டி விளங்கிட வைத்தவர்!
அவர்தமிழ்ப் பல்கலைக் கழகம் செந்தமிழ்க்(கு)!
அவர்ஓர் அணிசெயும் நுண்வினை ஓவியம்!
இன்னும் நாலிரண் டாண்டுகள் இருப்பேன்,
என்றுபா வாணர் மண்புதைந் தாரே!

— க. தமிழமல்லன்
செயலர். தனித்தமிழ்க்கழகம் புதுச்சேரி - 9.

பாவாணே! நெஞ்சம் வேகுதையா நினைந்து!

நற்றமிழ்தான் நாளும் நிலைஉயரக் கொள்கைதந்து
சொற்றமிழின் செம்மைதனைக் கண்டறிந்து-வெற்றிபெற்ற
அஞ்சா அரிமாவே சென்றாயோ? வேகுதையா
நெஞ்சந்தான் உன்னை நினைந்து!

அகர முதலிகொண்டாய் அன்னை மொழிக்கே!
மிகுபுகழும் மேன்மையும் சேர்த்தாய்—நிகரற்ற
உன்னின் உயர்தமிழ் ஆற்றலை எண்ணிடுல்
என்னுள்ளம் ஏங்குதே இன்று.

மறைமலையின் மாணவரே! மறைவாகத் தமிழ்மொழியின்
குன்றகண்ட கொடியோர்தம் குறைகளைந்து தென்றமிழின்
இன்றயொளியை எல்லோரும் அறிந்திடவே நீஉழைத்தாய்
நிறைவுணர் நெஞ்சத்தில் நீஉறைந்தாய் வாழியவே!

எண்ணற்ற நூலறிந்தாய் இலக்கியத்தை இலக்கணத்தைக்
கண்மணிபோல் கருத்துகள் தந்துகன்னித் தமிழ்த்தாயை
மண்ணிலெங்கும் மங்காத புகழ்பெறவே உழைத்திட்டாய்
விண்ணொளியாம் விரிகதிர்போல் விளங்குவையே தமிழ்நெஞ்சில்!

புலவர். மு. சு. தங்கவேலன். க. மு. வாணியம்பாடி.

தமிழ்ச் சீயம் படுத்த தந்தோ!

ஆயபல கலைகளையும் நன்குணர்ந்தே பன்மொழியும் அறிந்த தேவ
நேயனெனும் செங்கதிரோன் பண்புநிறை தமிழார்ந்த
நெஞ்சந் தன்னில்
தூயதொரு முழுமதியம் தமிழினத்தின் இருள்களைந்து
தொன்மை காத்த
தாயகத்தின் மணிவிளக்கு தன்னிகரில் தனிச்சுடர்தான்
அணைந்த தந்தோ! 1.

www.thamizham.net - Free E book No 7507

2. தமிழ்மொழியே உயிராகப் பேச்சாக மூச்சாகத்
தன்னே ரில்லாத்
தமிழ்மொழியே உலகினுக்கு முதன்மொழியாய்த்
தழைத்ததெனச் சாற்றி எங்கள்
தமிழினமே மாந்தருக்குள் முதலினமாம் எனத்துருவி
தரையே போற்றத்
தமிழினத்தின் பெருமைதனைப் போற்றிவந்த மேருமலை
சரிந்த தந்தோ!

3. நாவாலே தமிழ்க்கொலைசெய் வஞ்சகரைப் பாய்ந்தவரை
நடுங்கச் செய்தே
மூவாத தமிழ்மொழியின் வேரதனை அகழ்ந்தெடுத்து
முரசு கொட்டி
ஓவாமல் தமிழ்மொழிக்கே உயிரூட்டி இரவுபகல்
உழைத்தின் றேய்ந்தே
பாவாணர் எனும்சீயம் முழக்கமின்றிப் பேழைதனில்
படுத்த தந்தோ!

4. துயருற்றோம் துவண்டுட மூதோம் துளும்பிவழி கண்ணீரால்
துடிக்கும் நெஞ்சம்
அயர்வுற்றோம் அவர்வகுத்த தமிழ்க்குடும்பம்
தமிழ்ப்படைகள் அனைத்தும் சேர்ந்தே
உயர்வுற்ற தமிழ்காக்க பாவாணர் வழிதொடர்வார்
உண்டோ அன்னார்
பெயர்மெத்தத் தழைத்திட நாம் அனைவருமே தமிழகத்தைப்
பேணுவோமே!

பதின்கவனகர் **திருக்குறள். பெ. இராமையா, கோவில்பட்டி.**

பாவாணர் பத்து

பாவலர். முல்லைவாணன், சிங்கை.

ஆரியத்தை அடிதுமித்தும் அருந்தமிழ்க்கு முடிபுனைந்தும்
பூரியர்க்குப் புலிநிகர்த்தும் பொய்யுரைக்கு மிடிநிறைத்தும்
நேரியலில் பேரறிவில் நெடுஞ்சுடர்க்கும் மேலான
சீரியலே - பாவாணச் செழுந்தமிழே, மறைந்தனையோ!
கூரறிவால் பகைமுறித்த கோளரியே - நின்சுவடாய்
ஆருள்ளார் ஐயாவே எங்களினைக் காப்பதற்கே?

உலகமுதற் செம்மொழியாய் உயிர்த்தமிழை ஓங்குவித்த
நிலவுலகப் பல்கலையே! நிழலாலும் பகைகலங்க
உலவிவந்த பெருந்தவமே! ஓங்குபுகழ் தனித்தமிழே

www.thamizham.net - Free E book No 7507

சிலகாலம் நீயிருந்து செயல்முடிக்கக் கூடாவோ ?
பலகாலம் தமிழழிந்த பாதைக்கு வேட்டாறும் !
உலகாளும் தமிழ்புரக்க ஒருவண்டோ, ஐயாவே !

பதவியெனும் கொடுவிலங்கைப் பனித்தமிழ்க்காய்
முறித்தெறிந்தும் ;
உதவியிலா நிலையினிலும் உவந்துதமிழ் முரசறைந்தும் ;
கதவுமிலாத் தமிழ்நிலத்தே களைவிதைத்தார் விழிதடுத்தும் ;
புதையலெனப் பலநூற்கள் பொறக்கிழியாய் எமக்களித்த
சுதைபொதிந்த தமிழ்க்கோட்டைச் சுடரே, நீ அணைந்தனையோ ?
விதையழிந்த இனமகாக்க வேறுயார் ஐயாவே !

முன்புதைந்த முத்தமிழை மீட்பதற்கே பிறப்பெடுத்து
மன்பதையில் முழுஅறிவாய் விளங்கியவாய் முடிற்றோ ?
என்புதைத்த உணர்வாக இலங்கிவிட்ட தமிழ்க்கடலே
அன்புதைத்த **தென்மொழியை** அயல்நிறுத்திச் சென்றனையே!
நலைபல தப்பில் தமிழ்உயர்ந்த நெடுங்கதையைத்
தொடர்வார்யார் ?
என்பதைப்பிற் கிலக்கான ஐயாவே, கூறுதியோ ?

உடல்முழுதும் இலக்கியமாய் உணர்வனைத்தும் இலக்கணமாய்க்
கடல்முழுதும் போன்றபிற கலைகளதன் இருப்பிடமாய்
அடலடணாயல் கண்துஞ்சா ஆராய்ச்சிப் பணிவிட்டே
உடல்மறைத்துக் கொண்டமை ஒதுக்கிவிட்ட ஐயாவே,
திடல்மறைக்கும் பெருதுன்பத் தீயிடையே புழுவானோம்
கெடல்செய்வார் தமிழுக்கு ! யார் கேட்பார் ஐயாவே !

அலைஒய்ந்து நின்றாலும் அசைகாற்றுச் சோர்ந்தாலும்
கலைமாய்ந்து போனாலும் கனித்தமிழின் உயர்வுக்கே
விலைதோய்ந்த நின்னெழுத்து வீறுகொண்ட கைமடக்கல்,
மலைதேய்ந்தாற் போலான மாத்தமிழைக் குன்றாக்கி
நிலைசேர்த்த நெடுநெஞ்சே நீகொண்ட தேனையா ?
உலைகாய்ந்த விறகிழுப்பார் - இடைகாப்பார் யாரையா ?

பன்மொழியின் வேர், தாரும் பகலவன்போல் பட்டொளிர்ந்து
தென்மொழியின் சீர், பேறும் துலங்கிடவே விளங்கியவா,
பொன்மொழிகள் கரைகடந்த பொதியைத்தமிழ் உவந்தேற்ற
நமொழியே ! நந்தமிழின் நலன்கேட்ட செவிமுடி
என்மொழியே தனிப்புலம்ப இசைந்ததென்கொல் ?
தமிழ்இறைவா,
நின்வழியே யாருளரே, நினைக்க வைப்பாய், ஐயாவே !

நீராட்டி விட்டகதை நினைப்பேனு? நின்உகிரைப்
போராடி நீக்கியதைப் பொய்ப்பேனு ? இடியப்பச்

www.thamizham.net - Free E book No 7507

சீராடி நின்றநிலை செரிப்பேறு? திருமுல்லை
ஊராடி இட்டலியை உவந்தநிலை உகுப்பேறு?
'யாரோடே குடிப்பெருமை' - என்றினித்த நெஞ்சத்தைப்
போராட விட்டீரே, புதுத்தமிழ்க்கு யாரையா?

'என்நலமும் இணைந்தாரின் இருநலமும்' - எண்ணுலகில்
தன்நலத்தைப் பாராது தமிழ்நலத்தை உயிர்தாங்கிச்
சொன்நலமும் பொருள்நலமும் சுடர்கின்ற உரைவிரித்துத்
தென்னர்நலம் பெரிதெண்ணிச் செயல்விளைத்த தனித்தேனே,
உன்நலத்தை எருவாக்கி ஒளிதமிழைக் காத்தாயே,
பன்நலன்கள் - மொழிகாத்துப் படைத்திடுமோ ஐயாவே!

நரையறிந்த கொடுமீசை; திரையறியாக் கூரறிவு;
உரையறிந்த நன்செவிகள்; ஊரறிந்த வல்லுடலம்;
நிறையறிந்த மனத்துணிவு; நிலையறிந்த செயலாக்கம்;
முறையறிந்த சொல்லாக்கம்; முனைகூர்ந்த செம்மாப்பு;
விரையறிந்த மலராக விணைசெறிந்த ஐயாவே,
கரையறிய மாட்டாமல் கதறுகிறோம் வாரீரோ?

நீ பறந்த தெங்கு?

தேவநேயப் பாவாண! தென்றமிழின் கண்ணிற்குக்
காவலராய் நின்றவுயர் கண்ணிமையே! - நாவலரும்
பாவலரும் நைந்துருகிப் பாடியுமைப் போற்றுகிறோம்!
ஆவலுடன் நீ பறந்த தெங்கு?

— பாவலர் - தத்தனூர் - தமிழ்மணி - க. மு.

உயிர்ப்பை இழந்தோம்

குமரிநிலப் பெரும்பரப்பில் கொழுந்தாகிச்
செழித்துயர்ந்த குளிர்கொள் தமிழை
நமக்குதவி, அதன்வளத்தை நற்சிறப்பை
மீட்டிங்கு நலங்கூர் தமிழாய்
அமரிட்டுப் பெரும்பகையை அலறவைத்தே,
அகரமுதல் அத்தனையும் ஈந்த
எமதுயிர்ப்பாம் பாவாண ஏந்தலினை
மொழிவேந்தை இழந்தோம் அந்தோ!

— புலவர். பொன். முகிலன். கூகலூர்

இழவுரைப்பா

தமிழ்க்குத் துணையே எம்விழிக்கு இணையே
தமிழ்தான் மாந்தன் முதன்மொழி என்றோய்!
இமிழும் கடற்குள் மறைந்த குமரியை

www.thamizham.net - Free E book No 7507

இழுத்துக் கொணர்ந்து எமக்குக் காட்டிய
துஞ்சா தோயோ ! துஞ்சி ேனயே ! !

மொழியே தமிழர்க்கு விழியென் றுணர்த்தி
எழுச்சி கொள்ள ஏந்தி விட்டாய் !
தொல்லர் வள்ளுவர் கபிலர் பரணர்
சென்ற வழியை விளையா தெரிந்தனை !
இச்சிலைத் திங்களில் பெருஞ்சித் திரன்சொல்
நும்மைக் கண்டு செந்தமிழ்ச் சொற்பிறப்பு
வருவது என்றோ ? என்றோற்கு, ஈராண்டில்
வருமென்றே உரைத்தனை ! புரையோ உரையாய !
முகத்தைக் கவிழ்த்தேன் கையால் மூடினேன்
அழுகையா வந்தது ! விம்மல் ஏக்கம் ! !
ஒன்றும் உள்ளேன் உலர்ந்த தென்னுள்ளம்
தேவநேய ! ஆஅஅ ! ஓஓஓ ! ! ஐயவோ ஓ ! !
கற்று பிரிந்தது ! கன்று . . . ?
என்னும் ! அம்மா அ ! தமிழ்த்தாயே ! !

புலவர். ச. சிவசங்கு,
தலைவர். கொற்கைத் தமிழ் மன்றம்,
ஏரல், நெல்லை.

தமிழுக்குப் பேரிழப்புத்தான் !

(இரட்டைப் பாவலர்கள் : ஈவப்ப இளவல், ஈரோடு)

1. முன்னை முதன்மொழியே ! மூவா இளங்கன்னி
அன்னைத் தமிழே ! அறிவார்ந்த - என்தாயே !
தன்னை யுணக்கீந்த சான்றோனை யாமிழந்தோம்
என்றுகாண் போமோ இனி !

2. பாரின் மொழிக்கெல்லாம் மைந்தமிழே மூலமென்று
வேரின் அடியாழம் விண்டுரைத்த - சீரியனைக்
காலன் கவர்ந்தானே ! கண்ணைப் பறித்தானே !
கோலம் அலங்கோலம் கொண்டு.

3. கொஞ்சு தமிழ்மொழியின் கோமானை எம்மொழியில்
நஞ்சு கலந்தவரை நன்காய்ந்து - வஞ்சகரை
வீழ்த்தி அறிவாலே வென்றோனும் ஓய்வெடுத்தே
ஆழ்ந்தான் உறக்கத்தில் ஆங்கு.

4. செந்தமிழ்ச் சொற்பிறப்பைத் தேறிஅக ரம்முதலி
தந்தோனை யாமிழந்தோம் தக்கோனை ! - அந்தவினை
முற்றும் பெறுமுனே மூதறிஞன் மாண்டானே !
எற்றைக்குத் தேறுவோம் இங்கு !

www.thamizham.net - Free E book No 7507

5\. அய்யோ தமிழ்த்தாயே! ஆய்ந்து பலநூல்கள்
மெய்யுரைத் துன்னை மிளிரவைத்துப் -- பொய்யாகிப்
போனாரே பாவாணர்! பொங்கியழச் செந்தமிழ்த்
தேனூறு வற்றியதே வாழ்ந்து!

6\. விம்மி யழுகின்றோம் மீண்டுவர மாட்டாரோ,
எம்மை யுயர்த்திவைத்த ஏந்தலுமே - அம்ம,ஓ!
மெய்யா இதுமெய்யா? மேலோனின் சாவுமே
பொய்யென் றிருக்காதோ போ!

7\. காலனே! நீயும் கவர்ந்ததேன் நாங்களுமே
ஓலமிடச் சான்றோனை ஓரவஞ்சம் -- கோலமில்லை
எம்மை அழைத்தேகி எந்தமிழ்க் கேஉழைத்தார்
தம்மைவிட்டி ருக்கலாகா தா?

8\. கற்றுவனே! நீயும் குறிவைத்துச் சாய்த்தாயோ
ஆற்றல் அறிஞனை! அந்தோ,ஓ! - தூற்றும்
உலகுன்னைச் சீர்மையிலா உன்செயலை நாளை
இலக்காவாய் நீயும் இதற்கு.

9\. மொழிபுரக்க ஈண்டு முகிழ்த்தரு யிற்றை
அழித்தாயே வீணே அட,எம - விழியைப்
பிடுங்கினையே! வெங்கொடுமை! பேயனே! இஃதே
அடுக்குமா சொல்வா யடா!

10\. தமிழர் வரலாற்றைத் தக்கபடி தந்து
நிமிரவைத் தான்இந் நிலத்தில் - தமிழா!
அமிழா உணர்வெழுந்தே ஆர்த்துவென் றோன் மாண்டான்
தமிழுக்குப் பேரிழப்புத் தான்!

ஏழ்கடலும் தணிக்கா என்துயர்

பாழ்களை நீக்கி யிங்கே
பைந்தமிழ் பயிர்வ ளர்த்த
ஆழ்கட லினைய பாவா
ணருமின்று மறைந்தா ரென்னும்
தாழ்வினைத் தமிழர் வாழ்வில்
தரும்செய்தி கேட்டே னம்மா!
ஏழ்கட லெழுந்தும் ஆமோ?
எரிதுயர் தணிக்க நெஞ்சில்!

திருவை அரசு, குடந்தை.

www.thamizham.net - Free E book No 7507

குமுறியழுது குலை வெடித்த நெஞ்சங்கள் !

மாமணிகளுள் ஒருதலைமணி

நம் தெய்வத் தமிழ்த்தாய் தன் மாமணிகள் போலும் மக்களில் ஒரு தலை மணியை இழந்துவிட்டாள். தமிழர்கள் தங்களின் மூத்த தமிழ்ப் பேரறிஞராகிய மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை இழந்து விட்டார்கள். அவருடைய ஆதன் அமைதியுறுவதாகுக.

— குன்றக்குடி அடிகளார்.

தமிழினமே உனக்கு விடுதலையே கிடையாதா ?

தமிழ் நலஞ் சான்ற ஐயா, வணக்கம். மதுரை அரசு மருத்துவமனையில் 10-1-81 அன்று பாவாணரைப் பார்த்த நான் ஒரு கிழமைக்குள் மீளாத்துயிலில் ஆழ்வாரென்று கனவிலும் கருதினேனில்லை. மொழிஞாயிறு மறைந்தது. இனி பாவாணரை என்று காண்போம் ? நெஞ்சு அலமருகின்றது. என் செய்வது ?

இது நிற்க ! திரு. பாவாணர் அவர்கள் அன்றைய ஆளுமையின் புறக்கணிப்பாலும் அன்றைய அரசிற்கு அடிவருடும் புலவர்களின் எதிர்ப்பாலும் எந்த ஒரு வேலையிலும், பள்ளியிலாகட்டும் கல்லூரியில் ஆகட்டும் நிலைக்காமல் தன்மானங் கருதித் தனித் தமிழைக் காக்க தன்னேரில்லாப் பொறுப்புடன் வெளிவந்து, கொள்கை உறுதியுடன் குடத்துக்குள் விளக்காக இருந்த பாவாணரைப் போகுமிடங்களிலெல்லாம் தாங்கள் தலையிலும் நெஞ்சிலும் தூக்கிச் சென்று, பாவாணரின் சிறப்பையும் பெருமையையும் சொல்லியும் எழுதியும் தென்மொழிக்குச் சிறப்பாசிரியராக அமர்த்தியும் தமிழுலகிற்கு, சுடருக்குத் தூண்டுகோலாக விளங்கிய தென்மொழியையும் தங்களையும் இந் நேரத்தில் நினைக்காமல் இருக்க முடிவதில்லை. ஐயாவுடைய குடும்பச் சிக்கலாகட்டும், பொருள் சிக்கலாகட்டும் மற்றவர்கள் விளம்பரத்திற்காக ஐயா அவர்களை ஏமாற்றுவது போல் ஏமாற்றமல் உண்மையாகவே தென்மொழிவழி நன்கொடை திரட்டித் தந்ததைச் சொல்லாமல் இருக்கவும் முடிவதில்லை. அன்றைய அரசிற்கும்

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ், தமிழினம், தமிழ்நாடு மீட்கப்பட !

குலமத கட்சி வேறுபாடு இன்றித் தமிழர் அனைவரும் ஓரினமாக ஒன்றுபடுவதும், தமிழ்ப்பெயரே தாங்குவதும், தமிழிற் பேசும்போது தூய நடையிலேயே பேசுவதும், தம்மாலியன்றவரை பிறருக்கு நன்மை செய்வதும், உளளும் புறம்பமொத்த வாய்மையைப் படிப்படியாக வேனும் கடைப்பிடிப்பதுமே, தமிழும் தமிழினமும் தமிழ் நாடும் மீட்கப்படுவதற்குரிய வழிகளாகும்.

— பாவாணர்.

www.thamizham.net - Free E book No 7507

பல்வேறு தோற்றங்களில் பாவாணர்



சிந்தனைத் தோற்றம்



மலர் முகம்

வீற்றிருக்கை



பகையைப் பொருட்படுத்தாமை



நகைமுகம்

www.thamizham.net - Free E book No 7507



பெருமிதம்

தமிழினம் பற்றிய கவலை

பாவாணர் - வேறு சில நிலைகளில்

அவலம்
தமிழம் ஆசிரியர் தங்கமகன்
அறிவழகன்
மறைவின் பொழுது



பாவலரேற்றுடன் சிறைசென்ற
விடுதலை மறவர்களிடை
ட. தி. க. தலைவர் பாவாணரும்
பொதுச்செயலாளர்
இறைக்குருவனும்

www.thamizham.net - Free E book No 7507

பெருஞ்சித்திரனார் பாடல்களில் இன எழுச்சி

—நல். இளங்கண்ணன், க. இ.

உண்மையான பாவலன் ஒருவனுக்கு அவன் வாழும் நாடு, இன, மொழி, மக்கள், காலச் சூழ்நிலைகளின் தாக்குதல்களால் உணர் வழுத்தம் உந்தப் பெற்றுப் பாடல் பிறக்கின்றது. இவ்வாறு பிறக்கும் பாடலே உயர்ந்த இலக்கியமாகும். பாவலன், வாழ்க்கையின் பொருள் விளக்குபவனாகவும் (Interpreter), திறனாய்வாளனாகவும் (Critic), வழிகாட்டியாகவும் (Guide) எண்ணப்படுகின்றான். அவன் பாடல்கள் மாந்த எண்ணங்களை உயர்த்துவனவாக விளங்க வேண்டும். இதனையே உருதுப் பாவலன் இக்பால், 'Poetry of constant questioning, constant criticism, creating a disturbing, effort on its reader, not tranquilising' என்கிறார். அவ் வகையில் **பாவலரேறு** **பெருஞ்சித்திரனார்** பாடல்கள் தாழ்ந்து கிடக்கும் தமிழகத்தின் தன் ஆய்வு (சுய விமரிசனம்) ஆகவும், வழி காட்டியாகவும் அமைகின்றன. பாடல்கள் வெறும் உணர்ச்சி யூட்டுவனவாக மட்டும் அமையாது, அறிவியல் நெறிப்படி இன எழுச்சிக்கு வழி காட்டுகின்றது.

இனம் என்றால் என்ன?: இனம் என்ற சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கொண்டுள்ளனர். இதனைக் காரல் மார்க்சு, 'நில வகையில் தொடர்ந்து, ஒரே நிலப் பரப்பில் வாழ்ந்து, **வரலாற்று வகையில் ஒரே மொழி பேசி வரும் மக்கள் ஒரு மொழிவழி நாட்டினமாகக் கருதப்படுவர்**' என்கிறார். இவ்வகையில் தமிழ், தமிழர், திராவிடர் எனப் பெயர் பெறுகின்றனர். தமிழம்—திரவிடம் எனத் திரிகின்றது (தூத்துக்குடி—Tuticorin) என்னும் பாவாணரின் மொழியியல் வரலாற்று உண்மையைப் பாவலரேறு தம் பாடல் களில் மொழி வழியினம் என்னும் அடிப்படையில்தான் 'இனம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

'மொழிச் சிறப்பழிந்து மொழியுணர்வழிந்தால்
எழுச்சியின்றித் தமிழினம் இன்றினும்
அடிமையுற்றுத் தாழ்ந்தழியாதா, என்றும்,—66.

'நடைமயழிக்க இற்றைநாள் வரும்பகையை
எண்ணிடுக செந்தமிழ்த்தாய் நலம்போமாயின்
அமைகின்ற அடிமைவாழ் வெத்தனை நாள்
ஆர்த்திடுக தமிழுரிமை காத்தற் கென்றே.'

என்றும்,

சுடுகின்ற மாந்தரெல்லாம் உன்னினத்தார்
அன்னவரின் கூட்டுக்குள்ளே

www.thamizham.net - Free E book No 7507

ஓடுகின்ற குருதி தமிழ் உணர்வு தமிழ்
உயிரெலாம் தமிழ்'

என்றும் மொழிதான் இன அமைப்பிற்கு அடிப்படை என்பதையும், மொழிச் சிறப்பும் மொழியுணர்வும் அழிந்தால் தமிழினம் அடிமையுறும் என்பதையும் விளக்குகின்றார். தமிழ்க் குருதி உடையவரும் தமிழ் உணர்வு உள்ளவரும் தமிழினத்தார் எனத் தெளிவாக மொழி வழித் தமிழினமாகக் கருதுகின்றார்.

இன எழுச்சியின் தேவை : முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாக்கிருட்டிணன் இலக்கியத்தின் நோக்கம் பற்றிக் கூறுகையில், 'ஓர் இலக்கியக் கலைஞனுக்குக் குமுகாய வாழ்வை எதிரொளிப்பது மட்டுமே எல்லையாக அமைவதில்லை. சீர்கெட்ட குமுகாய அமைப்புகளையும் நடப்புகளையும் உடைப்பதும் மாந்தத் தன்மையை உயர்த்துவதும் அவனுடைய கடமையாகும். (A literary artist is not limited merely to mirroring the social forms and Practices and raises the human quality.)

அவ்வகையில் தமிழ்க் குமுகாயம் தாழ்வுற்று, நலிவுற்று அடிமைகளாய், தாம் அடிமைகள் என்பதையும் அறியாதவராய் வாழ்ந்து வருகின்றனர். வாழ்வின் நெறி வகுத்து அதன் பொருள் உணர்ந்து, உலக மொழிகளுக்கெல்லாம் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் வாய்த்த ஒரு மொழியைத் தங்கள் 'தாய் மொழியாய்ப் பெற்றிருந்தும் அதன் அருமை உணராதவனாய்—பெருமை விளங்காதவனாய் வாழ்ந்து வரும் நிலை கண்டு அவர்களின் வரலாற்றையும் சிறப்பையும் எடுத்துக் கூறி இன எழுச்சியூட்டுகின்றார்.

'எவ்வாறுனும் எந்தமிழ் நாடும்
செவ்விய தமிழும் சிறப்புற்றிலங்க
வேண்டுமென்பதே என் உயிர் விழைவாம்' (57)

நுண்ணறிவுத் திறன், மெய்யறிவமைதி, அழகிய சொல்லாற்றல் ஆகியவற்றின் மூலம் மாந்த வாழ்வு பற்றிய விளக்கங்கள் மட்டும் கூறிச் செல்லும் கூட்டத்தைச் சார்ந்து நிற்காமல், அறியாமை, முறைகேடு ஆகியவை நீங்கிய செம்மையான வாழ்வு மலரத் தம் பாட்டுத் திறத்தைப் பயன்படுத்துகின்றார்.

தமிழ்க் குமுகாயம் தானே இயங்குவதற்குத் தேவையான இயல்பான உந்தாற்றல் இல்லாத காரணியத்தால், தேங்கிய குட்டையின் சகதியே இன்பமென, செம்மை வாழ்வின் நெறி மறந்து, மாந்த முயற்சியின் இயக்கந் தளர்ந்து, தாழ்வே வாழ்வென மயங்கி வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டின் நிலையைப் பாவலரேறு மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

www.thamizham.net - Free E book No 7507

'பொற்பிழப்பால் நலந்தேடிப், புனைசுருட்டால்
பொருள்சேர்க்கும் பொய்மை மாந்தர்,
கற்பழிப்பால் கலைகற்றுக் கருவழிப்பால்
கலைவளர்க்கும் கயமைப் பெண்டிர்,
சொற்பொழிவால் தொண்டாற்றித் திரைப்படத்தால்
தமிழ்வளர்க்கும் தலைவர் கூட்டம்,
மற்போரால் பெரும்பணத்தால் அரசமைக்கும்
மதிகேடர் தமிழர் நாட்டே.'

என்றும்;

'அரசியல் தெளியா மாந்தரிங் கொருபால்
அறம்பிழை வாணிகர் ஒருபால்'

என்றும்,

'சோற்றுக்கு மடிவிரிக்கும் புலவர் கூட்டம்,
சுரண்டுகின்ற வாணிகர்கள், அடிக்கும்மென்மைக்
காற்றுக்குந் தாங்காத குடில்வாழ் மக்கள்,
கண்ணீர்க்குப் பஞ்சமில்லை, பழம்விளக்கு
மாற்றுக்குக் குஞ்சமெனப் பதவி, பட்டம்,
பகற்கொள்ளை, கலைக்கொலைகள், பெருகும்மக்கட்
பேற்றுக்குக் குறைவில்லை; சவலைநோஞ்சற்
பிள்ளைகளோ கணக்கில்லை, உணவுப்பஞ்சம்,'

'இக் காலத் தமிழகத்தில் இருக்கும்தீமை
எதிர்காலத் தமிழகத்தில் இருக்காதென்பேன்!'

இன்றைய தமிழக நிலையை நினைக்கின்றபொழுது அவர் நெஞ்சம் பதைக்கின்றது.

'இற்றைநாள் தமிழகத்திழிநிலை நினைக்கின்
எரியெனக் கனன்றிடும் நெஞ்சம்'

தமிழகத்தின் இன்றைய நிலையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதோடு நில்லாமல், அதன் உட்கூறுகளை ஆய்ந்து, அதன் தவறுகளைத் திருத்திப் புதிய குமுகாய அமைப்பை ஏற்படுத்த இன எழுச்சியின் தேவையை உணர்த்துகின்றார்.

தமிழர் தாழ்த்தப்பட்ட பொழுதை உணர்ந்து, தமிழர் தங்கள் உரிமைகளைத் தாங்களே உணராமல் இருப்பதைக் கண்டு தம் கருத்துகளை அச்சமின்றி, உணர்த்த வேண்டியவற்றை உறுதியோடு உணர்த்துகின்றார். இந்நிலைக்குத் தமிழர் தாழக் காரணியம் என்ன? அறிவியல் நோக்கில் ஆய்கையில் அவன் நீண்ட வரலாற்றைக் காட்டி, அவன் எவ்வாறெல்லாம் பிரிக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு அடிமையாக்கப்பட்டான் என்பதை விளக்குகின்றார்.

அடிமை முறைகள் : மதத்தாலும் அரசியலாலும் குமுகாய

www.thamizham.net - Free E book No 7507

நிலைகளாலும் தமிழர் ஆரியப் பார்ப்பனர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். பொருளாலும் அரசியலாலும் வடவருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். உலக முதன்மொழி உடைய தமிழன் அதன் சிறப்புணராது, பிற மொழி உதவியின்றித் தன் மொழி வாழாது என்னும் நிலையில் உள்ளான்.

உழைப்பை மதிக்கும் திறன்போய் பொய்க்கும் புளுகுக்கும் அடிபணிந்து நிற்கின்றான்; இவன், தனக்கொரு நினைவிலனாய் மிகத் தாழ்ந்து வாழ்கிறான்.

'எண்ணவும் திறனிலனாய்
பிறர் எடுத்துரைத் திடினுமோர் உணர்விலனாய்--மிகத்
திண்ணமாய் உரைத்திடினும்—ஒரு
செயலுக்கு முன்வருந் துணிவிலனாய்—பல
வண்ணமாய் வாழுகின்றான்,'

'உண்மையில் லாதவனாய் – தான்
உண்ணவும் உடுக்கவும் பிறரிடம்போய்—மனத்
திண்மை யிழந்து விட்டான்– ஒன்று
தேறவும் செய்யவும் வாய்ப்பிலனாய்—இழி
பெண்மையின் நடிப்பினனாய்—ஒரு
பேடி யைப்போல் இவன் வாழுகின்றான்.'

அறியாமையும் வன்முறையும் தன்னலத்தையும் காழ்ப்புணர்வையும் நலிவையும் நல்கும் சமய, சாதி அமைப்பும் தமிழர்களை ஆட்கொள்கிறது.

இருவகைப் பகை : உட்பகை, புறப்பகை, இருவகைப் பகைகளால் தமிழன் தாக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டான். உட்பகை யாவன அறியாமை, தன்னலம் போல்வன. புறப்பகை என்பது ஆரிய வல்லாண்மை. அஃதாவது தமிழர்களை மதத்தாலும் சாதியாலும் பிரித்து வைத்து, அவை இறைவனின் ஏற்பாடு என்று ஈராயிரமாண்டுகளாகக் கோயில் குளங்களில் கற்பித்து, இன்றும் அவற்றைக் கட்டிக் காக்க பழங்கதை (புராண)ச் சொற்பொழிவுகளும் இராமாயண மகாபாரதத் 'தமிழ்' ஆராய்ச்சிகளும் நடத்தி வருதலும் அதற்குப் பதவி வெறியும் பொருள் நசையும் கொண்ட தமிழினத்தாரை (வீடண பிரகலாத, சுப்பிரமணிய, பக்தவத்சல, மகாலிங்க, கண்ணதாசன்களை)ப் பயன்படுத்தி 'இந்து தரும'த்தைக் காத்து வருதலும் வடவரின் அரசியல் வல்லாண்மையும் புறப்பகைகளாகும்.

அதனை,

'தின்னும் இனப்பகை உன்றனை மாய்த்தது
தீராத மடமை நின் இனத்தையே சாய்த்தது.'

www.thamizham.net - Free E book No 7507

என்றும்,

'பார்ப்பான் ஒருவன் பழி வடவன் மற்றொருவன்
போர்ப்பண் இசைத்துப் புறம் நிற்க'

என்றும்,

'ஆரியப்பார்ப்பான் அன்றைய தமிழனின்
வேரினை வெட்டி வீழ்த்திய நாள்முதல்
'தமிழரின் ஆட்சியைத் தமிழரே நடத்துதல்
அமிழ்ந்த மலையை அகழும் அருஞ்செயல்.'

என்றும் அடிமையுணர்வால் தமிழரின் திறம் மங்கிப் போய் விட்ட நிலை இதுவென விளக்குகின்றார். குல, சமயப் பிடிப்புகளிலிருந்து விடுபடாமல் தமிழன் தத்தளிக்கின்றான். ஆரியப் பார்ப்பனர் மேல் நின்று ஆளுகின்றனர். வடவர் ஒற்றுமை பேசி ஏமாற்றுகின்றனர்.

'எங்குமுள பரம்பொருளைக் கோயிலுக்குள்
கருவறைக்குள் இருத்தியதாய் எண்ணியங்கே
தங்குமொரு சொறி பிடித்த பார்ப்பானை
ஆரியனைத் தரகனெனக் குந்தவைத்து
முங்கியடித் தவன் முன்னே பழந்தேங்காய்த்
தட்டெடுத்து நீட்டி அவன் முணுமுணுக்கும்
வெங்காய மந்திரத்தை விரும்பியதா
லன்றோ நாம் இன்றுவரை வீழ்த்தப்பட்டோம்.'

என்றும்,

'ஒற்றுமை ஒற்றுமை என்றே உழைத்துக்
குற்றுமி ஊதிக் கொதியுலையேற்றி
வெற்றிலை விரித்து விருந் திடல்போல
உற்ற உணர்வையும் ஒழித்திடல் உண்மை.'

என்றும்,

'செற்றுச் சிதைத்திடவே சட்டங்கள் செய்திடுவீர்!
பற்றின்றி இதனைப் பகர்கின்றேன்; பார்ப்பானின்
வெற்றுடலில் பூணூல் விளங்கும்வரை அந்நெஞ்சில்
முற்றியுள்ள 'சாதிமத' முட்காடிங்குள்ள வரை
அற்றை மனுநூல் அழியும்வரை, இந்நிலத்தே
ஒற்றுமையும் பூக்காது, ஒருமையுளம் காய்க்காது'

புராணப் புளுகும் ஆரிய மதக் கொள்கையும் தமிழனை அறிவடிமைப் படுத்தின.

'இன்னமும் பார்ப்பான் எழுதிய பொய்மையும்
பின்னியுரைத்த புராணப் புளுகையும்
உண்மை என்றே உளமார நம்பிப்
பொன்னையும் பொருளையும் கொட்டிக் கொடுப்பாய்

www.thamizham.net - Free E book No 7507

குலச்செருக் கின்னும் குலைந்திட வில்லை;
பலவேறு சமயமும் உனைப் பாழ் படுத்தும்.
உள்ளத் திறைவனை ஒப்பாது, பார்ப்பான்
கள்ளத் தேற்றிய கயவருக் கெல்லாம்
படிவம் சமைத்து விழாப்பல வெடுப்பாய்;
விடிவிலா இருளுள் விழுந்து கிடப்பாய்!'

இன நலம் பெரிது: தமிழன் இவ்வாறு பலவாறாக அடிமைப் பட்டு அறியாமையில் கிடந்தான்.

'இனமும் மொழியும் வழியுங் கெட்டு
மனமும் கெட்டு மழுங்கினாய் தமிழா.'

இந்நிலைக்கு ஒரு விடிவு காண விழைகிறார் பாவலரேறு. இந் நிலைக்கு முடிவு இன எழுச்சிதான் என்பதை உணர்த்துகின்றார். தமிழன் மறந்த பழம் பெரும் வரலாற்றைக் கூறி அவனுக்கு இன எழுச்சியை ஊட்டி எழுப்புகின்றார்.

'சொத்தெல்லாம் போனபின் எவர்வழிச் செல்வது
சோம்பலை முறி'—

யெனக் கூறுகின்றார். /இன நலங் கூறி, எழுச்சியூட்டிக் குமு காயச் சீர்திருத்தத்திற்கான வித்திடுகின்றார்.

'இருக்கும் நலன்களில் இன நலம் பெரிதென
எந்தமிழ் நல்லினம் நினைந்திடல் வேண்டும்;
செருக்கும் பெருமையும் சிறுமைச் செயல்களும்
சிதைத்திடும் சிதைத்திடும் இனத்தினை ஆதலால்!'

'மொழிநலம் இனநலம் பேணுதல் அன்றோ
முழுநலம் பெறுவழி; நாம்பெறல் என்றோ?
விழியுண்டு வழியுண்டு விரைகிலை, நன்றோ.'.

குமுகாயச் சீர்திருத்தம் என்பது ஒரு குமுகாயம் தன்னையே திறனாய்வு செய்து கொள்வதற்கு ஒப்பாகும். இதனைப் பாவலர் மிகச் சிறப்பாகச் செய்கின்றார்.

'பார்ப்பனரைக் குறைகூறிப் பயனில்லை;
நம்மவர்கள் பரந்து செய்யும் ஆர்ப்பாட்டம்'

எனத் தமிழர் செய்யும் தவறுகளைச் சுட்டித் திருத்துகின்றார்.

'நமக்குள் நாம் புறம்பேசித் தாழ்ந்தழியின்
இனப்பகைதான் நலிவதெங்கே?'

எனக் கேட்கின்றார்.

'தமிழனைத் தமிழனே தாழ்த்துகின்றானே
தலைமீட்க எழுவோரைப் புறம் வீழ்த்துவானே

www.thamizham.net - Free E book No 7507

சிமிழ்க்காத போரெனில் இவன் நீந்தும் மீனே
சிற்சில காலமாய் அழிகின்றான் தானே.'

'தமிழனைப் பிறர்யாரும் தாழ்த்தவில்லை—அவன்
தம்பியே தாழ்த்துகின்றான்—இந்தத்
தமிழனைப் பிறர்யாரும் வீழ்த்தவில்லை—அவன்
தமையனே வீழ்த்துகின்றான்.'

இன எழுச்சியா? இன வெறியா? : மற்ற இனங்களின்மேல் குறை கூறித் தன் இனத்தைப் புகழ்தல், இன வெறியைத் தூண்டும் செயலெனச் சிலர் நினைக்கலாம். ஆனால் பாவலரேறு அவர்களின் பாடலில் இன எழுச்சியே உள்ளது. இனவெறி எங்கும் தலைகாட்டட வில்லை. இன உணர்வை அறிவியல் முறைப்படி, மொழிவழித்தான் புகுத்த முடியும் என்பதை நன்குணர்ந்து மொழிவழி, மொழியின் அறிவியல் வரலாறு கூறி இன எழுச்சியை ஊட்டுகின்றார்.

பரந்த பார்வை : இன எழுச்சி யெனும் பொழுது, தமிழ்நாடு எனச் சிறிய வட்டத்துள் அமையாது, தன்னினம் உலகின் எம் மூலையிலிருப்பினும் மொழிவழி அதன் நலத்தில் அக்கறை கொண்டு பாடுவது அவரின் தெளிந்த இனக் கொள்கையைத் தெற்றெனக் காட்டுகின்றது.

'எந்தமிழ் இனத்தார் இந்நிலவுருண்டையில்
எந்தப் பகுதியில் இருந்தாலும்—அவர்
சொந்தம் நமக்கே, நாமவர்க்கென்றும்
சொந்தம் சொந்தம் என்றுரைப்போம்!
உந்தும் உணர்வும் உறவும் அவர்பால்
உண்டுண் டென்றே முழங்கிடுவோம்—அவர்
சிந்தும் கண்ணீர் செந்நீர் எதற்கும்
சீறியெழுந்து வழக்கிடுவோம்.'

எனத் தன்னினம், தமிழினம் எங்கிருப்பினும் அதன் சிறப்பில், நலத்தில், எழுச்சியில் அக்கறை காட்டுகின்றார். ஈழத் தமிழர் நிலை கண்டு நெஞ்சு பதைக்கின்றார்.

'நெஞ்சை உருக்குதடா நம்
நினைவைக் கருக்குதடா—ஒரு
பஞ்சைப் பழுதென—ஈழ நிலத்தினில்
பைந்தமிழ்த் தாயினம்
அஞ்சி வாழும் நிலை.'

'ஆழக்கடலும் அரசுப் பிரிவும்
அவர்க்கும் எமக்கும் தடையில்லை—எம்
வேழப்பெருந்தோள் எழுந்தால்—தமிழர்
வெற்றிநடைக் கெதிர் நடையில்லை.'

www.thamizham.net - Free E book No 7507

உரிமைக்கு வித்து : மறைந்த பொதுவுடைமைத் தலைவர் சீவானந்தம் அவர்கள் 'இலக்கியம் பற்றிக் கூறுகையில் இலக்கியம் குமுகாயச் சூழ்நிலையில் உருவாகும் மரம் மட்டும் அன்று; குமுகாயச் சூழ்நிலையை உருவாக்கும் வித்தும் ஆகும்' என்கிறார். பாவலரேறு தம் உயர் இலக்கியத்தால் எதிர்காலத் தமிழினத்திற்கு வித்திடுகின்றார்

'வேருக்குள் அன்றோ நீர்விடல் வேண்டும்
அடிப்படையை விளைத்தல் வேண்டும்.'

என்பார். வேருக்கு நீராக உரிமையைக் காட்டுகின்றார். அந்த உரிமை மொழிக்காகவே என்கிறார்.

'உரிமைக்கு வித்தெல்லாம் உணர்வெல்லாம் மொழியே
ஊமையன் நெடும்போக்குக் குண்டோ நல்வழியே'

என்றும்,

'உரிமையெனும் மெய்க்கொள்கை தமிழர்க்கென்றும்
உயிர்க்கொள்கை — உயிரைவிட உயர்ந்த கொள்கை,'

என்றும் பகர்கிறார்.

தமிழர்க்கு இன எழுச்சியும் உரிமை வேட்கையும் மொழிவழி — தாய்மொழி வழி — தமிழ்மொழி வழித்தான் அமையும். அதுதான் தமிழர்க்கு அறியாமையை நீக்கி அறிவைக் கொடுத்து அடிமைத் தனத்தைப் போக்கும் என்கிறார்.

'செந்தமிழை முடிவைத்தார் செய்தொழிலால்
தமிழ்நிலத்தைச் சிதைக்கச் செய்தார்
தந்தபயன் அளவில்லை; தம் புகழ்க்கும் வரையில்லை.'

என்றும்,

'எதைப்பற்றி வாழ்ந்தாலும் தமிழரிந் நாளில்
எந்தமிழைப் பற்றிக் கொண்டிருந்தால்தான் தம்பி
சிதைப்பற்று வாழ்ந்திடலாம்—உயர்ந்திடலாம்-அல்லால்
சிறுமைக்கும் அறிவுக்கும் உடன்படுதல் வேண்டும்.'

விடிவு : இன எழுச்சிக்கும், மற்றும் உலகின் பல்வேறு ஒழுங்கியக்கங்களுக்கும் மிகத் தெளிவான, முடிவான விடை தருகின்றார். அறிவுப் பெருக்கும், உழைப்பும், முயற்சியும் அற வாழ்க்கையும், ஒழுங்கும் உலகம் உய்யவும் வழிகோலும். இன எழுச்சியூட்டித் தமிழினத் தலைநிமிர வைக்கும்.

'மன நலம் பண்பாடு வேண்டின் தமிழர்
இன நலம் பேணுக.'

எனப் பண்பாட்டு வளர்ச்சிக்கு—மன வளர்ச்சிக்கு இனநல அடிப்படையைச் சுட்டிக்காட்டி,

www.thamizham.net - Free E book No 7507

பாவாணர்க்குத் தென்மொழி தந்த சிறப்புப் பட்டங்கள்

பாவாணர் மறைவுக்குப்பின், பாவாணரை அரசு முதல் அனைவரும் கொண்டாடிப் போற்றும் நிலை வந்துள்ளது மிகவும் பெருமைப்படத்தக்கதே. ஆனால் ஆளையும் அறிவையும் விட்டுவிட்டுப் பெயரையும் படத்தையும் வைத்துக்கொண்டு மறைந்த அறிஞர்களைப் பாராட்டுவதொன்றே தமிழர்க்குக் கைவந்த கலை. அதுவும் பாவாணரைப் பார்த்திராதவரெல்லாம், படித்திராதவரெல்லாம் இக்கால் அவரை நன்கு தெரிந்தவராகக் காட்டிக் கொண்டு மேடையேறி முழங்குவதும், கையுதறி எழுதுவதும் காலம் செய்த கோலமாகி விட்டது. எவராலும் அறியப் பெறாமலும் எவராலும் புரக்கப் பெறாமலும் எவ்வகையிலும் உணரப் பெறாமலும் இருந்த அவரையும் அவர் அறிவையும் குன்றின் மேலிட்ட அரும்பாடு முழுக்க முழுக்க

(முன்பக்கத் தொடர்ச்சி)

'இனியும் தமிழர் எழாமற்போயின்
கனந்திடும் உரிமைக் கனிச்சுவை நுகரார்'
'மலர்ந்திடும் தமிழக மாட்சிமை அறியார்
உலர்ந்திடுஞ் சருகா யுதிர்திழிந் தழிவார்.'

ஆதலின் உழைப்பின்வழி, அறவாழ்க்கை வாழ

'உழைப்பைப் பெரிதெனப் போற்றிடுவீர்—செயல்
ஒன்றே உயர்வென நாமுழைப்போம்.'

என உழைப்பிற்கும் உண்மைக்கும் உயர்ந்த இடத்தினை அளிக்கின்றார். உண்மையொன்றே உலகின் அறியாமையை நீக்கி அறிவொளி பரப்புமென்கிறார்.

'நைகின்ற தமிழ் நெஞ்சே நலிவகற்று
நலஞ்சேர்க்கும் நடையுரைப்பேன்
மெய்குன்ற, நலங்குன்ற மேலோர்க்குக்
கீழோர்செய் மிடிமை முற்றும்
பொய்குன்றக் குன்றுமெனப் புகட்டி;அவர்
புன்செயலின் புரையை நீக்கி
உய்கின்ற திறங் கூறி உணர்ந்தொழுங்கில்
உயர்வுறவே உரைசெய்வோம்.'

ஆகவே பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள் இனித் தோன்றப் போகும் தமிழகத்திற்கு ஊதிய சங்கொலி என்றும் போர்ப்பறையென்றும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

(சென்ற 10-8-80 அன்று உயர்திரு. கு. வெ. கி. ஆசான் தலைமையில் நடைபெற்றத் திருக்குறள் மன்ற 'கனிச்சாறு' திறனாய்வரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரை.) O

www.thamizham.net - Free E book No 7507

தென்மொழியையே சார்ந்த தென்றால் அது மிகையான கூற்றன்று. பெருமைக்காகக் குறிக்கப் பெறுவதுமன்று; கடமையுடன் நினைக்கப் பெறும், நினைக்க வேண்டிய ஒரு வரலாற்று உண்மையாகும். அவருக்கெனத் **தென்மொழி** இதழ் ஆயிரக்கணக்கான பக்கங்களைச் செலவிட்டது நூற்றுக்கணக்கான மேடைகளில் அவரின் மொழியியல் அறிவு பல்லாண்டுகாலமாக எல்லாரும் உணரும் வண்ணம் எடுத்து விளக்கப் பெற்றது. தமிழின மக்களின் முழுவிழிப்புப் பயன் நோக்கிச் செய்யப் பெற்ற இம்முயற்சி இன்று வெறும் விளம்பர வணிக விளைச் சலுக்கும் அறுவடைக்கும் பயன்படுத்தப் பெறுகின்றன என்று நினைக்கையில் உள்ளத்தின் அடித்தளத்தில் ஒரு பெரு வருத்தம் கால்கோள்கின்றது. பாவாணரைத் தொட்டுப் பார்த்தவரெல்லாம் இன்று தொண்டர் என்று கூறிக் கொள்வதும், பக்கத்தில் நின்றவ ரெல்லாம் பற்றுளர் என்று பெருமை கொள்வதும், இன்று வியக்கத்தக்க காட்சிகளாக நடைபெறுகின்றன. அந்நிலைகள் எவ்வாறாயினும் ஆகுக. பாவாணரின் புகழ் பரப்பப் பெறும் அதே பொழுதில் அவரின் தமிழாராய்ச்சிக் கருத்துகள், கொள்கைகள் முதலியவற்றைப் பற்றி எவரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. நல்லதைக் கைவிட்டு அல்லதைக் கைப்பற்றும் இப் பன்னாடையறிவு தமிழர்களிடம் என்று ஒழியுமோ தெரியவில்லை, இது நிற்க.

அண்மையில், சென்னையில் பாவணர்க்கு இரங்கல் தெரிவித்து அரசுச் சார்பினரும், தனியார் சார்பில் சிலரும் நடத்திய இரங்கல் கூட்டங்களில், பாவணாரை நன்கு உணராத சிலர், பாவாணரொடு தம் பெயரையும் வினையையும் தொடர்பு காட்டிப் பெரிதும் ஆரவாரப்படுத்தி வருகின்றனர். மறைவுக்குப் பின்னர் மாலை யணிவிக்கும் நிகழ்ச்சிகள் வரலாற்றில் பலவுண்டு. பாவாணர் நூல்களில் ஒன்றுதானும் முற்றப் படித்திராதவரெல்லாம், இன்று பாவாணரை நன்கு அறிந்தவர்போல் பேசிவருவதும் எழுதி வருவதும் நமக்கு நகைப்பையே விளைவிக்கின்றது. இருப்பினும் என் செய்வது? தமிழனின் ஏதங்கொண்டு ஊதியமிழக்கும் பேதைமைத் தன்மைக்கு இதைவிட வேறு சான்று இருத்தல் முடியாது. இஃது ஒருபுறம் இருக்க, பாவாணர் இரங்கல் கூட்டங்களில் பேசிய சிலர், பாவாணர்க்கு '**மொழி ஞாயிறு**' என்ற சிறப்புப் பெயரைத் தந்தை **பெரியார்** அவர்கள்தாம் கொடுத்தார்கள் என்று பேசியிருப்பதுதான் நமக்குப் பெரிதும் வியப்பாய் இருக்கிறது. பாவாணரை இவர்கள் எப்பொழுது அறிந்தார்கள்? அத்துடன், தென்மொழியின் கடந்த இருபத்தோராண்டுக் கால எழுத்துகளின், முயற்சிகளின் விளைவு இவர்களுக்கு எப்படித் தெரியும்? அல்லது தெரிந்திருந்தால் அவற்றை ஏன் மூடி மறைக்கப் பார்க்கிறார்கள்? உண்மையை மறைத்துப் பொய்யை ஒருபோதும் நிலைநிறுத்திவிட முடியாது என்பதை இவர்கள் அறியாமற் போனது ஏன்?

www.thamizham.net - Free E book No 7507

இனி, தென்மொழி அதன் தொடக்கக் காலத்திலிருந்து (1959) பாவாணர்க்குத் தந்த சிறப்பு அடைமொழிகள், பட்டங்கள் இருபத்திரண்டுக்கும் மேற்பட்டனவாகும். அவை அவரின் அறிவுப் புலனுணர்ந்து, கொள்கைப் பிடிப்பறிந்து, உழைப்பின் பெருமை கருதிக் கொடுக்கப் பெற்றவை. அவை பாவாணரையும் அவர் உழைப்பையும் அறிவையும் நன்கு உணர்ந்து சூட்டப் பெற்றவையாகும். அவற்றின் பட்டியலும் அவை கொடுக்கப் பெற்ற தென்மொழி இதழ் விளக்கங்களும் கீழே தரப் பெறுகின்றன. அன்பர்கள் அவற்றை பாவாணரின் ஆற்றலுணர்த்த பயன்படுத்திக் கொள்வார்களாக.

எண்	பெயர்கள்	இதழ் விளக்கங்கள்
1.	திராவிட மொழியாராய்ச்சி வல்லுநர்	இயல் 1. இசை 1.—1959
2.	மொழிப்பெரும் புலவர்	சுவடி 1. ஓலை 1—1963
3.	மொழிப்பேரறிஞர்	சுவடி 1. ஓலை 2—1963
4.	தனித்தமிழ்க் குரிசில்	சு. 1. ஓ. 11—1963
5.	உயிர்ப்பாடும் முக்கழகம்	சு. 1. ஓ. 11—1963
6.	உணர்வாடும் தமிழ்க்குரிசில்	,, ,, ,,
7.	தமிழ்மா வேந்தன்	,, ,, ,,
8.	தமிழ்ப் பேராசான்	,, ,, ,,
9.	செந்தமிழ் காக்கும் வெந்திறல் மறவர்	சு. 1. ஓ. 12—1964
10.	சொல்லியல் வல்லுநர் }	சு. 2, ஓ. 6—1964
11.	மொழியியல் வல்லுநர் }	
12.	தனித்தமிழ்க் காவலர்	,, ,,
13.	மொழிநூற் பேரறிஞர்	சு. 4, ஓ. 8—1966
14.	மொழிநூல் முதறிஞர்	சு. 6. ஓ. 7—1968
15.	தனித்தமிழ் ஞாயிறு	சு. 6 ஓ. 8—1968
16.	மொழி முதறிஞர்	சு. 8, ஓ. 8—1968
17.	மொழிநூல் முதுபெரும் புலவர்	,, ,,
18.	மொழியியற் பேராசிரியர்	,, ,,
19.	தனித்தமிழ் அரிமா	,, ,,
20.	மொழியியல் ஞாயிறு	சு. 8. ஓ. 5-6—1970
21.	புலமைக் கடல்	சு. 8 ஓ. 7—1970
22.	**மொழி ஞாயிறு**	சு. 8. ஓ. 8-9—1970

(செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி உருவாக்க— வெளியீட்டுத்திட்ட அறிக்கையில்தான் முதன் முதல் '**மொழி ஞாயிறு**' என்னும் சிறப்படைமொழி பயன்படுத்தப் பெற்றது. இக்கால் அதுவே அவர்க்கு நிலைப் படையாகி விட்டது.)

www.thamizham.net - Free E book No 7507

பாவாணர் மேற்கொண்ட

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத் துறையை

மாற்றி அமையுங்கள்! அரசுக்கு வேண்டுகோள்!

"பாவலரேறு" பெருஞ்சித்திரனாரின் அறிக்கை

அண்மையில், தமிழக அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநரும் (Director) தமிழ்ப் பேரறிஞரும் ஆகிய **மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்** அவர்கள், மறைந்த செய்தி அனைவர்க்கும் தெரிந்ததே. அவர் இயக்குநராக இருந்து உருவாக்கி வந்த 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி' என்னும் அரிய அகரமுதலி (அகராதி) என்னும் நூல் தொகுதி பதின்மூன்று மடலங்களாக (Volumes) வெளிவரத் திட்டமிடப் பெற்றது. ஒவ்வொரு மடலமும் ஏறத்தாழ ஓராயிரம் பக்கங்கள் கொண்டது. அதன் முதல் மூன்று மடலங்களும் மும்மூன்று பகுதிகள் கொண்டது. அவர் இப்பணியை மேற்கொண்டு ஏழு ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை அவர் முதல் மடலத்தில் முதல் பகுதியையே அச்சுக்குவர அணியப்படுத்தியதாகத் தெரிகின்றது.

பாவாணர் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாக மொழியாராய்ச்சித் துறையிலேயே ஈடுபட்டுக் கடுமையாக உழைத்த பேரறிஞர். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பழுதறக் கற்றவர். அதுவன்றி இருபத்துமூன்று திரவிட மொழிகளில் பேரளவிலும், சமசுக்கிருதம், கிரேக்கு, இலத்தீன், ஆங்கிலம், எபிரு, சப்பான், சாக்சன் மொழிகளில் ஓரளவிலும் ஈடுபாடுடையவர். அத்தகைய ஒருவராலேயே செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி போலும் ஒரு மாபெரும் நூலை உருவாக்க முடியும். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி என்பது தமிழ் மொழியில் உள்ள தூய தமிழ்ச் சொற்கள் அனைத்திற்கும் வேரும் முதலும் சரியான பொருளும் கூறுவதோடு, அச் சொற்கள் வேறு மொழிகளில் எவ்வாறு போய் வழங்குகின்றன என்னும் வரலாறும் விளக்கமாகக் கூறுவது. பாவாணர் தூயதமிழ் நோக்கினர்; செந்தமிழ் வளர்க்கும் கொள்கையினர்; எனவே அவர் தொகுக்கவிருந்த அகர முதலியும் தூய தமிழுக்கு ஆக்கமாகவும் அரணாகவுமே இருந்திருக்கும். இக்கால் உள்ள அறிஞர் பிறர் இத்தகைய முறையில் அவ் வகரமுதலியைத் தொடர்ந்து தொகுத்துவிடுவர் என்பது அத்துணை நம்பிக்கைக் குரியது அன்று. பாவாணர் தம் மிகு முதுமைக் காலத்தில் இவ்வரும் பெரும் பணியைக் கடுமையாக மேற்கொண்டதாலேயே அவர் விரைவில் தம் இறுதியை அடைய நேரிட்டது என்றும் கூறலாம்.

இன்றைய நிலையில், பாவாணர் போலும் ஆராய்ச்சித் தகுதி படைத்தவரைக் காண்பது அரிது. பெரும்பாலும் இல்லையென்றே சொல்லிவிடலாம். எனவே அவருக்குப்பின் அத்துறையை மேற்

www.thamizham.net - Free E book No 7507

கொண்டு நடத்திச் செல்லவும், அவ்வகர முதலியை உருவாக்கவும் என்ன செய்வது என்று தமிழக அரசு ஆழ்ந்து எண்ணி வருவதாகத் தெரிகிறது. அத்துடன், இக்கால் உள்ள மொழித் துறைத் தொடர்பான புலவர்கள் சிலரை அமர்த்தி அப்பணியைத் தொடர்ந்து செய்விக்கத் திட்டமிட்டு வருவதாகவும் அறியப் பெறுகிறது.

சொற்பிறப்பியல் அகரமுதலித் துறை பாவாணரின் பெருந் தகுதி நோக்கி அவர் ஒருவர்க்காகவே முன்னிருந்த கலைஞர் அரசால் அறிஞர் பலரின் அறிவுறுத்தலின் பேரில் ஏற்படுத்தப் பெற்றது. இக்கால் அவர்போலும் மொழியாராய்ச்சியில் தோய்ந்தவரும் கடும் உழைப்பு மிகுந்தவருமாகிய புலவர் எவரும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை இருப்பினும் பாவாணருக்காகத் தொடங்கப் பெற்றதும், இதுவரை பல இலக்கக் கணக்கான உருபா செலவிடப் பெற்றதுமான அத்துறையை மூடிவிடவும் அரசு விரும்பவில்லை என்றும் தெரியவருகிறது.

அப்படியானால் அத்துறையை என்ன செய்வது? இந்நிலையில் பாவாணரோடு என் மாணவப்பருவத்திலிருந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக அவருடன் நெருங்கிப் பழகியும், கடந்த இருபத் தோராண்டுகளாக நான் நடத்தி வரும் "தென்மொழி" இதழ் வழி அவரையும் அவர் அறிவையும் உலகுக்கு வெளிப்படுத்தியும், அவருக்குப் பல்வேறு வகையில் உலகெங்கணுமுள்ள தென்மொழி அன்பர்களிடம் பொருள் திரட்டித் தந்து புரந்தும் வந்தவகையில் என் திட்டவட்டமான கருத்து இது என்று மக்களுக்கும் அரசினர்க்கும் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனவே, இவ்வகையில் என் கருத்துகளாகக் கீழ்வருவன வற்றை மக்கள் முன்னும் அரசினர் முன்னும் வைக்கின்றேன்.

1) பாவாணர் இதுவரை தொகுத்துள்ள முதல் மடலத்தின் முதல் பகுதியை உடனே அச்சுக்குக் கொணர்ந்து, அதை அறிஞர் ஏற்புக்கும் பொதுமக்கள் பார்வைக்கும் முன் வைத்தல் வேண்டும்.

2) சொற்பிறப்பியல் ஆராய்ச்சி எவரும் மேற்கொண்டுவிடும் எளிய பணியன்று ஆகையாலும், இக்கால் அதனை மேலும் தொடர பாவாணர் போலும் வலிந்த மொழித்துறை அறிவாற்றல் நிறைந்த ஒருவரும் இன்றில்லை யாகையாலும், அவர் பணியை உடனே மேற்கொள்வது மிகவும் கட்டாயம் ஆகும். எனவே அத்தகைய ஒருவர் இனி எதிர்காலத்தில் வெளிப்படத் தோன்றும் வரை இப் பணியை ஒத்திவைப்பதே நல்லது.

ஆகவே, இப்பொழுதுள்ள 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத் துறையை', 'செந்தமிழ் அகரமுதலித் திட்டத் துறை' என்று பெயர் மாற்றி அதைத் தொடர்ந்து நடைபெறச் செய்தல் வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7507

3) அவ்வாறின்றி அரசு எந்தப் பெரும்புலவரையேனும் அல்லது புலவர் குழுவையேனும், அமர்த்திப் பாவாணர் தொடங்கி நிறுத்திய சொற்பிறப்பியல் அகரமுதலியையே வெளிக்கொணரக் கருதுமாயின், அத்தகையோர் பாவாணர் தம் செம்புல வன்மையினாலும், ஆழ்ந்தகன்ற நுண்ணோக்குத் திறத்தாலும் சரியென்று கண்டு பின்பற்றிய ஆய்வியல் முறைகளையொட்டி, அவர் முடித்ததற்கு மேலும் உள்ள முதல் மடல இரண்டாம் பகுதியை ஒரு கால எல்லைக்குள் தொகுத்து இத்துறையில் ஈடுபாடுடைய பாவாணர் ஆராய்ச்சியில் பற்றும் நம்பிக்கையும் கொண்ட ஐவர் அடங்கிய அறிஞர் குழுவிடம் காட்டி, ஒப்புதல் பெற்று, மேற்கொண்டு அத்துறையைத் தொடரச் செய்யலாம். அப்பணி நிறைவளிக்காவிடின் நாம் மேற்சொன்ன இரண்டாவது கருத்தையே பின்பற்றுதல் வேண்டும்.

4) இக்கால் உள்ளவரில், பாவாணர் ஆராய்ச்சியிலும் அறிவிலும் தொடர்பும் தோய்வும், நம்பிக்கையும் தனித்தமிழ்ப் பற்றும் திறனும் கொண்ட புலவர்கள் சிலரின் பெயர்ப்பட்டியல் நம்மிடம் உள்ளது. அரசு இவ்வழி, நம் கருத்தில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு கேட்குமிடத்து அப்பட்டியலை அரசிடம் கொடுக்க அணியமாயுள்ளேன் என்று மிக்க அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5) இந்நிலையில் பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தை முதன் முதல் 1970-இல் 'தென்மொழி' இதழ் வழியே திட்டமிட்டுத் தொடங்கியதும், அதற்காக ஏறத்தாழ உருபா ஐம்பதினாயிரத்தைப் பொதுமக்களிடமிருந்து பாவாணர்க்குத் திரட்டிக் கொடுத்ததும், அவ்வகர முதலியின் உருவாக்க அடிப்படை நிலைகளை முதன் முதலில் பொது மக்களுக்கு எடுத்துக் கூறியதும் நாமே என்பதையும் அடக்கத்துடன் கூறிக் கொள்வதுடன், அரசு இக்கருத்தில் முழுக் கவனம் செலுத்தி மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். சொற்பிறப்பியல் அகர முதலிப்பணி பெயரளவில் நடைபெறுவதை அரசு எவ்வகையானும் விரும்பக் கூடாது. தமிழ் மொழிக்கு உண்மைத் தொண்டு செய்வதே தக்கதும், போற்றுதற்குரியதுமாகும். அதுவே என்றென்றும் நிலைப்பதும், மக்கள் பயன் கருதுவதுமாகும். புகழத் தக்கவற்றையே போற்றிச் செய்தல் வேண்டும் என்று கூறிக் கொள்கின்றேன்.

" தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்

பூவழிபாடே தமிழர் வழிபாடு

—புலவர். சிவசங்கு, ஏஎல்.

இந்து சமயம் என இன்று வழங்கப்படும் கருத்துகளில், மெய் யறிவு, பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியன யாவும், ஆகம நெறி—நிகம நெறி என்னும் இரு பெரும் பிரிவுகளாகக் கொள்ளத் தக்கனவாய் உள்ளன. இந்து சமய மரபில் இவை சிறிது நெடுங் காலமாக எண்ணியும், நடைபெற்றும் வருகின்றன.

நிகம நெறி: இது முற்றும் ஆரியச் சிந்தனையின் மூலம் சடங்கு, வழிபாட்டு முறையைக் குறிப்பது. வேதச் சார்புடைய சடங்கு நெறிகளைக் குறிப்பிடுகின்ற கரும காண்டத்தை அடியொற்றி நிகழ்வது.

இந் நிகம நெறியை, முத் தீ வளர்த்து வேள்வி செய்து போற்றி வருவாராயினர். தாங்கள் வழி பட்ட இயற்கை ஆற்றல் உடைய நெருப்பு, காற்று, ஞாயிறு, வருணன், இடி, மழை, நிலம், நீர் முதலியவற்றுக்குச் சினம்—சீற்றம் உண்டாகாமல், தம்மிடம் இருந்த ஆடு, மாடு, பார்லி, வெண்ணெய், சோமக்குடிப்பு முதலியவற்றை வேள்வி செய்யும் தீயில் போட்டும், தாம் அவற்றை உண்டும் வழி பாடாற்றுவர். இன்றும், இந்நிலை தமிழ்நாட்டுப் பார்ப்பாரில் ஒரு சாராரிடமும் வடநாட்டுப் பார்ப்பனரிடமும் நன்கு அறியலாகும். இதற்குரிய மந்திரங்கள் வடமொழியிலே ஓதுவது வியப்பன்று. தமிழ் நாட்டுக் கோயிலில் கூட வடமொழியிலே ஓதித் தமிழரைச் சிந்தனை ஆற்றல் இலராய் ஆக்குகின்றனரே!

ஆகம நெறி: இறைப் பொருளை, உள்ளுணர்வால் உணர்ந்து இன்புறும் (தாந்திரிக) நெறி முறைகளும், திருக் கோயில் அமைப்பு முறைகளும் சொற்றமிழால் பாடித் தொழுவதும், தூமலர் தூவி வணங்கலும் ஆகிய இவற்றை அடியொற்றிய பழக்க வழக்கங் களும் கொண்டு அமைந்தது. இவ்வாகம நெறி பெரிதும் பூக்களைக் கொண்டு செய்யப்படும் வழிபாட்டுமுறை. இப் பேரண்டங்கள் யாவும், இறையருள் தன்மையால் நிறைந்து, இயங்கி—இயக்கி

(முன்பக்கத் தொடர்ச்சி)

நன்றூற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்".

அன்பன்
(பெருஞ்சித்திரனார்)

தென்மொழி
சென்னை-5

www.thamizham.net - Free E book No 7507

வருவதை உணர்ந்து, அம் மாபெரும் இறையாற்றலோடு மாந்தன் தான் ஒற்றித்து இன்புற விரும்பும் நோக்கத்தோடு ஆற்றும் வழிபாடே இவ் வாகம நெறியாம். இறைப் பொருள் யாண்டும் நிறைந்திருப்பதில் சிறிதும் ஐயுறலின்றித் தெளிந்து உள்ளுணர்வோடு வழிபாடாற்றும் தமிழ்ப் பெருமக்கள், அதற்கேற்ற வகையில் உருவங்கள் அமைத்துக் கோயில் கட்டித் தூமலர் தூவித் தொழுது வழிபடுவாராயினர்.

பூசை : பூ + செய் = பூசெய் – பூசை என்ருன் தமிழ்ச் சொல்லைப் 'பூஜை' என வடமொழியில் ஆக்கித் தம்முடைய வடசொல் எனக் காட்டத் துணிந்தனர் அது போலி. செட்டுமைபாக வாழ்ந்த செட்டி எனும் தமிழ் வாணிகரின் பெயர்ச் சொல்லைக் கடையை வெட்டிச் 'செட்' ஆக்கிப் பின் முதலை நீட்டிச் 'சேட்' என்ருக்கி தமிழ்நாட்டிலே 'சேட்' என்னும் சொல்லையே புழக்கத்திற்கு அனுப்பியது போல என உணரலாகும்.

மேற்கோள்

'சேவலன் வெறியாட்டு அயர்ந்த 'காந்தள்' என்ற குறிப்பாலும்,

'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ் 'பூவை' நிலையும்' (1006) என்ற தொல்

காப்பிய நூற்பாவாலும் நிலைக்கத் தக்கது. கழகக்கால இலக்கியங்களில் 'பூப்பலி' எனவும், 'பூக்கோள் நிலை' எனவும் வழங்குவன பெரிதும் மேலதனை வலியுறுத்தும்.

'ஏடுடைய மலரால் முனைநாள் பணிந்து ஏத்த' என்று திருஞான சம்பந்தரும்,

'தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின்ருரை' என்று திருநாவுக்கரசரும்,

'தடங் கையால் மலர்தூய்த் தொழுவாரைத்
தன்னடிக்கே செல்லுமாறு வல்லான்' என்று சுந்தரமூர்த்தி அடிகளாரும், பிற்காலத்திலும் பூவால் செய்யும் வழிபாட்டையே போற்றிக் கொண்டனர். இம் மேற்கோள்கள் பூப்பலியே ஆகம நெறியின் முகாமையான வழிபாடு என்பதை உறுதி செய்யும்.

'பூப்பலி, பூசை என்ற தமிழ்ச் சொல் வழக்காலும், இந்து சமயம் என்பதில், தமிழ் மக்கள், தமிழ்நாட்டில் சிவன், முருகன், கொற்றவை, திருமால் ஆகிய கடவுளரைப் பூவால் வழிபாடு செய்து போந்தனர்' என எசு. கே. சாட்டர்சி என்ற அறிஞர் தம் நூலில் வலியுறுத்தி உள்ளமையும் நினைக்கத் தக்கதாகும்.

www.thamizham.net - Free E book No 7507

தமிழும், திரவிட மொழிகளும்

தமிழ்த்தோற்றம் கி. மு. ஏறத்தாழ ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. கொடுந்தமிழ்களுள், வடுகென்னும் தெலுங்கு திரிந்தது கி. பி. 10-ஆம் நூற்றாண்டு; கருநடம் என்னும் கன்னடம் திரிந்தது கி. பி. 6-ஆம் நூற்றாண்டு; சேரலம் என்னும் கேரளம் அல்லது மலையாளம் திரிந்தது கி. பி. 13-ஆம் நூற்றாண்டு. ஏனைத் திரவிடங்கள் திரிந்தது இவற்றிற்கிடையும் பின்னும்.

— பாவாணர்.

(24-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைஞரின் அரசிற்கும் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலித் திட்டத்தை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று அனைத்துப் புலவர்களின் வேண்டுகோளையும் புறக்கணித்த போது, தென்மொழி அத்திட்டத்தை வெளியிட்டு மாதம் ஒன்றுக்கு உருபா பத்துமேனி 200 உறுப்பினர்களைச் சேர்த்து மூன்றாண்டுகள் தொடர்ந்து செய்த செயலையும் தமிழுக்காகவும் தமிழினத்திற்காகவும் பொருட்படுத்தாமல் விட்டுக் கொடுத்ததுதான் மறக்கவொண்ணுமோ? பாவாணர் ஐயா சென்னையில் இருக்கும்போது தங்களின் இல்லத்தில் இருந்து கிழமைக்கொரு முறை ஐயாவின் விருப்பத்திற்கேற்ற உணவு கொடுத்து வந்ததையும் தொடர்ந்து புரந்து வந்த தொண்டையும், எழுதித்தான் விளங்க வைக்க முடியுமா? இன்னோரன்ன பணிகள் செய்தும் தமிழ்ப் பகைவர் ஒரு சிலரால் உங்களிடையே கருத்து வேற்றுமையை உருவாக்கி வளர்ந்த சூழலைத் பாவாணர் அவர்களே மதுரை மருத்துவமனையில் எழுதிக் காட்டியதாகக் கேட்கும்பொழுது தமிழினமே உனக்கு விடுதலையே கிடையாதா, என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. கண்களில் நீர் சுரக்கிறது. — **தென்மொழி குழந்தை ஈகவரசன், திருச்சி-14.**

'இத்துடன் முடித்துக் கொள்கிறேன்' என்றாரே !

அன்பினிய ஐயா ! வணக்கம்.

அண்மையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் மொழிப்பேரறிஞர் பாவாணர் அவர்கள் பொதுநிலைக் கருத்தரங்கில் தமது மொழி ஆய்வுப் பேருரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அவ்வுரையில் தமிழின் தொன்மையினையும் தன்மையினையும் பற்றிப் பல்வேறு சான்றுகளுடன் விளக்கிக் கொண்டிருந்தார்கள்.

தொடக்கத்தில் மிக எழுச்சியோடு இதுவே தமக்கு முதல் உலகத் தமிழ்மாநாடு ஆகத்தோன்றுகிறது எனவும், இதற்கு முன் நிகழ்ந்த உலகத்தமிழ் மாநாடுகளில் தமக்கு உரிய இடம் அளிக்கப் படவில்லை என்றும், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் தமக்கு ஐந்து நிமையங்களே பேச வாய்ப்பு அளிக்கப்பட்டதாயும் இவ்வாறு வரையறைக்குப்பட்ட காலத்திற்குள் எடுத்துக்கொண்ட கருத்தை

www.thamizham.net - Free E book No 7507

எவ்வாறு விளக்குதற்கியலும் எனவும், இவ்வைந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில்தான் தமக்கு உரிய இடம் அளிக்கப் பட்டிருப்பதாகவும் மகிழ்ச்சியோடு கூறினார்கள். தொடர்ந்து அவருடைய உரை பொதுவான அரசியல்மேடைப் பேச்சாளரின் புனைவுச் சொல்லடுக்கு ஆரவாரத் தன்மைபோல் இல்லாமல் சிந்தனைக்கு உரியதாக—கருத்தாழமிக்கதாக அமைந்தபடியால், வந்திருந்தோரில் பலர் சிந்தனைக்குச் செவி சாய்க்காதவர்களாய் —வெளிற்றுரைக்குச் செவி மடுப்பவர்களாக மட்டுமே இருந்ததால் அவர்கள் பொறுமையிழந்தவர்களாய் அடிக்கடி தேவையில்லாமல், கையொலி எழுப்பி ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள். இவர்களில் பெரும்பாலோர் ஆசிரியர் என்ற பெயர்தாங்கி வந்தவர்கள் ஆவர். ஆ . . . சிறியராக வன்றோ நடந்து கொண்டனர்? இவர்களின் இச்செயல் எனக்கு மிக மனவருத்தத்தைக் கொடுத்தது.

பாவாணர் இதையெல்லாம் பொருட்படுத்ாது தமது உரையினைத் தொடர்ந்து கொண்டிருந்த போது மேடையில் வீற்றிருந்த அகத்தியலிங்கம் என்னும் அறிஞர்(?) சட்டென எழுந்துசென்று ஐயாவின் காதோடு "ஐயா! பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார். இதைக் கேட்ட பாவணர் அவர்கள் 'முடித்துக் கொள்கிறேன் — இத்துடன் முடித்துக்கொள்கிறேன்; இனி நீங்களே நடத்துங்கள் — இனிவரும் மாநாடுகளையும் நீங்களே நடத்துங்கள் — இனி மேல் நான் எதிலும் கலந்து கொள்ள மாட்டேன்" என்று உரைத்துவிட்டுத் தம் இருக்கையில் அமர்ந்தார்கள்.

பகலுணவும் இராவுணவும்

ஒருகால் பேராசிரியர் தேவநேயப் பாவாணர் அவர்கள் சில ஆசிரிய நண்பர்களுடன் தாரைமங்கலம் என்னும் சிற்றூர் போய் இரவு தங்கியிருந்து மறுநாட் காலையில் திரும்பி வந்தார். அவரைச் சில அன்பர் சூழ்ந்து கொண்டு, போய் வந்தவகை பற்றி உசாவினர். அவருள் ஒருவர் "ஐயா, பகலுணவும் இராவுணவும் எவ்வாறு இருந்தன" என்று கேட்டார். பேராசிரியர் சற்றுந் தயங்காமல் "பகல்உணவு பகல் உணவாகவும், இராஉணவு இரா உணவாகவும் இருந்தன" என்று விடையளித்தார். பகல் உணவு என்றதில் பகலில் கிடைத்த சிறிய அளவு உணவை அனைவரும் பங்கிட்டு உண்ண வேண்டியிருந்த தென்பதையும், 'இராவுணவு' என்பதில் அனைவரும் உணவு இன்றி இரவைக் கழிக்க வேண்டியிருந்தது என்ற பொருளையும் உயத்துணர்ந்து அங்கிருந்தார் யாவரும் மகிழ்ந்தனர்.

— பாவாணர்.

www.thamizham.net - Free E book No 7507

சோறில்லையானால் வேறு உண்ணுங்கள்!

சென்னையில் ஒரு முறை நானும் சுப்பையாவும் இருந்த போது திருநெல்வேலியில் இருந்து "நான் சைவ வேளாளன்" என்று தம்மைப் பெருமையாகச் சொல்லிக் கொள்பவர் ஒருவர் வந்தார். சாப்பிட்டு வந்ததும் "என்ன, ஐயா நன்றாகச் சாப்பிட்டீர்களா?" என்று கேட்டேன். "சாதம் நன்றாக இருந்தது" என்றார். 'சோறு' என்று சொல்லுங்களேன்" என்றேன். "சோறு என்று சொல்லுவதற்கு நான் என்ன "பள்ளு பறையா" என்றார். அப்போது நான் சொன்னேன் "பள்ளு பறையன் தான் சோறு உண்பதா? அப்படியானால் நீர் வேறு உண்ணும்" என்றேன்.

— பாவாணர்.

பிறகு மற்றவர்கள் பேசினார்கள். எனக்கு ஒரே திகைப்பாக இருந்தது. மற்றவர்கள் பேச்சு என் செவிகளில் விழவில்லை பாவாணரையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். இருக்கையில் இருந்த பாவாணர் அவர்கள் ஒருகையால் தலையைப் பிடித்தவாறு மனம் கலங்கிக் குமுறிக் கொண்டிருந்த காட்சி தெளிவாகத் தெரிந்தது.

அன்று பிற்பகலில்தான் பாவாணர் நெஞ்சு வலிக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. பிறகு குணமடைந்து வருவதாகவும் தெரிந்தது. சற்று மனம் ஆறுதலுற்றிருந்த போது தான் ஐயகோ! "பாவாணர் மறைந்தார்" என்ற இடியினும் கொடிய செய்தி வருகிறது. நெஞ்சம் துடிக்கிறதே... ஐயையோ.. தென்றல் புயலாக நேர்ந்ததே... முடித்துக் கொள்கிறேன் என்று ஏதோ மனச்சலிப்போடு கூறினாரென்றிருந்தேன் ஆனால் ஐயோ... இன்று தம் வாழ்வினையே முடித்துக் கொண்டுவிட்டாரே.. தனித்தமிழ் நெஞ்சங்கள் தாங்குமோ இப் பேரிழப்பை! அவர் ஆற்றிவந்த அரும்பெரும் பணியினை இனி முடித்து வைப்பார் யாரே! ஞாயிறு இன்று மறையின் நாளை எழும் என்று நம்பலாம் ஆனால் அந்தோ! மறைந்தது மொழி ஞாயிறன்றோ! இனி எழுவது என்றோ!

— ஈ. உலகவரசன், முத்தமிழ்க்கூடல், சேலம்-1.

நடக்கக்கூடாத கொடுமை!

அன்பார்ந்த பாவலரேறு அவர்களுக்கு,

நடக்கக்கூடாத கொடுமை நடந்துவிட்டது. தமிழ்மொழியும் இனமும் உலகமொழிப்புலமும் தன்னேரிலாத தலைசிறந்த அறிஞர் பெருமகனை இழந்துவிட்டது. நறுந்தமிழை உலக அரங்கில் ஒளி பெறச் செய்யத் தோன்றிய மொழிஞாயிறு மறைந்து விட்டது. இந்த இழப்பை எப்படித் தாங்கிக் கொள்ள இயலும்?

www.thamizham.net - Free E book No 7507

ஐயா அவர்களுக்கு உடல்நலக் குறைவு எனச் செய்தித்தாள் மூலம் அறிந்து, உடனே ஊரிலிருந்து விரைந்து மருத்துவமனையை அடைந்தேன். அங்கே ஐயா அவர்களின் மகனார் திரு. மணி "ஐயா அவர்களுக்கு எந்தக் கோளாறும் இல்லை. பத்துநாள் ஓய்வுதான் தேவை' என மருத்துவர்கள் கூறியதாக மிக உறுதிபடக் கூறினார். ஊர்மீண்ட நான் மறுமுறை செல்லுமுன் வானொலிச் செய்தி நம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டது. ஐயாவுக்கு அரணாக இருக்கும் தங்களை உசாவினேன். தாங்கள் மாட்டில் கலந்துகொள்ள இயலாததால் மதுரை வரவில்லை என அறிந்து வருந்தினேன்.

தமிழ்ப்பெயர் தாங்குதலே தமிழுணர்வை வளர்க்கும் !

பேரா. பரிதிமாற்கலைஞன் பிராமணராயிருந்தும் தனித்தமிழ்க்கு வித்தூன்றித் தம் பெயரைத் தூய தமிழ்ச்சொல்லாக மாற்றிக்கொண்டார். தமிழ்ப் பெயர் தாங்காதவர் உண்மைத் தமிழ்ப் பற்றுள்ளவராக இருக்கவே முடியாது.

— **பாவாணர்.**

ஐயா அவர்களை இழந்து தவிக்கும் ஐயா குடும்பத்தினர் தென்மொழிக்குடும்பத்தினர் அனைவரும் துயரைப் பகிர்ந்து ஆற்றியிருப்போம். காலம் நமது கவலையைக் குறைக்கட்டும்.

— **பேரா. இல. க. இரத்தினவேல், மதுரை**

தமிழுலகம் கொன்று விட்டது

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களை முதன்முறையாக மதுரை உலகத் தமிழ் மாநாட்டில் பார்த்து அவர்கள் உரையைக் கேட்டு மகிழ்ந்த நான், அவ்வுரையே இறுதி உரையானமை அறிந்து பெரிதும் உளம் கவன்றேன். அவர்கள் இயற்கை எய்தினார்கள் என்பதைவிடத் தமிழுலகம் அவர்களைச் சரியாக புரக்காமல் கொன்றுவிட்டதென்றே கொள்ளல் வேண்டும்.

பல்வேறு மொழிகளை ஆராய்ந்து தமிழின் தொன்மை, தாய்மை, தூய்மை பற்றிய உண்மைகளை வெளியிட்ட பேரறிஞரை இழந்தமைக்கு வருந்துவதா ? அப்பேரறிஞர்க்கு உற்ற துணையாய் இருந்தும் அவர்களைத் தக்க துணையாய்க் கொண்டும் இருந்த தாங்கள் துணையை இழந்தமைக்கு வருந்துவதா ? ....

இனி, அவர்களுடைய ஆராய்ச்சிக் கருத்துகளைத் தென்மொழி வழியாகப் பரவச்செய்தும் செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் தொடங்கப் பொருள் திரட்டித்தந்தும் பல்லாற்றானும் துணை நின்ற தாங்கள், முடிவுறாது நிற்கும் அத்திட்டத்தை (நன்முறையில் முற்றுப்படுத்தப் பாவாணர் அவர்கள் ஒருவரால்தாம் முடியும்

www.thamizham.net - Free E book No 7507

கெடுக்கப்பட்ட மொழி தமிழ் !

இயற்கையாலும் மாந்தப் பதர்களாலும் பெருங்கேடு கட்கு உட்பட்டதும், வெளி நாட்டுக் குறும்பர்களாலும் உள்நாட்டு எத்தர்களாலும் மிகுதியும் முறைகேடு செய் யப்பட்டதுமான ஒருமொழி தமிழைப் போல் இப் பரந்த உலகெங்கணுமே இல்லை.

— பாவாணர்.

என்றாலும்) ஓரளவிற்கேனும் நல்ல முறையில் முற்றுப்படுத்த வையா புரிகளின் (ஒருபேராசிரியரை என் போன்றோர், பெயரைக் குறிப் பிட்டுத் தாழ்வாக எழுதுதல் தகாது எனினும் - அவருடைய அறிவில் ஆயிரத்தில் ஒரு பங்கு தானும் எனக்கு இருக்காது எனினும் இன உணர்வு அவரைவிட எனக்கு அதிமாகவே இருக்கும் என்ற நம் பிக்கையில் இவ்வரிகளை எழுதுகின் றேன் — தவறெனின் பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றேன்.) கை யிற் சிக்காது காக்கப் பெரும் முயற்சி மேற்கொள்ளல் வேண்டு மெனப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

— க. இளங்கோவன், திருச்சி-14.

மாபெரும் இழப்பு !

அன்புடையீர் வணக்கம் பல ! மொழிஞாயிறு பாவாணர் இழப்பு நம்மனோர்க்கு தாங்கிவொண்ணு மாபெரும் இழப்பு. தங்கள் துயரில் யானும் பங்கு கொள்கிறேன். அவர் இலக்கு நிறைவேற உழைக்க உறுதி பூணுவோம் !

— மு. க. சங்கிலி, எலமனூர்

பேரதிர்ச்சி !

மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய தமிழ் ஐயா அவர்கட்குப் பணிவார்ந்த வணக்கம். தமிழ் மாநாட்டில் உண்மைத் தமிழராகிய தங்களின் குரல் ஒலிக்காதது — தமிழகத்தின் தவக்குறைவே ஆகும். நும் ஆய்வரங்கில் கலந்து கொள்ளாமைக்குரிய காரணங்களைத் தமபி பொழிலன் மூலம் அறிந்தேன். தங்கட்கு ஏற்பட்ட நிலையே எனக் கும் என்றாலும், அடிகளார் ஆதரவாலும், பிற அன்பர்களின் அர வணைப்பாலும் திட்டமிட்டவாறு வெற்றியுடன் செயலாற்ற முடிந்தது. இறைவன் அருளால் இனிதே முடித்துத் திரும்பிய எனக்கு — பாவாணர் மறைவு பேரதிர்ச்சியைத் தந்தது. எனக்கே அந்நிலை என்றால்...... என்றாலும், அதிர்ச்சிகளைத் தாங்கிப் பழகிய தங்கள் உள்ளம், இவற்றல் துவளாது ;

தங்கள் எழுத்து — வளரும் என் போன்ற இளந் தமிழர்க்கு நெல்லிக்கனி போன்றதாகும். பாவாணர் அவர்களைக் குன்றிலிட்ட

www.thamizham.net - Free E book No 7507

பெருமை தங்களை மட்டுமே சார்ந்ததாகும். தங்கள் உண்மைத் தமிழ் அறிவால், உணர்வால், மேலும் பல பாவாணர்களை உருவாக்கித் தர முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அவ்வகையில், 'அகர முதலிப்'பணிகள் இடையறுது தொடர தக்கன செய்தருளுங்கள்,

— க. வேங்கடேசன், க. மு. ஆசிரியர், மூலிகைமணி, சென்னை-30

வானிடி வீழ்ந்தது !

பேரன்பு சான்றீர், வணக்கம்.

வானிடி வீழ்ந்தாற் போலும் செய்தி யறிந்து செயலற்றேன். ஓர் ஆய்வுப் பேருற்று ஊழித்தீயால் உண்ணப் பட்டதே! பாவாணர் மூளை ஆய்வைமறந்தும் ஓய்வை நாடியதே! தனித்தமிழைச் சுவைத்த அவர் வாழ்வு அதைத் துறந்தும் தனித்திருக்கும் போலும் ! இவ்வாண்டுப் பொங்கல் அவலச்செய்திகளையும் அலமரல் நிலைகளையும் அடுக்கடுக்காய் அளித்துவிட்டதே ! தங்கட்குத் தமிழ்மாநாட்டில் இடமில்லை யென்றறிய நேர்ந்ததும், அதன் தொடர்நிகழ்வுகளும், பாவாணர் மறைவும் உள்ளத்திற்கு அதிர்ச்சியலைகளையமைத்து விட்டன. தமிழனைக்குக் கோட்டையாக விளங்கியவர்கள் மறைய மறைய, இளந்தலை முறையினர் தம் பொறுப்பும் உழைப்பும் மேலும் மேலும் மிக வேண்டுமென அறிய, நெஞ்சில் பல்வேறு எண்ணப் பின்னல்களும் நெருக்கடிகளும் நேரிடுகின்றன. ஆற்றொணு அவலத்தில் மெய்த் தமிழர் நெஞ்சமெலாம் தவிக்குமிந் நாளில் என்-எங்குடியின் இரங்கலைத் தமிழன்பர் யாவருக்கும் நும் வழி உணர்த்துகிறேன். பாவாணர் கருத்துகளைப் பரப்ப உறுதி பூணுவோமாக! அன்பன்,

— தி. நா. அறிவுஒளி, திருக்கழுக்குன்றம்.

சமஸ்க்கிருதம் வடநாட்டு மொழிகளுக்குக்கூட தாயன்று !

தமிழ் தென்னாட்டு மொழிகட்கெல்லாம் தாயாயிருப்பது போன்றே சமற்கிருதம் வடநாட்டு மொழிகட்கெல்லாம் தாய் என்றொரு தவறான கருத்து நெடுங்காலமாக நிலவி வருகின்றது. ஒரு காலத்திலும் உலக வழக்காய் வழங்காத அரைச் செயற்கையான இலக்கியக் கலவை மொழி, எங்ஙனம் தாய்மொழியாயிருத்தல் கூடும்? ஒரு மொழி முதற்கண் தனிமொழியாயிருந்தாலன்றோ பின்னர்த் தாய் மொழியாயும் அமைதல் கூடும்! தமிழ் திரவிடமொழிகட்குத் தாயும், ஆரியமொழிகட்கு மூலமுமாயிருக்கும் போது, அவ் வாரிய மொழிகளுள் ஒலியளவில் முழுவளர்ச்சியடைந்த இலக்கியச் செயற்கைக் கலவை மொழியாகிய சமற்கிருதம் எங்ஙனம் உண்மையில் பன் மொழித் தாயாயிருத்தல் ஒல்லும்?

— பாவாணர்.

www.thamizham.net - Free E book No 7507

நமக்கினி யாருளர்?

அன்பின் ஐயா !

என்ன எழுத! எதை எழுத! தமிழ்மலை மாய்ந்த தனிபாத் துயரை எவ்வாறு ஆற்றுவது? பாவாணர் ஐயா மறைவுச் செய்தி கேட்டு உள்ளம் திடும் என நடுக்குற்றது. நமக்கினியாருளர்? என்ன செய்வது என்றே புரியவில்லை !

ஐயா அவர்களின் திடும் மறைவு தனித் தமிழர்க் கெல்லாம் தாங்கொணாத் துயர் தரும் நிலையில் அன்னார் இல்லத்தவர்க்கு ஆறுதல் கூறும் திறமற்றுத் தவிக்கிறோம்.

—அன்பன். குமரதன்னொளியன், இல்லத்தினர், வேலூர்-2.

தமிழ்ப் பெருங்கடல் !

பெருமதிப்பிற்கும், வணக்கத்திற்குமுரிய ஐயா அவர்களுக்கு! செந்தணலென, வானொலி தந்த செய்தி யொன்று என்றன் செவியிற் புகுந்தது. அக் கொடுந்துயர்ச் செய்தியினைச் செவிமடுத்த யான் அழிதகவால் அழுங்குதலுற்றேன்; அந்தண்மையார்ந்த செந்தமிழ்ச் செல்வர்தம் பெரும்பிறிது ஓர் அறிதுயிலாய் இருந்துவிடலாகாதா? மீண்டும் அவர் உயிர்த்தெழுந்து விடக்கூடாதா? அவாவால் அரற்றுகிறது எளியேனதுள்ளம். அந்தோ! என் செய்வல் யான்? என்னென்றெழுதுவன் கொல்? இந்தியத் துணைக் கண்டத்தின்கண் இணையற்ற தண்டமிழ்க் கொண்டலாய்ப், பேரறிவுப் பெருமலையாய் அறிஞர்க் கறிஞராய், அருந்தமிழ்ப் பெருங்கடலாய், அடங்கலர்க்கோர் அடலேறாய், அழகிய பழகு தமிழடியாராய் இலங்கிய தேவநேயம் எங்கே? என்றன் தூவல் நகர மறுக்கிறது; உலக வாழ்வையே உள்ளம் வெறுக்கிறது; ஆற்றாமையான் நெட்டுயிர்ப்புப் பிறக்கிறது.

பல தலைமுறைகளுக் கொருமுறையே பாவாணர் போல் ஒரு பைந்தமிழ்த்தேர் வலவர் தோன்றக் கூடும். நிறைதமிழ்ப் புலமைச் செல்வர் மறைமலையடிகளார்க்குப் பின், மொழித்துறையில் நுழைந்து மெய்ம்புறத் தொண்டாற்றிய பாவாணர் தமிழர்தம் போகூழால்

குடிதண்ணீர் குமட்டும் !

மலூர் நடி நகராட்சிக் குடிதண்ணீர்க் குழாயொன்றின் மீது, 'குடிதண்ணீர்க்கு மட்டும்' என்று எழுதப்பட்டிருக்க வேண்டிய தொடர், எழுதிஞன் தவற்றால் ககர வொற்று விடப் பட்டு, தங்கையாற்ற வந்தாரெல்லாம் தவறுகப் பொருள் கொண்டு, தண்ணீர் குடியாது போக நேர்ந்தது.

(குறிப்பு: ககர வொற்று (க்) விடுபட்டபின் "குடிதண்ணீர் குமட்டும்" என்ருகும்.)

— பாவாணர்.

www.thamizham.net - Free E book No 7507

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி!

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி வேண்டுமென்றே தமிழ் சமற்கிருதத்தின் கிளை என்று அயலார் கருதுமாறு, தமிழ்ப் பகைவரான பிராமணத் தமிழ்ப் புலவரால், ஆதி வையாபுரியாரைத் துணைக்கொண்டு திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது.

— பாவாணர்.

மறைந்தார் எனுஞ் செய்தியை ஏனோ எளியேனால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இனிமேல், இன்றமிழுக்குப் போக்கிட மேது? பாவாணர் ஐயா அவர்கள் விட்டுச்சென்ற நற்றமிழ்ப் பணியை நனிகவனத்தோடு தாங்களோ தொடரவேண்டும் தங்களாலேயே தேவநேயத்தின் புகழ் நிலை பெறல் வேண்டும். தூய்தமிழுக்கு மாறு செ(ா)ல்லும் புல்லறிவாளர் சிலர் வேண்டுமாயின் பேரறிஞர்தம் பெரும்பேது கண்டு மகிழக் கூடும். பாவாணர் ஐயாவின் பைந்தமிழ் நெறியிலே பாய்ந்து செல்லத் தென்மொழி வேங்கை யொன்றுண்டென அவர்கள் அறிதல் நலம். தென்னாட்டார்தந் தவக்குறைவால் புகழுடம்பெய்திய அன்னார்தந் தண்ணார் தமிழ்ப்புலம்பன் செம்மோக்கெய்துக இறத்தல் இயற்கையின் சட்டமென்றறிக கையறவு விடுத்து ஐயாவின் அடிச்சுவட்டில் அரிமாவென நடையிடுக எளியேனது ஆழ்ந்து இரங்கல்கள்.

— பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

துயர், மாளாத பெருந்துயர்!

அன்புடைய ஐயா அவர்களுக்கு உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்த ஐயா பாவாணர் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளார் எனும் போதே மிகவும் வருத்தமாக இருந்தது.

இன்றைய செய்தித்தாளைப் பார்க்கும் போது மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். அறிவார்ந்த தமிழ்ப் பெருங்கடல் வற்றிவிட்டதுணர்வே வருகின்றது. அறிவும், பட்டறிவோடு எடுத்தியம்பும் ஆற்றலும் பெற்று, அந்த முழுமையை ஒருமுகப் படுத்தி, அகக்கண் திறந்து அதனைத் தமிழுக்கு, தமிழர்க்கு மற்ற மொழியினர்க்கு ஆற்றுப்படுத்த முனையும்போது... இயற்கையின் இந்த கொடிய செயல் ஏற்பட்டு விட்டதே... துயர்! மாளாத பெருந்துயர்! தமிழுக்கு ஏற்பட்ட இந்த இழப்பினை எங்ஙனம் ஈடு செய்வது?... பாவாணர் ஐயா அவர்களின் குடும்பத்தினருக்கும், மீளாத்துயரில் வாடும் தென்மொழி அன்பர்களுக்கும் அன்பு கூர்ந்து எனது ஆறுதலைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

— செ. வ. புகழேந்தி, கெவின் பின்னல் அணிவு, திருப்பூர்-3.

www.thamizham.net - Free E book No 7507

பாவாணர் பேசுகிறார்



1978-இல் கிண்டிப் பொறியியல் கல்லூரியில்
பாவாணர் தலைமையுரை

பொறியியல் கல்லூரி மாணவர்களுடன் நிகழ்ச்சிக்கு
எத்தழுத்தும் பிறநடையாடும் பாவாணர் வருகை

www.thamizham.net - Free E book No 7507

தகுதி சால் ஆசிரியர் பாவாணரும் தலைமாணாக்கர் பாவலரேறுவும்



பாவலரேறு சொல்வதைப்
பாவாணர் வியப்புடன் கேட்கிறார்.

ஆசிரியரும் மாணவரும்
கருத்துரையாடுகின்றனர்.

www.thamizham.net - Free E book No 7507

நிலையில்லாமல் தவிக்கின்றேன் !

அன்புடையீர், அலைகடலே எமை வந்து அமுக்கியதோ-அனல் எரிதான் எமைவந்து தாக்கியதோ ! நிலையில்லாமல் தவிக்கின்றேன். எம்நெஞ்சில் நீடுவாழ்ந்த பாவாணரா இறந்துவிட்டார் ! உண்மையில்லை ! உண்மையில்லை ! உண்மையில்லை !

என் நெஞ்சு அழுகின்றதே ! எம் தமிழ்த்தாய் அழுகின்றாளே ! நான் எப்படித்தாங்கிக் கொண்டிருக்கின்றேன்! பாவலரேறு எப்படித் தாங்கிக் கொண்டிருக்கிறார் ? புரியவில்லை ! புரியவில்லை ! புரியவில்லை ! காலக் கூற்றே அவரை ஏன் கொண்டு சென்றாய் ! கன்னித் தமிழுக்குப் படையல் இன்னும் செய்வாரன்றோ ! அழுகின்றேன் ! அழுகின்றேன் ! ஐயா, அழுகின்றேன்.

— தி. க. மும்முடி முகிலன், கீழக்கரை.

பகலிழந்த தாமரையானோம்

அன்பரீர் ! வணக்கம். பாவாணர் எனும் எழுஞாயிறு தனித் தமிழ் வானில் திகழ்ந்து, விண்ணுலக ஒளிர் மீனாய் மறைந்து நிலவத் தொடங்கிய செய்தி பகலிழந்த தாமரையாய்த் தமிழர்களை வாடச் செய்கிறது. வாடும் வேளையில் நாடும் ஒன்று .. அன்னார் ஆதன் இவ்வுலகில் செய்வன எல்லாம் செய்தது ஆகலின் அவ்வுலகில் புகழுடம்புடன் அமைதிபெற வேண்டுவோம் என்பதே !

— பா. இறையரசன், தஞ்சாவூர்-6.

பகவத் கீதை !

பகவற் கீதை பதினெண்ணதிகாரங்களையும் எழுநூறு சொலவங்களையும் (சுலோகங்களையும்) உடையது. இதிலடங்கியுள்ள விரிவான செய்தியை ஒரு மெய்ப்பொருளியல் மாநாட்டுத் தலைவர் கூடச் சொல்லியிருக்க முடியாது. ஒரு மாபெரும் போர்க்களத்தில் இருதிறத்தும் நால்வகைப் படைகளும் அணியமாகிப் போருக்கு முனைந்து நிற்கும் வேளையில், இத்தகைய ஓதுவம் (உபதேசம்) ஒரு பக்கப் படையின் முன்னணியில் நடைபெற்ற தெனின். அதை நம்புபவன் பரமார்த்தகுரு மாணவனாகவே யிருத்தல் வேண்டும்.

மேலும், அருச்சுனனுக்கும் கண்ணபிரானுக்கும் இடையே நடைபெற்ற உரையாட்டைச் சஞ்சயன் கேட்டுத் திருதராட்டிரனுக்கு அவ்வப்போது அறிவித்தானென்றிருப்பது, இக்காலத்து ஒலிபெருக்கியும் (Micropohne) உரத்தொலிப்பான்களும் (Loudspeakers) நிறைந்த மாநாட்டுச் சொற்பொழிவொன்றறை, அவைக் கோடியிலுள்ள ஒருவன் கேட்டு அருகிலுள்ள குருட்டுச் செவிடனுக்கு எடுத்துச் சொல்வது போன்றே இருக்கின்றது.

—பாவாணர்.

---

www.thamizham.net - Free E book No 7507

நல்லறிவாளர்களை மதிக்கத் தெரியவில்லையே!

வணக்கத்திற்குரிய ஐயா, மதுரை உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளுவதாய்த் தென்மொழியில் தங்கள் அறிவிப்பு கண்டு மகிழ்ந்தேன். மாநாட்டிற்கும் வந்தேன். ஆனால் அழைப்பில் தங்கள் பெயரைப் போட்டு, பின் எடுத்துவிட்டதாகக் கூறக்கேட்டு வருந்தினேன். நான் சென்ற அன்றே மாநாட்டில் விற்பனை செய்த தென்மொழியைப் பறிமுதல் செய்த கொடுஞ்செயலையும்; சென்னையில் தங்கள் இல்லில் ஆய்வுசெய்த பழிச்செயலையும் கேட்டு நெஞ்சம் கனலாகியது. தமிழகவரசின் தான்தோன்றிச் செயலும், நல்லறிவாளர்களை மதிக்கத் தெரியா நரிமாச் செயலும் வருத்தம் தரத்தக்க செயற்பாடுகள் ஆகும்.

இந்தச் செய்தியே இளகிய என் நெஞ்சினை வாட்டிக் கொண்டிருக்கையில் பாவாணர் ஐயாவுக்கு மாரடைப்பு என்றும், மருத்துவமனையில் சேர்க்கப் பெற்றார் என்றும் வந்த செய்திகள் மேலும் நெஞ்சை வருத்தின. ஆனாலும் அரசின் கவனிப்பாயிற்றே அன்னைத் தமிழன் ஆன்ற தமிழ்ப்புலவன் எப்படியும் நலம்பெற்று விடுவார் என்ற நம்பிக்கையுடன் இருந்தேன். ஐயகோ! என் நம்பிக்கை வீணாகும் வண்ணம் பாவாணர் ஐயாவின் மறைவுச்செய்தி என் காதுக்கு வந்துவிட்டதே என்செய்வது.

தமிழன்னைக்குப் பேரிழப்பு; தமிழர்கட்குப் பேரிடி; உலகத் தமிழ்க்கழகத்தார்க்கு உரைக்க முடியாத துயரம்; தனித்தமிழ் அன்பர்கட்கு தாங்கமுடியாத துன்பம்! அம்மம்ம! இனியார் வந்து

சொற்களைக் காத்திடுக!

இடைக்காலத் தமிழரின் பேதைமையால், பாழான மண்ணிற்கும் படையான சிதலுக்கும், படியாதார் நெருப்பிற்கும், பதினெட்டாம் பெருக்கிற்கும், பற்பல பூச்சிக்கும். பகைவரின் சூழ்ச்சிக்கும், இரையான கலைச்சொற்கள் எத்துணை யெத்துணை? பல்கலைகளிலுள்ள சொற்றொகுதிகளெல்லாம் சேர்ந்தே ஒரு மொழியாகும? ஒரு கலைச் சொற்களைப் பிறிதொரு கலையிலும், ஒரு நூற் சொற்களைப் பிறிதொரு நூலிலும் காண்பதரிது. திருவாசகம் இன்றில்லையேல், சாழல், தெள்ளேணம் முதலிய சொற்களை வேறெங்குக் காணமுடியும்? திருவாசகத்திலும் திருவாசகமான எத்துணை அருநூல்களும் பெருநூல்களும் இறந்துவிட்டன. அவற்றிலுள்ள முழுமணிச் சொற்களனைத்தும் பெரும்பாழ் கடலுள்முழ்கினவே! **தொல்காப்பியம்** ஒன்றில்லாவிடின் இற்றைத் தமிழர் நிலை என்னவாகும்? இவற்றையெல்லாம் தீரவெண்ணி, இறந்தன போக எஞ்சிய சொற்களையேனும் இற்றைத் தமிழர் இறவாது காப்பாராக.

— **பாவாணர்.**

www.thamizham.net - Free E book No 7507

தேற்றவல்லார். முதுபெரும் தன்மானத் தமிழறிஞரும், தனித்த செழுந்தமிழ் ஞாயிறும், தனித்தமிழ் மொழிநூற் பேராசிரியரும், உலகத் தமிழ்க்கழகத்தின் ஒப்பற்ற தலைவரும், தமிழக அரசின் அகர முதலித் திட்ட இயக்குநரும், உலகெங்குமுள்ள தமிழர் அனைவரும் நன்றியுணர்வுடன் வணங்கி வாழ்த்தும் சான்றோரும்ஆகிய பாவாணர் ஐயாவின் இழப்பை இனி எவராலும் ஈடு செய்ய வியலாதே! அவர்தம் தமிழ்க் கனவை நனவாக்கு முன்பே காலன் அவரை அழைத்துக் கொண்டானே! அவர்விட்டுச் சென்ற அறிவுப் பணியைத் தொட்டு முடிக்கவல்லார் எவரே உள்ளார்? நினைக்க நினைக்க நெஞ்சே வெடித்துவிடும் போலுள்ளது! அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு நம் ஆழ்ந்த இரங்கல்கள். அப்பெருமகனாரின் பெரும்புகழ் வாழ்க! அச்சான்றோரின் மொழிஉணர்வு மேலோங்க அவர்தம் நடையொற்றி வாழ்வதே நாம் அவர்க்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

— புலவர். நாவை. சிவம், இலக். இ. மணப்பாறை.

தனித்தமிழ் இயக்க விடிவெள்ளி!

தனித்தமிழ்ப் பாவலரேறு ஐயா அவர்கட்கு அன்பு வணக்கம்! இயற்கை விளைத்த கொடுமை தான் என்ன! எம்மரும் மொழி ஞாயிறு, மொழிநூல் மூதறிஞர் எமை விட்டு நீங்கினரே! அம் மாபெரும், உயர்தனிச் செம்மொழியின் காவலரது இறுதிச் செலவைக் கண்ணுற்றேன் சென்னையிலே! தனித்தமிழ் இயக்கத்திற்கு வழி காட்டியாய், விடிவெள்ளியாய் விளங்கிய அவ்வறிஞரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட தமிழர்களின் எண்ணிக்கையோ ஈராயிரம் கூட இராது. காலமெலாம் கன்னித்தமிழுக்குழைத்த பெருமகனைத் தமிழர்கள் தெரிந்து கொண்டமை இவ்வளவு தானா?

தென்னார்க்காடும் வடவார்க்காடும்

'தென்னார்க்காடு' என்பதே சரி. இங்ஙனமே 'வடார்க்காடு' அல்லது 'வடவார்க்காடு' என்பதுவும். ஆர்க்காடு என்னும் ஊராற் பெயர் பெற்றிருந்த ஒரு பெருமாவட்டம் பின்பு வடக்கும் தெற்குமாக இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

ஆர்க்காடு என்னும் ஊர் வேலூர் வட்டத்தைச் சேர்ந்தது; மிகப் பழமையானது; 'அழிசி யார்க்காடு' என்று குறுந்தொகையிலும் (258) 'அறியலங்கழனி யார்க்காடு' என்று நற்றிணையிலும் (190) வந்துள்ளது. ஆர் = அத்தி. ஆர்க்காடு — ஆத்திக்காடு இச் சொல்லைப் புராணிகர் ஆறுகாடு என்று பிறழக்கொண்டு, வடமொழியிலும் சடாரணியம் என்று மொழி பெயர்த்து விட்டனர். ஷட் — ஆறு. ஆரணியம் — காடு.

— பாவாணர்

www.thamizham.net - Free E book No 7507

செய்தி அறிந்து கோவில் பட்டியிலே இருந்து விரைந்து வந்த பெருமகனார் ஒருவர் உரைத்தார் என்னிடம் - தமிழுக்கு உண்மையாய்ப் பாடுபடுவோரது நிலையிது தானா? என்று இன்னிலை மாறிடுமோ? என ஏக்கத்துடனே உரைத்திட்ட நிலைதான் உண்மையன்றோ? அதைவிட நெஞ்சத்தை நோகச் செய்கின்ற செய்தி ஒன்றினை இன்றைய முரசொலி நாளேட்டிலே படித்திட்டேன். அதிலே அமைச்சர் பொன்னையன், பாவாணர் தம் இரங்கல் கூட்டத்திலே ஆற்றிய உரைதான் அது: "பாவாணர் ஐயா அவர்கள் ஆற்றிய அரிய ஆராய்ச்சி உரையினை — உலகத் தமிழ் நாட்டிலே ஆராய்ச்சிக் கரத்தரங்கிலே கூடிய இருபதாயிரம் பேரில் குறைந்தது ஐயாயிரம் பேராவது செவி மடுத்திருப்பார்களா என்பது ஐயப்பாட்டிற்குரியதே! அவரது உரையின் இடையிலே கைதட்டி அவரை இடையிலேயே அமரச் செய்து விட்டார்கள். அதன் பின்னர்தான் அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது!" என்னே எம் தமிழர் தம் இழிந்த மனப் போக்கு. இத்தகையோரிடையே எப்படித்தான் எம் தமிழின் ஏற்றத்தையும் இன உணர்வையும் எடுத்துரைத்து விளக்கிடப்போகிறோமோ! இந்தச் செய்தியினைப் படித்து விட்டு முதியவர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். "பெருமிதத் தோற்றமும், உடல் வலிவும், மிக்க பாவாணரை நான் நன்கறிவேன். அவர் இறந்ததற்கு நெஞ்சு வலி வந்ததற்கு — உலகத்தமிழ் மாநாட்டிலே நிகழ்ந்த நிகழ்ச்சியே காரணியமாய் இருந்திருக்கும்" என உரைத்திட்டார்.

கால் நூற்றாண்டுகளுக்கு மேலாய்க் கன்னித்தமிழ் வளர்த்திடும் தங்களுக்கு மாநாட்டில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படவில்லை. என்ன கொடுமை! இந்நிலை குறித்து எண்ணிடும் தமிழர் எத்தனைப் பேர்! ஏறத்தாழப் பத்தாயிரம் பேரளவிலே நமக்குள்ளேயே நாம் நம் தனித் தமிழின் பெருமையினைப் பேசிக் கொண்டே இருந்திட வேண்டியது தானா? என்று நம் தமிழின் பெருமையினைப் பிறப்பால் மட்டுமே

தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் செழிப்போடு வாழ முடியுமா!

தமிழ்நாடு தனியாகப் பிரிந்து தழைத்தோங்குவதற்குரிய நிலைமைகளெல்லாம் அதற்கிருக்கின்றன. பண்டைக் காலத்தில் சேர, சோழ பாண்டிய நாடுகளும், பிற்காலத்தில் நாயக்க மராட்டிய அரசுகளும் தமித்து வாழ்ந்திருக்க, சோழ பாண்டி நாடுகள் இணைந்த பகுதி இனி ஏன் தனித்து வாழமுடியாது? இக் காலத்தில் இரசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு முதலிய சில நாடுகள் தவிர ஏனையவெல்லாம் பெரும்பாலும் மேனாடுகளின் துணைகொண்டே வாழ்வனவாகும். இந்தியா மேலைத் துணைகொண்டு வாழ்வது போன்றே தமிழ்நாடும் மேலைத் துணைகொண்டு வளம்பெறவாழும்.

— பாவாணர்.

தமிழராய்ப் பிறந்துவிட்டு,உரையாடும் போதெல்லாம், நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு ஆங்கிலத்திலேயே உரையாடிக் கொண்டு இருக்கும் உடன் பிறப்புகள் உணர்வரோ ? நெஞ்சிலே ஏக்கம்; நெடுமூச்சு இவைதாம் விடையா ? காலந்தான் நமக்கு விடையளித்திடவேண்டும் !

இருப்பினும், என்றுமுள தென்றமிழின் தனித்தன்மையைக் காத்திட நமது முயற்சிகள் பெருக்கப்பட வேண்டும். தனித்தமிழ் அன்பர்க்கிடையே தற்போதுள்ள ஒரே தொடர்பு தென்மொழி ஒன்றே! இஃதன்றிக் கிழமை ஏடு ஒன்றினைத் தொடங்கிடவேண்டும். அதன் மூலம் நம்மிடையே விரைந்த தொடர்பு ஏற்பட வழிவகுக்கும். இற்றை நாள் தமிழர் விரும்புகின்ற கதையும், கட்டுரையும் பிறவும் அவற்றிலே தனித் தமிழிலே இடம் பெறச் செய்திட வேண்டும். அப்படியாவது நமது உடன்பிறப்புகளாய்ப் பிறந்துவிட்ட தமிழரிடையே நமது தமிழின் பெருமையினை உணர்த்திட, தனித்தமிழை வளர்த்திட வழி ஏற்படுத்திட வேண்டும். தனித்தமிழ் அன்பர்கள் தென்மொழி அன்பர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு சிறு தொகை பெற்றுவது அதனைச் செய்திடவேண்டும். அன்பர்கள் அதற்கு ஒப்புவர் என்றே எண்ணுகிறேன். எமது இக்கருத்துகளை எண்ணிப் பார்த்திடவேண்டுகிறோம்.

— வே. அரங்கசாமி, பொறி. இ. காங்கேயம்.

அஞ்சா நெஞ்சம் கொண்ட அரிமா !

பெருமதிப்பிற்குரிய ஐயா, தனித்தமிழ் இயக்கத்தை மறைமலையடிகளுக்குப் பின் மறுவின்றி மாண்புற இயக்கி வந்தவர்; மாசறச் தனித்தமிழ்ச் சொற்களை மன்பதைக்கு ஆய்வின் மூலம் அறிஞர்கள் ஏற்கும் வண்ணம் எடுத்துக் காட்டியவர் ; தனித்தமிழ்ப் பற்றினை ஊட்டியவர்; பிறமொழிக் கலப்பால் தமிழடையும் கேட்டினை எடுத்துக்காட்டித் தமிழன்பர்களிடத்தில் உணர்வு மூட்டியவர் ; அஞ்சா நெஞ்சம் கொண்ட அரிமா நிகர்த்தவர் ; தமிழ்ச் சொற்பிறப்பியல் உரைத்தவர் ; தமிழினைப் பழித்தாரைத் தகுமதியுரை என்னும்

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களா இவை ?

தமிழினக் கேடர்களை பாராட்டிப் பட்டமளித்த தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்கள், மொழி ஞாயிற்றைப் பாராட்டிப் பட்டமளிக்காமைக்கு வெட்கித் தலைகுனிய வேண்டும்! மொழி ஞாயிறு பெயரைச் சொல்லக்கூட தகுதியற்றவை ! இத்தகைய அடிவருடிப் பல்கலைக் கழகங்கள் தமிழர்களுக்குத் தேவை இல்லை. இழுத்து மூடுங்கள் ! மக்கள் வரிப்பணந் தான் பாழாய்ப் போகிறது. இதைக் கண்ணுறும் தமிழர்கள் மடல் விடுக்கட்டும்.

— மு. செகந்நாதன், திருவண்ணாமலை.

www.thamizham.net - Free E book No 7507

தடியால் அடித்தவர்; தமிழினைக் கலப்பொடு கையாள்வாரைக் கடிந்து செல்லால் இடித்தவர்; நாளெல்லாம் நற்றமிழ்க்காக உழைத்து உழைத்து உடலம் ஓய்ந்தவர்; இலக்கண இலக்கியங்களைக் கசடற ஆய்ந்தவர்; அதன் பயனாய்க் கருத்துப் பிழிவினை நூல்களென்னும் வற்றாக் குவளைகளில் நாம் பருகக் கொடுத்தவர்; தமிழ்ப் பகையைச் செடுத்தவர்; யாரெனில் சொல்லவும் வேண்டுமோ? அவரே பாவாணர். ஆம், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களே தாம்!

அத்தகு பெருமைக்குரிய நம் பாவாணர் நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார் என்றொரு செய்தி காய்ச்சிய கூர்வேலாய் நம்முள் பாய்ந்ததே; அச்செய்தி பொய்யாய்ப் போகாதோ? பொய்யென ஆறுதலுக்குப் பலரும் கூறலமே; ஆயினும் அவர் மெய்யினை உயிருடன் இனி, என்று காண்போம்? இயலாது; இயலாது; என்றுமே இயலாது! என்ன செய்வது? பாவாணர் நம்மை விடுத்துப் பறந்தார்! ஆம்; தமிழ்க்கடன் போதுமெனத் தமிழுலகை மறந்தார்! நாம் இனி அழுது பயனென்? நமக்கு நாமே ஆற்றிக் கொண்டு, அவரின் நூல்களையெல்லாம் நாடோறும் ஆய்ந்து கற்று மக்களிடம் அவருடைய கருத்துகளையும் தனித்தமிழையும் பரப்புதலே நாம் அவர்க்குச் செய்யும் நன்றிக் கடனும்!

ஐயா, பாவாணரின் பிரிவென்னும் கொதியழலில் தங்கள் உள்ளம் எத்துணை அளவு கொதித்திருக்கும்; துடித்திருக்கும் என்பதனை உணர்கின்றேன்! தங்களின் அவ் வருத்தத்தில் பங்கு கொள்வதுடன், அன்னாரின் பிரிவால் வாடும் அவரின் குடும்பத்தார், சுற்றத்தார், அன்பர்கள், தனித்தமிழ்ப் பற்றுளர் அனைவரின் துயரத்திலும் நான் பங்குகொள்கின்றேன்! அன்பன்,

— **புலவர். ப. எழில்வாணன்**, இலக் இ. பள்ளபட்டி, கரூர்.

ஒரு பொருளைப்பற்றிப் பல்வேறு கருத்துகள் எழுந்தால்தான். ஆராய்ச்சியின் பயனாக உண்மையான முடிவு உறுதிபபடும்.

உலகில் பிறமொழிச்சொல்லின்றி முழுத்தூய்மையாய் எழுதக் கூடிய மொழி தமிழ் ஒன்றே.

ஆரியர் தென்னாட்டிற்கு வந்த பின்னரே தமிழ் நெடுங்கணக்கை யொட்டிக் **கிரந்தாட்சரம்** என்னும் ஆரிய வெழுத்துகளை அமைத்துக் கொண்டனர். அக்காலம் கி. மு. ஏறத்தாழ 1500.

முகம், முஞ்சி இரண்டும் தமிழ்ச் சொற்களே. முகம் மக்களது; முஞ்சி (Muzzle) விலங்குகளது.

முசு-முஞ்சி-முஞ்சி. முசுதல்-மூச்சுவிடுதல். மூச்-மூச்சு.

— **பாவாணர்.**

www.thamizham.net - Free E book No 7507

தமிழ்த் தந்தை!

வணக்கத்திற்குரிய அய்யா, தமிழுக்காகவே வாழ்ந்த தந்தை பாவாணர் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நெஞ்சில் இடி விழுந்தாற்போன்று நிலைகுலைந்தேன். பனிமலையே பொடிந்து விழுந்தாற்போன்று உணர்கின்றேன். பொய்ம்மைப் பிடியிலிருந்து தமிழினத்தின் வரலாற்றை விடுவித்துத் தொன்மையையும் பெருமையையும் நிலைப்பிக்க எழுந்த செந்தமிழ் ஞாயிறுக்குப்பின் இனி யாருண்டு? யாருண்டு? அப்பணியைச் செய்ய? தலைவரின் மறைவால் வாடும் தங்களுக்கும் அய்யாவின் குடும்பத்தார்க்கும என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தங்கள் அன்புள்ள,

— பு. உறவாழி, பாவாணர் கலைக்குடில், போழறப்பட்டி.

தமிழ் உலகம் இருண்டது!

அன்புகெழுமிய தென்மொழி ஐயா வணக்கம். மொழிஞாயிறு பாவாணர் ஐயா அவர்களின் மறைவு கேட்டுப் பெரிதும் துன்புற்றேன். தமிழுக்கு – தமிழ் வரலாற்றிற்கு - தமிழனுக்கு ஏற்பட்ட இந்த ஈடு செய்ய இயலாத இழப்பினை நினைந்து பெரிதும் கலங்குகிறேன். மொழிஞாயிற்றின் மறைவால், மொழியுலகு - குறிப்பாகத் தமிழ் மொழி உலகு இருண்டது இம்மண் - இம்மொழி மாந்தன் இனி ஒளிபெறுவது என்றோ! உண்மைத் தமிழர்க்கு ஏற்பட்ட இந்த இழப்பை எவ்வாறு ஈடு செய்வது. மொழிஞாயிறு ஐயா அவர்களின் நினைவாக தனித்தமிழ்க்குத் தொண்டுசெய உறுதி கொள்வோம். தென்மொழி ஐயா அவர்களே தாங்கள் ஒருவராவது இனி நின்று, எம்போன்ற இளைஞர்கட்கு வழிகாட்டுங்கள். இனி, சிறிதேனும் தமிழன் உறக்கத்தினின்று விழிக்கட்டும்.

— **புலவர் மு. ஆறுமுகம், க மு; ஆ. ப.** சாத்தனூர், வ. ஆ.

வேதம், கீதை, திருக்குறள்

ஆரிய வேதத்தையும் பகவற் கீதையையும் மனு தரும சாத்திரத்தையும் பலரும் சிலரும் திருக்குறளுக்கு இணையாகக் கூறுவர். அவர் அறியார். வேதம் பிள்ளைத் தனமான எளிய கருத்துகளுள்ள சிறு தெய்வ வழுத்துத் திரட்டு. திருக்குறளோ, எல்லாம் வல்ல முத்தொழிலிறைவன் வழுத்தொடு கூடிய தலைசிறந்த அறநூல். கட்குடி திருக்குறளில் மிக வன்மையாக கண்டிக்கப் பட்டுள்ளது. இருக்கு வேதத்திற் சோமம் என்னும் கட்சாறே 110 மந்திரப் பதிகங்களில் சிறு தெய்வமாக வழுத்தப் பட்டுள்ளது. திருக்குறள் பிறப்பாற் சிறப்பில்லை என்பதை வற்புறுத்திக் கூறுகின்றது; பகவற்கீதையோ மிக நுட்ப வலக் காரமாக, நால் வரணப் பாகுபாட்டை இறைவன் படைத்த பிறவிக் குலமெனக் காட்டுகின்றது. மனுதரும சாத்திரம் உலகிற் கடைப்பட்ட அறக்கேடான நஞ்சு நூல்.

—**பாவாணர்**

---

www.thamizham.net - Free E book No 7507

தமிழர் செய்த தவக்குறை

16-1-81 வெள்ளிக் கிழமை விடியற்காலையில் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் மறைந்தார். மதுரை இராசாசி மருத்துவகத்தில், நெஞ்சடைப்பால் இயற்கை யெய்தினார் என்ற செய்தி கேட்டுத் தமிழகமே ஆழ்ந்த துன்பத்தில் மூழ்கிவிட்டது. பாவாணர் மறைவு தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும். மறைமலையடிகளின் மாணவரான பாவாணர், தமது மாணவராகப் பெரும்புலவர் பெருஞ்சித்திரனாரை உருவாக்கினார், பெருஞ்சித்திரனாருக்குத் தமிழில் பேரார்வமும் அஞ்சா நெஞ்சும் அமையக் காரணியமானார் தமிழுக்காக இரண்டாம்முறை சிறை சென்றவர், பெருஞ்சித்திரனார். பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் அலுவல் முடிவுறுமல் இயற்கை நம்மிடமிருந்து அவரைப் பிரித்துவிட்டது. 13 மடலங்களாக வெளி வர இருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி .. வெளிவந்தால் .... ஆக்சுபோர்டு (எருதந்துறை) ஆங்கில அகர முதலியில் (The Oxford English Dictionory) மூலந்தெரியவில்லை யென்று குறிக்கப்பட்டுள்ள சொற்களுட் சில வற்றிற்குத் தமிழ்மூலம் ஐயந்திரிபற விளக்கம் பெற்றிருக்கலாம். மொழிபெயர்ப்பாளர்களுக்கும் புதுச்சொல் புனைவர்க்கும் தனித்தமிழ் விரும்பியர்க்கும் சொல்லாராய்ச்சியாளருக்கும் பயன்பட்டிருக்கும். தமிழின் சொல்வளம் அயற் சொற்களெல்லாம் தமிழோடு கலவாது தனிமடலமாகத் தொகுக்கப்பெற்றிருக்கும். எல்லாச் சொற்கட்கும் இயன்றவரை வேரும் வரலாறும் வரையப் பெற்றிருக்கும். இனச் சொற்கள் (Corgnats) திராவிட மொழிகளிலிருந்து மட்டுமன்றி, ஆரிய மொழிகளிலிருந்தும் காட்டப் பெற்றிருக்கும். தமிழர் செய்த தவக்குறை கழக இலக்கியங்களில் சிலவே கிடைத்தது போல் பாவாணர் ஆராய்ச்சியும் பாதியில் நின்றுவிட்டது. எனினும் அதையேனும் தமிழக அரசு முயற்சி செய்து, அச்சிட்டு நூலாக வழங்க வேண்டும். ஞாயிறு உள்ள வரை தமிழ்மொழி உள்ள வரை பாவாணர் புகழ் ஓங்கும். வாழ்க தன்னேரில்லாத தமிழ்! வாழ்க தேவநேயப் பாவாணர் புகழ் !!

— நா. நடேசன், திருப்பராய்த்துறை

நோயும் மருந்தும்

ஒரு கொடிய நோய்க்கு ஒரு மருத்துவர் சிறந்த மருந்து காணின், அதை நோயாளி உண்டாலொழியக் கண்டாலும் கொண்டாலும் பயனில்லை. அதுபோன்றே, ஆரிய ஏமாற்றினின்று தப்புவதற்குத் திருவள்ளுவர் வகுத்த சிறந்த முறையைக் கையாளாது, ஆண்டு தோறும் அவர் பெருமையையோ அவர் நூற்சிறப்பையோ அவையோர் மகிழ அடுக்கிக் கூறிப் பயனில்லை. —பாவாணர்

www.thamizham.net - Free E book No 7507

ஒளிச்சுடர் !

ஈடுசெய்ய இயலாத இழப்பைப் பாவாணரின் இறப்பு ஏற்படுத்தி விட்டது. தம் அறிவையும் ஆற்றலையும் இணையற்ற மொழி ஆய்வுத் திறத்தையும் பயன் படுத்தி நம் தாய்மொழியின் சிறப்பை மறுக்க முடியா வகையில் நிலைநாட்டிய பெருந்தகையை அயர்ந்து ஓய்ந்திருந்த நிலையில் அன்று இரவு (7-1-1981) கண்டேன். அவர் நலம் பெறுவாரென்ற நம்பிக்கையோடு திரும்பினேன். அவர் தம்முடைய கடமையை முடித்துக் கொண்டார். நாம் செல்ல வேண்டிய பாதைக்கு ஒளியூட்டும் வண்ணம் அவர் ஏற்றி வைத்துள்ள சுடர் என்றும் எரியும்.

— கு. வெ. கி. ஆசான், கல்வியகம், கோவை-2.

நினைத்தால் நெஞ்சு திடுக்குறுகிறது ! நைந்துருகுகிறது !

அன்பு மிக்க பாவலரேறு அவர்களுக்கு, வாழிய நலம். பாவாணர் பெரும் பணி குறித்து நீங்கள் தமிழக அரசுக்கு விடுத்துள்ள வேண்டுகோளின் அறிக்கையைக் கண்ணுற்றேன். எங்கள் ஆசிரியர் மறைமலையடிகளாருக்குப்பின் தனித்தமிழ் இயக்கத்துக்குத் தகுதி சான்ற தலைவராகவும், உலகமொழிகள் அனைத்துக்கும் மூத்ததாய், தலைமை தாங்குவதாய் ஒப்பற்று விளங்கும் நந் தீத்தமிழின் தனிப் பெருஞ் சிறப்பைப் பலவகையாகவும் வலியுறுத்தி வந்த செம்மலாகவும், திகழ்ந்து வந்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் திடீர் மறைவு தமிழ்நாட்டுக்கே பேரிழப்பாகும். உண்மையிலேயே ஈடுசெய்யவியலாத பேரிழப்பாகும். அவர் பிரிவால் உற்ற பெருந்துயரிலிருந்து விடுபட நமக்கெல்லாம் நெடுங்காலமாகும். அவர் மறைவை இத்தனை நாட்களுக்குப் பின் நினைத்தாலும் நெஞ்சந் திடுக்குறுகிறது; நைந்துருகுகிறது.

உலகத்தமிழ் மாநாட்டுப் பொதுநிலைக்கருத்தரங்கில் அப்பெருமகனார் முதுமைத் தளர்ச்சியையும் பொருட்படுத்தாது மொழியியல் புலமையோடு பேசிய ஆய்வுரையைக் கேட்கும் பேறு எனக்கு

எவ்வளவு துணிச்சல் !

இந் நாடு தமிழ்நாடு ; மக்கள் தமிழ் மக்கள் ; மதம் தமிழ மதம் ; கோவில் தமிழர் கட்டியவை ; தெய்வப் படிமை தமிழர் சமைத்தவை ; தெய்வம் தமிழர் தெய்வம் ; திருக்கோவில் உடைமைகளெல்லாம் தமிழர் தந்தவை ; மக்கள் பேசும் மொழி தமிழ். இங்ஙனமிருக்க பிராமணர் தமிழ் வழிபாட்டைத் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

— பாவாணர்

www.thamizham.net - Free E book No 7507

வாய்த்தது. ஆனால், மூடமக்கள் பலர் கைதட்டி அவர் சொற்பொழிவை விரைவில் முடித்து விடுமாறு செய்த கொடுமையை நினைந்து நான் கண்ணீர் சிந்தினேன். அதுவே அவருக்கு மனத்துயர் அளித்து நெஞ்சு வலியை யுண்டாக்கியிருக்கும் என்று கருதுகிறேன். இரங்கற் கூட்டத்தில் கல்வியமைச்சர் இவ் வுண்மையை ஓரளவு உணர்த்தினார். பொது மக்கள் மட்டுமல்லர்; படித்த மடயர்கள்கூட பகட்டான வெளித்தோற்றத்தையும் ஆரவாரப் பேச்சையும் தான் பாராட்டுகிறார்கள். ஆழ்ந்து அகன்ற பெரும் புலமையையும் நுண்மாண் நுழைபுலத்தையும உணர்ந்து போற்றுவார் அரியராகவே இருக்கின்றனர்.

பாவாணர் ஏற்று வந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத் துறைப்பணியைத தொடர்ந்து நடத்துவது குறித்து நீங்கள் தெரிவித்துள்ள கருத்து சிந்தித்தற்குரியது போற்றத்தக்கது இன்றைய அரசு பாவாணரின் பெருந்தகுதியை நன்குணர்ந்திருக்கிறதென்றே நான் நம்புகிறேன். முதல்வர் பாவாணர் தொடங்கி வைத்த அகர முதலிப் பணிமேலும் சிறக்க - நிறைவுற - ஆவன செய்வார் என்பது உறுதி. கல்வித்துறை அதிகாரிகள் உங்களை நேரில் அழைத்து இதுகுறித்து கலந்து பேசுவது நல்லது.

— நாரண துரைக்கண்ணன், சென்னை-94.

அகர முதலிப் பணி என்னாகுமோ?

மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். மொழியியல் ஞாயிறு - தேவநேயப் பாவாணர் அவர்கள் மறைவு - தமிழ்ப் பேருலகுக்கு ஒரு பேரிடி. தனித்தமிழை நிலைநாட்ட வந்த ஞாயிறு மறைந்த பின், செந்தமிழ்ச் சொற்பிறப்பு அகரமுதலிப்பணி என்னாகும் என்ற வினா பெருவடிவம் எடுத்து நிற்கிறது.

அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர வல்லார் யார் என்ற வினாவுக்குத் தாங்கள்தாம் விடையாக இலங்கவேண்டும் என்பது எம் போன்றோர் அவா. அவர்தம் வாணாளில் தொகுத்து வைத்துவிட்டுச் சென்ற குறிப்புகளைத் துணைக்கொண்டு அகரமுதலிப் பணியை நிறைவுசெய்து தமிழின் பெருமையை நிலைநாட்டும் பெரும்பணியைத்

தமிழ், தமிழன் !

"ஒருநாடு முன்னேறுவதற்கு மொழியே வழியாம். தமிழ் தாழ்த்தப்பட்டதே தமிழன் தாழ்ந்ததற்குக் கரணியம். தமிழன் உயர்வடைய வேண்டுமாயின், தமிழ் மீண்டும் குமரி நாட்டிற்போல் தழைத்தோங்க வேண்டும். தமிழ் என்பது தனித்தமிழே; திரைப்பட மொழியன்று. தமிழைப் போற்றாதவன் தமிழனல்லன்".

—பாவாணர்

www.thamizham.net - Free E book No 7507

தாங்கள் தாம் மேற்கொள்ள வேண்டும். அகரமுதலி வெளிவராமற் போய்விட்டால், நம் பகைவருக்குப் பெருங் கொண்டாட்டமாகப் போய்விடும். நாம் விழித்திருக்கும் போதே வீண் குறும்பு செய்வோர்கள் பெருகிவிடுவார்கள். தமிழால் 'பிழைக்கும்' தறுதலைகள் கூட்டம் தாறுமாறாகத் தலை கால் தெரியாமல் கூத்தாடத் தொடங்கிவிடும். பாவாணர் மறைவால் துடிக்கும் அன்புத் தமிழுள்ளங்கள் அனைத்துக்கும் **தமிழ்ச்சுடர்** சார்பில், எம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— **அன்பு. மணிமுத்து**, தமிழ்ச்சுடர், பழனி.

நண்பரை இழந்து முதுமையில் புலம்புகிறேன்!

அந்தோ மறைந்தார் தமிழ் மாமன்னன்! பண்டித புலவ வித்துவ கீழ்கலைத் தேர்ச்சியாளன் எதிர் நீச்சல் வீரன் ஞா. தேவநேய பாவாணர்.

திருச்சி புத்தூர் பிசப்ஈபர் உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். உள்ளம், உடல் எண்ணம் செயல் அனைத்தும் தமிழ். வறுமை ஒருபால். ஆனாலும் மாதந்தோறும் தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச்செல்விக்குக் கட்டுரை வரையத் தவற மாட்டார். பண்டிதர்கள் எதிர்ப்பு ஒருபுறம்; எதிர் நீச்சலில் துணிந்து முதன் முதல் 'ஒப்பியன் மொழி நூலை' வெளியிட்டார். தாள் கடன் உரு. 150/- அச்சுக் கூலி உரு. 60/-க்குத் தொல்லைப்பட்டார். பலமுறை செய்தித்தாள்களில் அறிக்கையிட்டார் உதவுவார் இல்லை. அடியேன் அச்சுக் கூலி உரு. 60/- கொடுத்து வெளிக்குக் கொண்டு வந்தேன். தமிழ் வள்ளல்களை எல்லாம் அண்டினேன்; பயன் இல்லை. முடிவில் எங்கள் (தென்மாபட்டி) வைக்கம் வீரர் வாசக சாலைக்கு வந்த பெரியார் அவர்களிடம் உரு. 150/- வாங்கிக் கொடுத்துத் தாள் வாங்கிய கடனையும் தீர்த்தேன். நான் கொடுத்த உருபா 60க்கு 40 பொத்தகம் தந்தார். அதே போல் பெரியாருக்கும் 100 பொத்தகம் கொடுத்தார் நான் வாங்கிய 40 பொத்தகம் விற்க 4 மாதம் ஆகியது. அதில் அறிஞர்

தேவமொழி!

"மொழி மக்கள் வாயினின்று தோன்றுவதால், உலகமொழிகளெல்லாம் மக்கள் மொழிகளே. இம் மண்ணுலகில் எங்கேனும் தேவரின்மையால், தேவமொழியுமில்லை. பிராமணன் நிலத்தேவன் என்பது எங்ஙனம் முழுப்பொய்யோ, அங்ஙனமே அவன் முன்னோர் வாயினின்று வந்த மொழியும் தேவ மொழியென்பது முழுப் பொய்யே".

—**பாவாணர்**

www.thamizham.net - Free E book No 7507

அண்ணுவுக்கு ஒன்று ; சம்பத், ஈழத்து அடிகள், ப. சிவாநந்தம் ஆகியோருக்கு ஆளுக்கு ஒவ்வொன்ருயச் சோமரசம் பேட்டை 'சுய மரியாதை மாநாட்டில்' கொடுத்தேன். ஒரு பொத்தகக் கடைக்காரரும் பதிப்பகத்தாரும் இந்நூலை வாங்க முன் வராததோடு அஞ்சவும் செய்தனர். அவ்வளவு தமிழ் மனம் ஆரியத் தாக்குதல்! மதுரை இ. மா. கோ. நிறுவனத்தார் இந்தப் பொத்தகம் தாங்கள் விற்பது அறிந்தால் தங்கள் வாணிகம் படுத்துவிடும் என்ருர்கள். அப்பால் நான் மலேயா, சாவா சென்றுவிட்டேன். திரும்ப வந்ததும், பார்த்தால், ஒவ்வொரு பொத்தக சாலைக்காரர்களும் விற்பனையாளர்களும் ஐயா நூல்களை வெளியிட இசைவு கோரி என்னை நச்சரிக்கத் தொடங்கினர். திருச்சி புத்தூரில் இருந்த ஐயா தமிழ் உணர்வால் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டு அவர் இல்லத்தில் தமிழ்க்கொடி ஏற்றியதால் வேலை இழந்தார். அப்பால் சென்னை முத்தியாலுபேட்டை உயர்நிலைப்பள்ளியிலும் சேலம் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியரானுர். நான் அடிக்கடி வெளிநாடு சென்றதால் தொடர்பு குறைந்து போயிற்று. ஆனுலும் என் நலன் அறியத் தவற மாட்டார் இந்தி எதிர்ப்புப் போர் இறுதியில், ஆங்கிலப் பேரரசுக்கு தமிழ்நாட்டைத் தமிழ்நாடாக ஆக்க வேண்டும் என்று ஒரு குறிப்பு எழுதி அனுப்பினுர். (அதற்கும் அடியேன் உதவியுடன்) என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

உடல் உள்ளம் நாவனைத்தும் தமிழ் முழக்கம்! ஓர் உயர் தனித் செம்மலை, என் அரிய நண்பரை-அரும்பெரும் புலவரை-இழந்த மயக்கம் இன்னும் தெளியாமல் முதுமையில் புலம்புகிறேன்.

1968-இல், திருச்சி தேவர் மன்றத்தில் உலகத் தமிழ்க் கழகம் என்ற கழகத்தைத் தொடங்கி உலகம் முழுவதும் தமிழ் வளர்ச்சி பெற தமிழர் முன்னேறப் பாடுபட்டார் வாழ்நாள் முழுவதும் தமிழ் ஒன்றே அவரின் பேச்சும், மூச்சும். அன்னுரது இழப்பு நம் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும். தமிழன்னையே தலைமகனை இழந்து தவிக்கிருள். அன்னுரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— **திருப்பத்தூர் தொ. வீ. இரா. தொரங்கியா (பிள்ளை)** *திருச்சி-8.*

கொல் குறும்பு :

"இன்று தமிழுக்குக் கொல்குறும்பாக விருந்து ஊறு செய்வார் தமிழை வெறுக்கும் பிராமணரும், இந்தியை பொதுமொழியாக்கு முனையும் மொழிவெறியரும், தென்னிந்திய இந்தி பரப்பற் கழகத்தாருமாவர்".

—**பாவாணர்**

www.thamizham.net - Free E book No 7507

அவர் கொள்கையே நமக்கு உந்து ஆற்றல் !

பேரன்பு கெழுமிய ஐயா, வணக்கம். பாவாணர் ஐயா அவர்களின் மறைவுச் செய்தியை வானொலி வழியாகக் கேட்டேன். தங்களுடன் நேரில் பாவாணரைக் கண்ட பொழுது நான் அஞ்சிய அச்சம் உண்மையாகி விட்டது கண்டு வருந்தினேன். என்ன தீயூழோ நம் மொழிக்கு இத்தகைய தடையை ஏற்படுத்தியிருக்கிறது! இத்தடையினைத் தகர்ப்பார் யாரோ ?

தாங்கள் பெரிதும் மனச்சோர்வுற்றிருப்பதாய்ச் சென்னை போந்திருந்த திரு. தமிழப்பன் வழிக் கேள்வியுற்றேன். தங்களின் மனச்சோர்வு எங்களை மேலும் ஊக்கமிழக்கச் செய்து விடுமன்றோ ? எண்ணிப் பாருங்கள். பாவாணர் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்வதில் இனிக் கவனத்தைச் செலுத்துவோம். அவரின் தனித் தமிழ்க் கொள்கைகள் நமக்கு உந்து ஆற்றலாய் நிற்குமாக.

— **தென்மொழி ந. முத்துக்குமரன், அறி. இ. பல்லடம்.**

அந்தோ ! செந்தமிழ் அரிமாவே !

உயர்திரு ஐயா! வணக்கம். நம் செந்தமிழ் ஞாயிறு, பாவாணர் அவர்கள் மறைவு எம்மை அதிர்ச்சியுறச் செய்தது. உள்ளம் மிக நொந்து நெக்குறுகின்றேன். எதற்கும் அஞ்சாத தமிழ் அரிமா. தனித் தமிழ் இயக்க முன்னோடியை இழந்து விட்டோம். செந்தமிழ் சொற்பிறப்பியற் பேரகர முதலியின் தந்தை! பைந்தமிழ் ஏறு! தனித்தமிழ் ஆறு; நுண்மாண் நுழைபுலத் திருவுரு; தமிழ் அன்னையின் திருவடி சேர்ந்து விட்டார்.

பாவாணர் வாழ்க்கை வரலாறு

மொழி ஞாயிறு **தேவநேயப்பாவாணர்** ஓர் ஊழி அறிஞர். அவருடன் ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுகள் அகப் புறத் தொடர்பு கொண்டும், துணையிருந்தும், அவரின் அரியவாற்றலை உலகுக்கு வெளிப்படுத்தியும், அவரின் அறிவுநலன்களைப் ஊக்கப்படுத்தி வெளிக் கொணர்ந்து மக்களுக் காக்கிய அவரின் தலைமாணாக்கர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**, அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் திட்ட மிட்டுள்ளார். அவரின் இந்தப் பணி மிகவும் செவ்வையாக அமைய வேண்டும் என்பதால் கடந்த காலங்களில் பாவாணருடன் தொடர்பு கொண்ட அறிஞர்கள், மாணவர்கள், அன்பர்கள், நிறுவனங்கள் தங்களளவில் தாங்களறிந்த செய்திகள், புகைப்படங்கள், மடல்கள், கையெழுத்துப்படிகள், பழைய வெளியீடுகள் முதலியவற்றைப், 'பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**, ஆசிரியர் '**தென்மொழி**' சென்னை-5' என்னும் முகவரிக்கு அனுப்பித்தர வேண்டுகின்றோம்.

— **அமைச்சர்.**

www.thamizham.net - Free E book No 7507

அந்தோ ... செந்தமிழ் அரிமா நோக்கே! எம்மை ஏங்க விட்டு விட்டுச் சென்று விட்டீர் ஐயா! உம்மை இனி எங்குக் ... காண்போம். பாவாணர் வழிபற்றி பாவலரேறே எம்மை வழி நடத்தும்.

— இல. வேலரங்கன், தாராபுரம்.

இனியேனும் அரசு உணருமாக!

ஐயா வணக்கம். "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி" முழுவதும் பாவாணரால் எழுதப் பெற்று இக்கால் வெளி வந்திருப்பின் இதுவே தமிழிற்கு வாய்த்த பொற்காலமாகத் திகழ்ந்திருக்கும்; அம்'மொழிஞாயிறு" மறைவால் அத்தகு நல்லூழிக் காலம் தமிழுக்கு வாய்க்கத் தவறி விட்டது; அவரின் முயற்சியை அடித்தளமாகக் கொண்டு அத்திருப்பணியை அரசு நிறைவேற்றினால்தான் தமிழ்த் தொண்டு ஓரளவிற்கு நிறைவுறும்; இன்றேல் அனைவர்க்கும் அன்னைத் தமிழுக்கும் குறைவே! நெருக்கடியான சூழலில் 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் மறைவுற்றது தமிழின்-தமிழனின்-போகூழ்தான் காரணியம்; என்ன செய்வது அத்தகு ஆற்றல் மிக்கவர் இல்லையாயினும் ஓரளவிற்கு ஆற்றல் பெற்றவர்கள் நம்மிடையே

கோலார், தங்கவயல் உ. த. க. வெளியிட்ட

தமிழ் நாட்காட்டி

கருநாடக மாநிலம், உலகத் தமிழ்க்கழகம் தங்கவயல் கிளை வெளியிட்டுள்ள '**தமிழ் நாட்காட்டி**' மிகவும் சிறப்பான முறையில் அமைந்துள்ளது. தமிழ் மாதங்கள் தமிழ் எண்களுடன், ஆங்கில மாதங்களும் எண்களும் சேர்த்து, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், தவத்திருக் குன்றக்குடியடிகளார், புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனார், கலைஞர் மு. கருணாநிதி, மறைமலையடிகளார், அறிஞர் அண்ணா, தமிழ்த் தென்றல் திரு. வி. க. தந்தை பெரியார், பேரா. இலக்குவனார், மறுமலர்ச்சிப் பண்டிதர் க. அயோத்திதாசர், பேரா. கா. சுப்பிரமணியனார் ஆகிய பன்னிரண்டு அறிஞர்களின்-தலைவர்களின் படங்களைப் பெரிய அளவில் மாதத்திற்கு ஒன்றாகக் கொண்டு வெளிவந்திருக்கும் இந் நாள்காட்டி மிகவும் பாராட்டுதற்குரியது. தமிழ் நலப் பயன் கருதிப் பெரும் பொருட் செலவில் வெளியிடப் பெற்ற இந்நாள் காட்டியை அன்பர்கள் கட்டாயம் வாங்கிப் பயன் பெறுவார்களாக.

கிடைக்குமிடம் : உலகத் தமிழ்க் கழகம், தங்கவயல் கிளை,
ஆண்டரசன் பேட்டை(அஞ்)
தங்கவயல்-563113.

விலை : 3 உருபா. (அஞ்சல் செலவுதனி)

www.thamizham.net - Free E book No 7507

இருக்கின்றனர் ; அவர்களை "தமிழ்மொழித்துறை" பயன் படுத் திக் கொள்ள வேண்டும். இனியும் அறிஞர்கள் துன்புற்று வாழ்நாளின் பெரும்பகுதியை வறுமை விழுங்கி அறிவழிவும் உணர்வழிவும் செய்யும் படிக்கு விட்டுவிடக் கூடாது. பாவாணரைத் தக்கபடி தக்க காலத்திலேயே தமிழகத்தை ஆண்ட அரசுகள் நன்கு பய ன படுத்திப் போற்றியிருந்தால் அவரின் பிறவிப் பயன் பல்வகையான் கூடித் தமிழ் மொழிக்கு முழுவதும் கிடைத்திருக்கும் ; அதன் வழித் தமிழின முன்னேற்றம் சற்று உயர்ந்திருக்கும். இதை இனியேனும் அரசியல் கட்சிப் பெம்மான்கள் அறிந்து, உணர்ந்து செயல்படுவார்களாக ! — சி. நா. செந்தமிழ்ச்செல்வன், வேங்கைவாடி(அஞ்).

இரண்டு அரண்களில் ஒன்று தவிர்ந்தது !

ஐயா, பாவாணர் அவர்களின் மறைவு நம் தமிழ் நாட்டிற்கும், தமிழர்களுக்கும் நினைத்துப் பார்க்க முடியாத இழப்பு ஆகும். அகர முதலி முடியும் வரையாவது அவரைத் தமிழன்னை விட்டு வைத்திருக்கக் கூடாதா ? அவர் இடத்தில் யாரை வைத்துப் பார்ப்பது ? முடியாது, யாராலும் முடியாது! சொற்பிறப்பு அகர முதலி என்பது விளையாட்டுத் தனம் அன்று. தமிழன்னையே பெருமைப் படவேண்டிய செயல் - பாவாணர் அவர்களின் தொண்டு அவரின் மறைவு யாருக்கு எப்படியோ, ஆனால் தமிழ் நாட்டிற்கும், தமிழர்களுக்கும் மிக்க மிகுந்த இழப்பாகும். மொழி ஞாயிறு பாவாணரை இழந்து இந்தத் தமிழ் எங்கே உய்யப் போகின்றது-அவரை இழந்து தவிக்கும் அந்த தமிழ் குடும்பத்திற்கும் அவரைத் தமிழ் நாட்டிற்க்கும், ஏன் உலகிற்கும் எடுத்துக் காட்டிய தென்மொழிக் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றேன் தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கட்கு என் துயரம்மிக்க துன்பக் கண்ணீர்த் துளிகளைப் படையலாக்குகின்றேன். தென்மொழி ஆசிரியர் அவர்கட்கு இந்தத் துயரம் நிறைந்த நிலையிலும் பணிவு கலந்த ஒரு வேண்டுதலையும் கனிவுடன் தெரிவிக்கின்றேன். நின்று விட்ட அகர முதலிப் பணி தொடரவும், செயல் தொய்வு இல்லாமல் நடக்கவும் தக்க வினைப் பாட்டைத் தாங்கள் செய்வீர்கள் என்று நம்புகின்றேன். மொழிக் காவலுக்கு இரண்டு வலிய அரண்கள் இருக்கின்றன என்று

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அந்தமான் செலவு

அன்பர்கள் அழைப்பினை மேற்கொண்டும் தொடர் சொற்பொழிவுகளின் பொருட்டும் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** வரும் ஏப்பிரல் திங்களில் அந்தமான் தீவுக்குச் செல்ல விருக்கின்றார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். புறப்படும் நாள் நேரம் முதலியன பின்னர் தெரிவிக்கப் பெறும்.

www.thamizham.net - Free E book No 7507

பெருமை பாவாணர் மறைவிற்குப் பின்னர் பொசுக்கு என்று இருக்கின்றது. எஞ்சிய அரணுகிய தாங்கா எங்களுக்கு இந்தச் சூழ்நிலையில் எப்படி ஈடு செய்ய போகின்றீர்கள். காலம் தான் இந்த ஏதிலித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி தரும்.

என்ற குறளைக் கூறி கண்ணீர்த் துளிகளுடன் முடிக்கின்றேன்.

— க. க. **ஆறுமுகம்**, அவனுசி.

குமரிவரலாறு கண்ட கோன்!

மொழிஞாயிறு, மொழிநூல் முதறிஞர் பா. தேவநேயப் பாவாணர் அவர்கள் மறைவு தமிழ் கூறும் நல்உலகிற்கு என்றும் ஈடுசெய்ய முடியா பேரிழப்பாய் அமைந்து விட்டது. ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு அவரின் மறைவுக்கு ஊன்று கோலாய் அமைந்துவிட்டது. இடமாற்றம் அவரின் உயிரை பறித்துக் கொண்டது. திரவிடஇனம் அரியணையேறி பதினான்கு ஆண்டுகள் ஆகியும், அடிவருடிகளும், கருங்காலிகளும், விடணக்கும்பல்களும் பல்கிப்பெருகித் தமிழுக்கு மாசுகற்பித்த நேரத்தில், பாவாணர் மொழிஞாயிறாய்த் தோன்றினார். ஆரிய எதிர்ப்பைத் தம் நுண்மாண் நுழைபுலத்தால் தகர்த்தெறிந்த

பாவாணர் பாவலரேற்றிற்கு எழுதிய பன்னூறு மடல்கள்

சேலத்தில் பாவாணரும் பாவலரேறும் ஒருவரோ டொருவர் 1953 வரை மிக, அணுக்கமான முறையில், ஆசிரிய மாணவராயும், நட்பினராயுமிருந்து, தமிழ் மொழி, இன நலன்களில் ஒன்றி ஈடுபாடு கொண்டிருந்தனர். பின்னர் பாவலரேறு அரசுப் பணிக்கென 1954-இல் புதுச்சேரி சென்றார். புதுவையில் பாவேந்தர் பாரதி தாரசனரின் துணையுடனும் அவரின் வலிந்த பரிந்துரையுடனும் பாவாணரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திரவிட மொழியியல் வாசகராக அமர்த்துதற்குப் பாவலரேறு அரும்பாடு பட்டு வெற்றியும் கண்டார். அன்றிருந்து பாவாணரின் இறுதிக்காலம் வரை பாவல ரேற்றிற்கு அவர் எழுதிய நூற்றுக் கணக்கான மடல்களில் பெரும் பாலானவை பொதுநலன் கருதியன. தமிழ்நாட்டு நிலைகள், தமிழ் மொழி முன்னேற்ற முயற்சிகள், தமிழகத் தலைவர்கள் பேராசியர்கள் தம் உண்மை நிலைகள் ஆகியவை பற்றி அம்மடல்களில் பாவாணர வர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அம்மடல்கள் காலத்தால் விரைந்து நூல் வடிவாக வரவிருக்கின்றன என்பதை அன்பர் களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

www.thamizham.net - Free E book No 7507

பலருடன் பாவாணர்



கிண்டி, 'பொறியியற் கல்லூரி
மாணவர்களுடன்



அன்பர்களின் கருத்தை
அன்புடன் கேட்கும் உளத்தினர்

உ. த. க. தலைவர் பாவாணரும்
முதல் பொதுச்செயலாளர்
பாவலரேறுவும்



பாவாணரும்
குன்றக்குடி யடிகளும்



வ. சுப. மாணிக்கனார்
பாவாணர்

www.thamizham.net - Free E book No 7507

1980-இல் திருவள்ளுவர் நாளன்று செந்தமிழ்ச் செல்வர் பட்டத்தைப் பாவாணர்க்கு முதல்வர் சூட்டிக் கேடயம் தந்த காட்சிகள்



அறிஞர்களுடன் பாவாணர்

சட்டமன்ற அவைத்தலைவரும்
செந்தமிழ் மொழித்தலைவரும்

மொழி ஞாயிறு அவர்களுக்கு
முதல்வர் பொன்னாடை போர்த்திப்
பதக்கம் வழங்குகிறார்.

தமிழ்க்கேடர்களைச் செகுத்த
தனித்தமிழ்த் தலைவர்க்குத்
தமிழக முதல்வர் கேடயம் வழங்கி
வணங்குகிறார்

www.thamizham.net - Free E book No 7507

தமிழ் அரிமா ! தமிழ்ப் பெருங்கடல் ! குமரி வரலாறு கண்ட கோன் ! தமிழ்வானில் சுடர் விட்டு எரிந்த விண்மீன் ! அவரை வாழ்நாள் எல்லாம் புகழலாம் ! அடிகளாரால் கால்கோளிடப் பெற்றுப் பாவேந்தரால் கட்டப் பெற்றுப் பாவாணரால் செம்மாந்து நின்ற தனித்தமிழ் இயக்கம், பாவலரேறு தலைமையில் இன்று "ஆற்றல் அதுவே படை" என விளங்குகிறது.

— மு. செகந்நாதன், திருவண்ணாமலை.

சொற் பிறப்பியல் ஆய்வுக்கு யாருளர் ?

அன்பிற்சிறந்த அருமை நண்பரீர் ! வாழ்க ! வணக்கம் இன்று தாங்கள் விடுத்த "அரசுக்கு வேண்டுகோள்" அறிக்கை கிடைக்கப் பெற்றேன் காலத்தினால் தாங்கள் மேற்கொண்ட தமிழ் வாழ்வுக்கு ஆன அந் நன்முயற்சி ஞாலத்தின் மாணப் பெரிதே பாவாணர் இழப்பு ஈடு செய்தற்கரிதே. நம்மடிகட்குப் பின்-தனித்தமிழ் காக்க-வளர்க்கத் தாங்கள் நீடுழி வாழ்க என சிவபெருமானை இறைஞ்சுகின்றேன். ஆனால் தமிழ்ச்சொற்கள் பிறப்பியல் ஆய்வுக்குப் பாவாணர் போல் யாருளர் ? அவர் போல் அத்துறையில் அறிஞர்கள் தோன்ற அம்மையப்பனருள் செய்வானாக. மற்றொரு பெருமுயற்சி, எங்கும் தமிழே-தனித்தமிழேயாகத் தாங்கள் மேன்மேலும் கிளர்ந்தெழ வேண்டும். சொல்லாய்வு முயற்சி பயன் பட எங்கும் எதிலும் தமிழிருந்தால் தானே ! உலகத் தமிழ் மாநாட்டின் பயன் எங்கும், எவ்விடத்தும் தமிழே திகழ்தல் வேண்டுமல்லரோ ? முயல்வோம.

— மறை. திருநாவுக்கரசு, (மறைமலையடிகள் மகனார்) சென்னை-32.

தங்கள் கருத்து தக்கதுவே !

பேரன்புப் பெருந்தகையீர் ! வணக்கம். அண்மையில் தாங்கள் அனுப்பிய அறிக்கை மடல் கிடைத்தது. மிக மகிழ்ச்சி ; நன்றி. தாங்கள் தெரிவித்துள்ள கருத்துகள் தக்கனவே. எப்படியும் நிலையான தமிழ் வளர்ச்சிப் பணிகள் நடக்கவேண்டும் என்பதுதான் நமது இடைவிடாத விருப்பம். வணக்கம். மிக்க அன்புடன்.

— பர். பொற்கோ, சென்னை-5.

தமிழினமே, நீ உருப்படியாவாயா ?

மொழிஞாயிறு பாவாணர் புகழ் ஓங்குக! பைந்தமிழ் அரிமா விடுதலை மறவர் பாவலரேறு வாழ்க ! தமிழ்நாடு தனிநாடு.

மொழிஞாயிறு தன் கதிர் வீச்சை நிறுத்திக் கொண்டதா ? தமிழ்யானை தன் பிளிறலை அடக்கிக் கொண்டதா ? தமிழ் அரிமா தன் இடிமுழக்கத்தை மறந்து விட்டதா ! ஐயோ, எங்கள் பாவாணர் ஐயா மறைந்து விட்டாரா ! என்னால் நம்ப முடியவில்லையே ! இனி

www.thamizham.net - Free E book No 7507

முதலமைச்சர் பெயர் மாற்றிக் கொள்வாரா ?

பாவாணர் மறைவு குறித்துத் தி. பி. 2012 சுறவம் 16 (29-1-81) அன்று சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் பாவாணரைத் தமிழ்த் தெய்வம் என்று போற்றியுரைத்தார். அன்றியும் தமிழ் நாட்டிலுள்ள நூல்நிலையங்களுக்கெல்லாம் பாவாணர் பெயர் சூட்டப் படும் என்று அறிவித்துள்ளார்.

முதல்வரின் நல்ல உள்ளத்தையும், தமிழ் உணர்வையும் தலை தாழ்த்தி வணங்குகின்றோம்.

பாவாணர் தமிழர்கள் அனைவரும் தமிழ்ப்பெயரே தாங்க வேண்டும் என்று பெரிதும் விழைந்தார். அவரே பல்லாயிரம் மாணவர்கட்டும் தொண்டர்கட்கும் தமிழ்ப் பெயர் சூட்டி வழங்கு

(முன்பக்க தொடர்ச்சி)

தமிழகம் என்ன செய்யப் போகிறது ? தமிழே, நீ என்ன செய்வாய் ? தமிழும் தமிழகமும் ஐயா இல்லாமல் நடுத் தெருவில் நிற்கின்றனவே ஐயாவின் தமிழறிவு இனி யாருக்கு வரும் ? ஒரு சொல்லை எடுத்துக் கொண்டால் அதன் கடைகாலையே பறித்து எடுக்கும் அறிவாழம் வாய்ந்த வேழத்தை இழந்து நிற்கிறோமே ! ஏ ! தாழ்ந்த தமிழகமே ! நீ, ஐயாவின் அறிவில் ஒரு விழுக்காடு கூட பயன்படுத்திக் கொள்ள வில்லையே ! நீ உருப்படுவாயா ? கண்ட அரசியல் சாக்கடைகளின் பின் ஓடும் தமிழ்க் கூட்டமே ! நீ என்று உண்மைத் தமிழ்த் தலைவர்களின்பின் வரப்போகிறாய்? நீ வரமாட்டாய் ; உனக்கு விடிவில்லை. அடிமையாய் இருந்தே உன் தோல் தடித்துப் போய் விட்டது. உனக்கு ஒன்றும் உறைக்காது. பாவாணர் ஐயாவும் பாவலரேறு ஐயாவும் உரைத்தே உனக்கு உறைக்க வில்லை என்றால், நீ விழித் தெழுவாய் என்பது நடக்கிற செயலன்று !

"ஆரியர்க்குப் பாய் விரித்தாய் ; ஆங்கிலர்க்குக் கற்பிழந்தாய்! பூரியர் செய் இந்திக்குப் பொற்பிழந்தாய்;" இன்னும் யார் யார்க்கோ வால் பிடிக்கின்றாய். இனி உருப்படி யாகாதடா தமிழகம், உருப்படி யாகாதடா ?

பாவாணர் ஐயா, பாவலரேறு ஐயா சொல் கேளாத் தமிழகமே ! நீ வீழ்ந்து படுக ! பாவாணர் ஐயா, பாவலரேறு ஐயா சொல் கேளாத் தமிழினமே ! நீ அழிந்து படுக !

சாவிலும் தமிழ் கலந்தே சாக வேண்டும்-என்
சாம்பலும் தமிழ் மணந்தே வேக வேண்டும்.

— வீ. இறையழகன், ரோகா, பம்பாய்

www.thamizham.net - Free E book No 7507

பாவாணரும் ஏதன் தோட்டமும்

பாவாணரின் பெற்றோர் சீர்திருத்தக் கிறித்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் கிறித்தவ முறைப்படியே வளர்க்கப் பெற்ற அவர் ஏசு பெருமானைப் பற்றி இசைப் பாடல்கள் சிலவற்றையும் இயற்றியுள்ளார்

வாழ்நாள் முழுதும் கடவுள் நம்பிக்கையோடும் பற்றோடும் வாழ்ந்தார் பாவாணர். ஆயினும் கோயிலுக்குச் செல்வதையோ மதச் சடங்குகளைக் கடைப்பிடிப்பதையோ கடப்பாடாகக் கொள்ளவில்லை.

தமிழர்மதம் சிவனியமும் மாலியமுமே என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ள அத் தமிழ்ப் பெரியார் கிறித்தவமதத்திலிருந்து மாறவுமில்லை; வேறெதனையும் தழுவவுமில்லை. அதற்கு அவர் கூறிய கரணியம் வியப்பானது.

குமரிக் கண்டமே மாந்தன் பிறந்தகம் என்னும் கொள்கையை விரிவான தம் ஆராய்ச்சிகள் மூலம் பாவாணர் பெரிதும் வலியுறுத்திவந்தார்.

மாந்தன் முதன் முதலில் தோன்றிய இடம் ஏதன் தோட்டமே என்பது கிறித்துவமதக் கொள்கையாதலால், குமரிக்கண்ட உண்மையைக் கிறித்தவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்

கிறித்தவ மதத்தவர் அல்லாதார் ஏதன் தோட்டத்துக் கதையை மறுத்துக் குமரிக் கண்டமே மாந்தன் பிறந்தகம் என்று கூறுவதை விடக் கிறித்தவ மதத்தில் பிறந்த ஒருவரே அவ்வாறு கூறுவதுதான் வலிவாகவும் சிறப்பாகவும் இருக்குமென்றும், அதனால்தான் இறைவன் தம்மைக் கிறித்தவ மதத்தில் பிறப்பித்தான் என்றும் பாவாணர் கூறிவந்தார்.

— இறை.

(முன்பக்க தொடர்ச்சி)

வித்தார். தமிழர்கள் அனைவரும் எல்லா வகையிலும் முழுமையான தமிழராக வாழ வேண்டும் என்பதே பாவாணரின் விருப்பம்.

உலகத் தமிழ் மாநாட்டில் அவர் நிகழ்த்திய இறுதிப் பேருரையில் முதலமைச்சரை அழகு மதியார் (இராம-அழகு, சந்திரன்-மதி) என்று தமிழ்ப் பெயர் சூட்டிக் குறிப்பிட்டார்.

பாவாணரைத் தெய்வமாகப் போற்றும் முதலமைச்சர் நூலகங்களுக்கு அவர் பெயரைச் சூட்டுவதைவிடத் தம் பெயரை அழகு மதியார் என்று மாற்றிக் கொள்ளுவதே பாவாணர்க்குக் காட்டும் நன்றியும் மதிப்புமாகும். தமிழர்க்கு எழுச்சி யூட்டும் நற்பணியாகவும் அமையும் முதல்வரின் புகழும் சிறக்கும்.

முதலமைச்சர் செய்வாரா ?

இவ்வகையில் மேனாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியும் தம் பெயரை அருட்செல்வனார் என்று மாற்றிக் கொள்ளுவராயின் நன்று !

— இறை.

www.thamizham.net - Free E book No 7507

மொழிநூல் ஆசிரியர்க்குத் தேவையான மூல அறிவு நிலைகள்

(மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கருத்துகள்)

1) மொழிநூற் கலை, ஆய்வுநிலை (Emperical Stage), பாகுபாட்டுநிலை (Classificatory Stage), கொண்முடிபு நிலை (Theoritical Stage) ஆகிய முந்நிலைப்படும்.

ஆய்வு நிலையாவது, மொழிகளைத் தனித்தனி ஆராய்தல்; பாகுபாட்டு நிலையாவது, தனித்தனி ஆராய்ந்த மொழிகளைச் சொற்களிலும் இலக்கணத்திலும் உள்ள ஒப்புமைபற்றி, பல குடும்பங்களாகவும் அக் குடும்பங்களைப் பல குலங்களாகவும் வகுத்தல். கொண்முடிபு நிலையாவது, ஒரு குடும்ப மொழிகட்குள்ளும், பல குடும்பங்கட்குள்ளும், பல குலங்கட்குள்ளும், உள்ள தொடர்பையும், அவற்றின் நிலைகளையும், ஒலிநூல் (Phonology), உளநூல் (Psychology) முதலிய கலைகளையும் துணைக்கொண்டு, எல்லா மொழிகட்கும் பொதுவும் அடிப்படையுமான ஒரு மூலமொழியைக் கண்டுபிடித்தற்கான நெறிகளை ஆராய்ந்து அதைக் கண்டுபிடித்தல்.

2) பலர் மொழிநூல் ஒரு தனிக்கலையென்பதை இன்னும் அறிந்திலர். இலக்கிய இலக்கணப் புலமை வேறு. மொழிநூற் புலமை வேறு; (இலக்கிய இலக்கணப் புலமை என்பது கடலில் எடுக்கப்பெறும் முத்துகளின் திறமுணர்தலும், அழகுணர்தலும், தரம்பிரித்தலும், மாலை புனைதலும், அழகு நுகர்தலும் போலாகும். மொழிநூற் புலமை என்பது முற் கூறப் பெற்ற உணர்வுத் திறன்களுடன், அக் கடலுள் மூச்சடக்கி மூழ்கி முத்துகளை வெளிக் கொணர்தலும் ஆகும் என்று பாவாணர் விளக்கம் கூறுவர்.)

3) மொழிநூல் பிறகலைச் சார்புள்ளது. அது கணிதத்தைப் போலப் பிறகலை சாராத கலையன்று. மொழிநூலின் ஒவ்வொரு கூற்றும், அவ்வக் கலைக்குப் பொருந்தியதாயிருத்தல் வேண்டும்.

எழுத்தொலிகளை ஒலிப்பதில், வயிறு, நுரையீரல், மூச்சுக்குழல், தொண்டை, நா, அண்ணம், பல், உதடு, மூக்கு ஆகிய பலவுறுப்புகள் தொடர்புறுவதால், உடல் நூலும் (Physiology);

உள்ளக் கருத்துகளின் வெளிப்பாடே மொழியாதலின், உளநூலும் (Psychology);

மொழிகளைப் பேசும் மக்களின் இடமாற்றத்தையும் நாகரிக வளர்ச்சியையும் அறிந்திருக்க வேண்டியதால் வரலாறும் (History);

தட்ப வெப்ப நிலைக்கும் அவ்வந்நாட்டுப் பொருள்கட்கும் தக்கபடி, ஒலியும் சொல்லும் மாறுபடுவதால் திணைநூலும் (Geography);

(ஆங்கிலத்திலுள்ள Teak என்னுஞ் சொல், தேக்கு என்னுந் தமிழ்ச் சொல்லே என்பதற்குத் திணைநூல் (Geography) சான்றாகும்.

www.thamizham.net - Free E book No 7507

இந்தியாவில், விந்திய மலைக்கு வடக்கே தேக்கு வளர்வதில்லை என்று இராகொசின் (Rogozin) தமது 'வேத கால இந்தியா' (Vedic India) என்னும் நூலில் குறிக்கின்றார்.)

நாகரிக மக்களின் மொழிகள், மதவியலைப் பெரிதும் தழுவி யிருப்பதால் மதநூல் (Theology), பழமை நூல் (Mythology), பட்டாங்கு நூல் (Philosophy) முதலிய கலைகளும்;

இன்னும், சுருங்கக் கூறின் பலகலைகளும் மொழிநூற் பயிற்சிக்குத் தெரிந்திருத்தல் வேண்டும்.

4) மொழிகளெல்லாம் ஓரளவில் தொடர்புடையன. மொழிகளுக்குள் இன அளவிற்குத் தக்கபடி ஒப்புமையிருக்கும். (எனவே) மொழிகளை ஆராயும் போது முன்னை மொழியை முன் வைத்தும், பின்னை மொழியைப் பின்வைத்தும் ஆராய வேண்டும்.

5) மொழிநூல் ஆராய்ச்சிக்கு வேண்டிய மனவிரிவையடைதற்கு, ஆங்கிலத்தில் மோரிசு (Morris) ஆங்கசு (Angus), இசுக்கீத்து (Skeat), சுவீட்டு (Sweet), விட்னி (Whitney) முதலியோர் எழுதிய இலக்கணங்களைப் படித்தல் வேண்டும்.

6) மொழிநூல் பயிற்சிக்கு (பல வேற்று, அண்டை, அயல்) மொழிகளின் இலக்கணமும் அகரமுதலியும் போதிய கருவிகளாம்.

7) ஒரு சொல்லின் பொருளையும் மூலத்தையும் அறிதற்கு, இலக்கணமும் சொல்லியலும் (Etymology) தெரிந்திருக்க வேண்டும். இல்லா விட்டால், போலியொப்புமையால் வழு முடிபிற் கிடமாகும். (கண்டி, பாராளுமன்று என்னும் தமிழ்ச் சொற்கள், Condemn, Parliament என்னும் ஆங்கிலச் சொற்களுடன், ஒலியிலும் பொருளிலும் ஒத்திருக்கின்றன. ஆனால், சொல்லியலை நோக்கின், அவை சிறிதும் தொடர்பற்றவை என்பது தெளிவாகும்.

Condemn - L. Condemno, from 'Con' intensive, damno, to damn.

Parliament - Lit. 'a parleying or speaking', Fr. Parlement - Parler, to speak, ment, a Lat. suffix.

பாராளுமன்று என்பது பார், ஆளும், மன்று என்ற முச்சொற் களால் ஆனதாயும், Parliament என்பது ஒரே சொல்லாயும் இருத்தல் காண்க.

சொற்கள் பெரும்பாலான மொழிகளிற் காலந்தோறும் வேறு படுகின்றமையின், அவற்றின் மூல வடிவையறிந்தே பொருள் காண வேண்டும்.

8) மொழிகளுக் கிடையில் உள்ள தொடர்பைக் காண்பதற்கு மூவிடப்பெயர், வினப்பெயர், முகாமை முறைப் பெயர், எண்ணுப்

www.thamizham.net - Free E book No 7507

பெயர், தட்டுமுட்டுப்பெயர், சினைப்பெயர், வா, போ என்பன போன்ற முகாமை வினைகள் என்பனவே போதுமாயினும், பல சொற்களும் தெரிந்திருப்பின் சொல்லியல்பும் சொற்பொருளும் விளக்கப் பெறுதலின் அகரமுதலியையே துணைக் கொள்வது மிகச் சிறந்ததாகும்.

9) ஒரு மொழியறிவு பிறமொழியறிவுக்குத் துணையாகும். ஒரு மொழியின் இயல்பையும் வளர்ச்சியையும் அறியத்தக்க பல நெறிமுறைகள் பல மொழிகளிலும் பரவிக் கிடத்தலாலும், மொழிகளை அறிய அறிய ஒருவரின் அறிவு பெருகுவதாலும், ஒவ்வொரு மொழியின் அறிவுக்கும் பிறமொழியறிவு ஏதேனும் ஒருவகையில் உதவுவதேயாகும்.

10) மொழியாராய்ச்சியாளர்கள் முதலில் தம் தாய்மொழியையும் பின்னரே அயன் மொழியையும் கற்றல் வேண்டும். ஒருவர் கல்லாமலே தம் தாய்மொழியில் பேசக்கூடுமாயினும் அதன் மரபையும் இலக்கணத்தையும் கற்றே யறிய வேண்டிய திருக்கின்றது. தாய்மொழியியல்பை அறியுமுன் அயன்மொழியை விரிவாய்க் கற்பவர் அயன் மொழி வழக்கைத் தாய் மொழியிற் புகுத்திவிடுவர்.

11) உலக மொழிகளின் முக்குலத் தாய்களும் ஒரே மூலத்தின என்று, சென்ற நூற்றாண்டிலேயே, மாக்சு முல்லர் தேற்றமாய்க் கூறிவிட்டார்.

பண்டைக் காலத்தில், ஆரியர் வருமுன். இந்தியா முழுவதும் பல மொழிவழக்குகளாக வேறுபட்ட ஒரே மொழி (தமிழ்) வழங்கினதாகச் சில தொல்காப்பியக் குறிப்புகளாலும், மொழிநூலாராய்ச்சியாலும் அறியக் கிடக்கின்றது ஆரியர் வந்தபிறகும் கூட, உண்மையான மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டவை, வடக்கில் சமசுக்கிருதமும் தெற்கில் தமிழுமாக இரண்டேயென்பது, **வடமொழி**, **தென்மொழி** என்னும் அவற்றின் பெயர்களாலேயே அறியப்படும். இன்றும், தென்னாட்டு மொழிகளையெல்லாம் தமிழுள்ளும், வடநாட்டு மொழிகளை யெல்லாம் சமசுக்கிருதத்திற்குள்ளும் அடக்கி விடலாம். திரவிடக் குடும்பம் முழுதும் தமிழுக்குள் அடங்குவது போலப் பிற குடும்பங்களும் ஒவ்வொரு மொழிக்குள் அடங்கி விடும். இந்த முறையையே தொடர்ந்து பின்பற்றினால், இறுதியில் துரேனியம் ஆரியம், சேமியம் என்னும் முக்குலநிலைகளே எஞ்சி நிற்கும். அவற்றையும் ஒன்றுபடுக்குவதற்குரிய நெறிமுறைகள் இல்லாமற் போகவில்லை.

(நோவாவுக்கு முந்தியகாலத்தில், கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்) 'உலகம் முழுவதும் ஒரே மொழியும் ஒரே பேச்சுமாய் இருந்தது' என்று, கிறித்தவ மறையில் ஆதியாகமம் 11-ஆம் அதிகாரம் முதற்கிளவியில் கூறப்பட்டுள்ளது. (மொழி நூலாசிரியர் இவற்றைத் தெளிவாக உணர்ந்திருத்தல் வேண்டும்.)

www.thamizham.net - Free E book No 7507

12) மேலும், அவர் கீழ்க்காணும் உண்மைகளைத் தெரிந்திருத்தல் வேண்டும் :

1) ஓர் இயற்கை மொழி தோன்றும் வழிகள்.

1) ஒப்பொலிக் கொள்கை. (Onomatopoeic Theory)
2 உணர்ச்சி யொலிக் கொள்கை (Interjectional Theory)
3) சுட்டடிக் கொள்கை (Demonstrative Theory)
இவையன்றி வேறுபல வழிகளிலும் தோன்றும்.

2) இயற்கை மொழியில் இடுகுறிச் சொல் இராது.
3) உலக முதன்மொழி தோன்றிய முறையை ஓர் இயற்கை மொழியில் தான் காணமுடியும்.
4) வரலாற்றால் ஏனை மொழிக்குள் அடக்கப்படாத முன்னை மொழிக்கே மூலமொழி ஆய்வு ஏற்கும்.
5) மொழி மாந்தன அமைப்பே. தேவமொழியென்று உலகத்தில் ஒரு மொழியுமில்லை. மொழி மக்கள் கூட்டுறவாலாயது.
6) மொழி அசைகளாகவும் சொற்களாகவும் தோன்றிற்று.
7) மொழி ஒரே சமயத்தில் உண்டானதன்று.
8) ஒரு மொழி பல சிறு மொழிகளாகப் பிரியும் கரணியங்கள்.
9) ஒரு மொழி திரிதற்குரிய கரணியங்கள்.
10) ஒரு மொழி வழக்கழிதற்குரிய கரணியங்கள்.
11) புதிதாய் ஒரு மொழி தோன்றுவதற்குரிய கரணியங்கள்.

13) மொழிநூலார்க்கு முகாமையான இரண்டொரு மொழிகளிற் பேசுந்திறனும், பிறமொழிகளின் இலக்கணவறிவும் சொல்லறிவும் இருத்தல் வேண்டும். பலமொழிகளைப் பேச வேண்டும் என்னும் கட்டாயமில்லை.

14) மொழி நூற்கலைக்கு நடுவுநிலையும் பொறுமையும் வேண்டும்.

15) ஒப்பியலறிவு மொழி நூலாய்வுக்குக் கட்டாயம் தேவை.

—ஒப்பியன் மொழிநூல்-பாவாணர்.

'தென்மொழி' சென்னை-5

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	15 உருபா	35 உருபா	35 ,,
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ்:	1.25 ,,	3 ,,	3 ,,

ஒரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7507

பாவாணர் இரங்கல் நிகழ்ச்சிகள்

(பாவாணர் மறைவுக்கு நாடெங்கிலுமுள்ள நூற்றுக்கணக்கான தமிழ்வளர்ச்சி மன்றங்கள், கழகங்கள், இயக்கங்கள் இரங்கல் தெரிவித்து ஊர்வலம் நடத்தியும் தீர்மானம் நிறைவேற்றியும் செய்திகள் விடுத்துள்ளன. அவற்றைத் தனித்தனியாக வெளியிட இடமின்மையால், சுருக்கமாக அவற்றின் பெயர்கள், ஊர்கள், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட முகாமையானவர் பெயர்கள் மட்டிலும் இங்கு வெளியிடப் பெறுகின்றன.)

1) உ. த. க. திருச்சி நகரக் கிளை :

திருச்சி, இளங்கோ பொத்தக நிலையத்தில் சுறவம் 3-இல் திரு. பழ குமரப்பனார் தலைமையில் கழகத்தின் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் பரமசிவம், அ. செல்லத்துரை, பெ. வெற்றிக்கூத்தன், தி. சா. நாகராசன் ஆகியோர் கலந்து கொண்டு இரங்கல் தெரிவித்தனர்.

2) தமிழர் நட்புமன்றம், பாவேந்தர் இலக்கிய அணி, தமிழ் மன்றம், திராவிடர் கழகம் — கடத்தூர் :

மேற்படி மன்றங்கள் அனைத்தும் சேர்ந்து, கடந்த 17-1-81 மாலை இரங்கல் ஊர்வலமும் உரையும் நிகழ்த்தின.

3) தமிழ் இலக்கிய மன்றம், கிள்ளான் மலேசியா :

'தமிழுலகின் மொழிஞாயிறான நுண்மாண் நுழைபுல மிக்க பாவாணர் அவர்கள் தனித்தமிழ் வழிகாட்டியாவார். அன்னார் தென்மொழிக் குடும்பத்தால் புரக்கப் பெற்றவராகவே வாழ்ந்து, தனித்தமிழர் உயர்வுக்காக மெய்ம்மையுடன் உழைத்தார். அவரை யிழந்தது தமிழகம் மட்டுமன்று, உலகத்தமிழர்கள் அனைவரும் தம் நெஞ்சத்தை இழந்து விட்டனர். அவர் உடம்பொடு இருந்தால் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவாரோ அவற்றை யெல்லாம் இனி, பாவலரேறும் அவர் உடன்பிறப்புகளான தென்மொழிக் குடும்பத்தாரும் தனித்தமிழாய்வாளர்களுமே நிறைவேற்ற வேண்டும்' என இரங்கல் தெரிவித்து மன்றச் செயலாளர் திரு. இர. ந வீரப்பன் அறிக்கை விடுத்துள்ளார்.

4) உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், மலேசியா.

தனித்தமிழ் நெஞ்சாங் குலையான மொழிஞாயிறு பாவாணர் மறைவு குறித்து உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம் தனது ஆழ்ந்த இரங்கலை உலகத்தமிழர்கள் சார்பில் தெரிவிப்பதாக, அதன் தலைவர் திரு இர. ந. வீரப்பன் தெரிவிக்கிறார்.

5) திருவள்ளுவர் மன்றம், கூகலூர் ஈரோடு வழி

கடந்த 18-1-81 மாலை ஆறுமணியளவில் கூகலூர் திருவள்ளுவர் மன்றம் இரங்கல் கூட்டம் நடத்திக் கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றியது.

www.thamizham.net - Free E book No 7507

'தமிழ்ப் பண்பார்ந்த, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அனைய மொழிப் பேரறிஞர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றுவர். தேவநேயம் என்னும் மொழிநிறை மாமலை சாய்ந்தது. பொய்ம்மைக் கலைகள் மலிந்த மொழியடவியல் உலவி வந்த அரிமா ஓய்ந்தது. தேவநேயத் தீந்தமிழைத் திசையெங்கும் பரப்பும் திருத்தொண்டு புரிவோமாக".

6) மறைமலையடிகள் மன்றம். பு. புளியம்பட்டி.

'அடிகளாருக்குப்பின் தனித்தமிழுக்குத் தலைவராக அனைவராலும் மதிக்கத் தக்கவராக விளங்கிய பேரொளி அணைந்து விட்டது. இனி, நாம் என்ன செய்வது? யாரைக் கொண்டு இந்த இடத்தை நிரப்புவது? எங்கள் நிலையே தாங்கிக் கொள்ள இயலாததாக இருக்கிறது! உங்கட்கு யார் ஆறுதல் சொல்ல இயலும்? இவ்வுலகில் நீங்கள் மதித்துத் தலைவணங்கும் அறிஞர் பெருமக்களில் தலைவராக வன்றோ ஐயா விளங்கினார்' — என்று மறைமலையடிகள் மன்றச் செயலாளர் திரு. கா. இளமுருகன் பு. புளியம்பட்டி இரங்கல் தெரிவித்துள்ளார்.

7) தென்மொழி இயவம், கோவை.

'அன்னைத் தமிழுக்கோர் அணையா விளக்காக அன்புத் தமிழனுக்கோர் அறநெறியாக, தென்மொழி அன்பர்க்கொரு முத்தமிழ்ச் சுவையாக, தனித்தமிழரிமாவாக, எமக்கெல்லாம் உண்மைத் தமிழை அள்ளி அள்ளி வழங்கிய எமதருமைத் தமிழ் வள்ளலாகப் 'பாவாணர்' என்று எம்மால் அன்போடும் உரிமையோடும் அழைக்கப் பெற்ற மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அய்யா அவர்களே! மாத்தமிழனின் மடைமையை எண்ணி மறைந்தீரா, இல்லை எமக்கெல்லாம் தமிழ் உரம் ஏற்றிய தங்களின் உரம் குன்றச் செய்த கொடுமையாளர்களை எண்ணி மறைந்தீரா? எதற்குமே கலங்காத நாங்கள் இன்று தங்கள் மறைவால் கலங்குகிறோமய்யா; கலங்குகிறோம்...! எங்குமே தாழாத எம் தலைதாழ்த்தி அய்யா அவர்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்' — என்று கோவை, தென்மொழி இயவ வயவர் தென்மொழி அரங்க. தமிழ்மணி இரங்கல் தெரிவித்துள்ளார்.

8) தமிழ்த் தொண்டர் குழாம், தஞ்சை:

'முதற்றாய் மொழியின் மூலங்கண்டு, அதன் மீட்பு மேம்பாட்டு வினையில் தம் வாழ்நாளையே ஈடுபடுத்தித் தமிழ்ப்பகைமின் தாக்குதல்களால் பொருளியல் வாழ்வில் புண்ணுற்றும், தளராது ஏறுபோல் நடந்த எங்கள் தமிழ்த்தந்தை, மொழிஞாயிறு அவர்களின் மறைவுச் செய்தியறிந்து. ஆற்ற வொண்ணாத் துயரில் அழுந்தி நிற்கிறோம். எனினும் இயற்கையின் முறையை உணர்ந்து பாவாணர் பணியைத் தொடர்ந்து தோள்மேல் ஏற்றி ஆற்றவும், அவர்காட்டிய நெறி நின்று உண்மைத் தமிழனாக என்றும் வாழவும் நாங்கள் ஒவ்

www.thamizham.net - Free E book No 7507

வொருவரும் உறுதி பண்ணுகிறோம்' — என்று தஞ்சைத் தமிழ்த் தொண்டர் குழாம் செயலர் கோ. அருட்கையன் (கருணாகரன்) தெரிவிக்கிறார்.

9) தமிழர் உரிமைக் கழகம், உரத்தநாடு :

தனித்தமிழ்த் தந்தை, தமிழ்கடல் மறைமலையடிகளாருக்குப் பின் தனித்தமிழின் ஆழம் கண்டு, உலகமொழிகளுக்கெல்லாம், முதல் தாய் மொழி 'தமிழே' என்பதை ஆராய்ந்து உலகுக் குணர்த்திய மொழிஞாயிறு பாவாணரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரது மறைவு குறித்து அமைதி ஊர்வலம் நடைபெற்றது. இறுதியில் இரங்கல் கூட்டத்தில் கீழ உளூர் திரு. சா கிருட்டிணமூர்த்தி, தமிழர் உரிமைக் கழகத் தலைவர் திரு. சாமி தவிடன் அறி. இ. திருவாளர்கள் மா. கயற்கண்ணன், சி. அ. உத்திராபதி. (தி. க.), ஆம்பல் அரங்கசாமி (கா. கா. தே. க.) இரா. செல்லையன் (அரசுப்பதிவாளர்கள் கழகம்), கணேச மூர்த்தி (இளைஞர் தி. க) சி. சுப்பையன், வழக்குரைஞர், இரா. பண்டரி நாதன் க. மு, புலவர் அ. சித்திர வேலன் ஆகியோர் இரங்கலுரை ஆற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றினார்.

10) மறைமலையடிகள் மன்றம், திருக்கழுக்குன்றம்.

தேசுமுகிப்பேட்டை, மறைமலையடிகள் மன்றம் 17-1-81 அன்று, பாவாணர் அவர்கள் ஒளிப்படத்துடன் அமைதி ஊர்வலம் ஒன்றைப் புலவர் தி. நா. அறிவுஒளி, க. மு. அவர்கள் தலைமையில் நடத்தியது. ஊர்வலத்தில் அனைத்துக் கட்சி அன்பர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். ஊர்வல முடிவில் மன்றச் செயலர் திரு. வி. தெய்வமணி, அவர்களின் வேண்டுகோளின்படி இரண்டு நிமையங்கள் அமைதி காத்து 'ஐயா' பாவாணர் அவர்களுக்கு நெஞ்சக் கண்ணீரைப் படையல் செய்தோம். மற்றும், 22-2-81 அன்று திருக்கழுக்குன்றத்தில் மறைமலையடிகள் மன்றச் சார்பாகத் தமிழ்றிமா பாவலரேறு அவர்களைக் கொண்டு இரங்கல் நிகழ்ச்சி நடந்தது என்று மன்றப் பொருளாளர் திரு. இரா. தமிழ்க்கதிர் தெரிவிக்கிறார்.

11) மொழி, இலக்கிய மன்றம், அரசு சட்டக்கல்லூரி, புதுவை.

பேராசிரியர் பாவாணரின் மறைவினை அறிந்து, புதுவை சட்டக்கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் சொல்லொணாத் துயருற்றோம். இது தொடர்பாக எங்கள் கல்லூரியில் இரங்கல் கூட்டம் ஒன்று 20-1-81 அன்று ஆசிரியர் திரு. வெ. கிருட்டிண குமார் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் பாவாணர் தொண்டு பற்றி உரையாற்றினர். இரங்கல் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பெற்றது. — சு. சந்திரசேகரன், அமைப்பாளர்.

www.thamizham.net - Free E book No 7507

12) பாவாணர் பாசறை, பாவேந்தர் மன்றம், மாவட்ட இலக்கிய அணி, புதுக்கோட்டை :

18-1-81 மாலை ஞாயிறு பாவாணர் மறைவு குறித்த இரங்கல் ஊர்வலம் புதுக்கோட்டை நகரில் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சுப்பராமையா பள்ளியில் முடிவுற்றது. மேற்கொண்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், புலவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், தமிழ்ப் பற்றுளர்களுமாக இருநூறு பேர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இரங்கல் கூட்டத்திற்குப் பேராசிரியர் சொக்கலிங்கனார் தலைமை தாங்கினார். திருவாளர்கள் கரு. செல்லமுத்து, அரங்க. நெடுமாறன், பாவலர் அனந்த சயனம், பா. வென்னரசு, சிவந்த பெருமாள், இலக்குவன், இரா. பாவாணன் ஆகியோர் உரையாற்றினர்.

13) மறைமலையடிகள் தமிழ் மன்றம், பாகூர்.

புதுவை, பாகூர், மறைமலையடிகள் மன்றம், 26-1-81 அன்று, பாகூர் நடுநிலைப்பள்ளியில் இரங்கல் கூட்டம் நிகழ்த்தியது. திருக்குறள் பெருமாள் தலைமையேற்றார். திருவாளர்கள் தென்மொழி தமிழமல்லன், புலவர் தேவிதாசன், முத்துக்கண்ணு, பெரியதம்பி தாமரைக்கோ, மன்றவாணன், கதிர்முத்தையன், சி. நாகலிங்கம், அரிஅரன் ஆகியோர் இரங்கலுரையாற்றினர். இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

14) உ. த. க. தங்கவயல் கிளை, கருநாடகம் :

மொழியறிஞர், தனித்தமிழ்த் தந்தை, மொழிநூற்கதிரவன் பாவாணர் அவர்களின் மறைவு குறித்து தங்கவயல் உ. த. க. கிளை இரங்கல் தெரிவித்தும், அறிக்கை வெளியிட்டும், தன் ஆற்றாமையைப் புலப்படுத்தியது.

15) நடுவண் மின்வேதி ஆய்வகம், காரைக்குடி :

'தமிழ்மேதை பாவாணர் அவர்களின் திடீர் மறைவு அறிந்து, சொல்லொணாத் துயரும் வருத்தமும் கொண்டோம். அவரது அயராத உழைப்பின் பயனாய்த் தமிழ் அகர முதலியும் மற்றும் பல அரிய நூல்களையும் பெற்று மகிழவிருக்கின்ற இவ் வேளையில் அவரது மறைவு நம்மையும் நல்லறிவாளர் பலரையும் காரிருளில் ஆழ்த்தி விட்டது. அவரது பணிகளைத் தொடர்வதும், மேலும் மொழி வளர்ச்சிப் பணியை அயராது செய்வதுமே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும். நொந்து நைந்த நம் உள்ளங்களுக்கு நாமே ஆறுதல் கூறித் தேற்றிக் கொள்வோமாக! - அனைவர்க்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்கள் ந. உமாபதி, ந. இராதாகிருட்டிணன், தெ. தாமசு, இராம. வீரப்பன், க. செயபால், காரைக்குடி.

www.thamizham.net - Free E book No 7507

16) திருக்குறள் மன்றம், பல்லடம் :

18-1-81 அன்று காலே, பல்லடம், திருக்குறள் மன்றத்தின் சார்பாக, மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் மறைவிற்கு இரங்கல் கூட்டம் நடைபெற்றது. திரு. சட்டநாதன் தலைமை யேற்ருர். திருவாளர்கள் - தென்மொழி ந முத்துகுமரன், மா. ஆறுமுகம், கி. சண்முகம் ஆகியோர் பாவாணர் பற்றிய பண்புகள், மொழியாய்வு, தனித்தமிழ்க் கொள்கை முதலியவற்றை விளக்கி இரங்கலுரை யாற்றினர். பொருளரின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் நிறைவுற்றது.

17) பசும்பொன் தேவர் பைந்தமிழ் இலக்கிய அணி, மதுரை :

தனித்தமிழ் வளரவும், தமிழாராய்ச்சித் திறன் பெருகவும், தள்ளாத அகவையிலும் தளராது தமிழ்ப் பணியாற்றிய தமிழ்ப் பெருந்தகை பாவாணர் அவர்கள் மறைவு தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் ஈடு செய்ய வியலாப் பேரிழப்பாகும். அனைவருக்கும் இலக்கிய அணி ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறது என்று செயலர் திரு. ஆ. பெ. அரசு தெரிவிக்கிருர்.

18) தமிழியக்கம், சென்னை :

31-1-81 அன்று மாவட்ட நடுவண் நூலகத்தில் பாவாணர் சார்பில் பாவாணர் இரங்கல் கூட்டமும் நடைபெற்றது. பேரா. இரா. இளவரசு, பேரா. இரா. மதிவாணன், பேரா. பொன். கோதண்டராமன், ந. அரணமுறுவல் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.

19) கொற்கைத் தமிழ் மன்றம், ஏரல் :

நெல்லை மாவட்டம் ஏரல், கொற்கைத் தமிழ் மன்றம் தனது சிறப்புத்தலைவர் மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் இயற்கை எய்தியமை அறிந்து ஆறாத்துயருற்றது. 18-1-81 மாலை திரு. கி. சொ. முத்து தலைமையில் இரங்கல் ஊர்வலம் நடைப்பெற்றது. பின்னர் நிகழ்ந்த கையுறுநிலைக் கூட்டத்தில் மன்றத்தலைவர் முதுபெரும் புலவர் திரு. ச சிவசங்கு, செயலர் புலவர் திரு. க. ஐயாத்துரை, துணைத்தலைவர் புலவர் திரு, சங்கர-பொன்னம்பலம் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர். திரு. ச. ந. சண்முகசுந்தரம் நிறைவுரையாற்றினர்.

20) பாவாணர் இளைஞர் நற்பணி மன்றம், புதுவை.

1-2-81 அன்று மாலை பாவாணர் நினைவுக் கருத்தரங்கு ஒன்றைப் பாவாணர் இளைஞர் நற்பணி மன்றம் தட்டாஞ்சாவடியில் நடத்தியது. திரு. க. தமிழமல்லன், க. இ; கல். இ தலைமை தாங்கினர். பேரா. ம. இலெ. தங்கப்பனர் க. மு ; கல். இ. புலவர் திருமுருகன் க. மு; கல். இ ; புலவர். வே. முத்துக்குமரசாமி க. மு ; கல். இ ; ஆகியோர் கலந்து கொண்டு, பாவாணரின் நூல்கள் பற்றியும், பெருமை பற்றியும் பேசினர். திரு. ந. கிருட்டிணமூர்த்தி வர

www.thamizham.net - Free E book No 7507

வேற்புரை நிகழ்த்தினர். பொருளர் திரு. இல. வேலாயுதம் நன்றி கூறினர்.

21) முத்தமிழ் மன்றம் அரிமணம், புதுக்கோட்டை.

'தண்டமிழின் தந்நிகரில்லாத் தலைமகனாகத் தோன்றி எவரும் இதுகாறும் செய்திராத வேர்ச்சொல் ஆய்வும், வடமொழிப் பிணிப்பறுப்பும் செய்து, தமிழே உலக உயர்தனிச் செம்மொழி என்ற பொருளுரையை மெய்ப்பித்து வாழ்நாள் முழுதும் தமிழுக்கே உழைத்த மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் மறைவு தமிழர்க்கும், ஞால மொழிநூல் ஆய்வாளர்க்கும் ஆற்றொணாப் பேரிழப்பாகும். ஐயகோ! இதனை என்னென்று தாங்குவது! பாவாணர். மறைவு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப் பணிக்கு என்றுமீடு செய்ய வியலாப் பேரிழப்பு. இனி, ஒரு நூற்றாண்டுக் காலம் மொழியுலகு பாவாணர் அவர்களைப் போன்ற ஒரு பேரறிஞரைக் காண்டலரிது!

அறிவுலகின் ஏறே! அருந்தமிழின் தேவே!
செறியுநும் சீராய்வைச் செய்வார் — அறியோமே
பாவாணப் பாரிய தெய்வமே எங்குற்றீர்
ஓவாநல் ஒண்டமிழ் நீத்து.

— என, மன்றத் தலைவர் சுப. குப்புசாமி, செயலர் வை. வீராண்டான் ஆகியோர் இரங்கல் தெரிவிக்கின்றனர்.

22) சிந்தனைப் பேரவை, வடகோவை:

கடந்த 1-2-81 மாலை, வட கோவையிலுள்ள கல்வியகத்தில் நடந்த சிந்தனைப் பேரவைக் கூட்டத்தில், மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து திரு. இரணியன், க. மு. உரையாற்றினர். மொழியாய்வில் பாவாணர் ஆற்றிய அரும் பணிகளையும், அவர்தம் இழப்பு தமிழினத்திற்கு எத்துணையளவு ஈடுசெய்ய இயலாதது என்பதையும் எடுத்துரைத்தார். இறுதியில் சிந்தனைப் பேரவையின் சார்பில் பாவாணர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த தீர்மானத்தைத் திரு. துரை மடங்கன் படித்தார். இரண்டு நிமையம் அமைதியாய் நின்று கூட்டத்தினர் தம் இரங்கலைத் தெரிவித்தனர்.

23) பாவாணர் தமிழ்க் குடும்பம், நெய்வேலி.

18-1-81 நெய்வேலி அரவிந்தர் பள்ளியில் திரு. பொன். தமிழ் மாறன் தலைமையில் ஓர் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் கோ. தங்கவேல், ச. சின்னத்துரை, மாவளவன் முதலியோரும், மாணவ மாணவியரும், பாவாணர் அவர்களைப் பற்றி இரங்கலுரையாற்றினர்கள். இறுதியில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

www.thamizham.net - Free E book No 7507

24) இயற்றமிழ் பயிற்றகம், திருவாரூர் :

1-2-81 அன்று மாலை, வேர்ச் சொல் விளக்குநர் பாவாணரின் இரங்கல் கூட்டம் நிகழ்ந்தது. பயிற்றக உறுப்பினர் அனைவரும் தனித் தனி நினைந்தழுது இரங்கலுரையாற்றினர். பாவலர் அருமருந்தலைவன் பாவாணர் பற்றிக் கையறு நிலைப் பாடல் உரைத்தார். மற்றும் அமைப்பாசான் புலவர் த. ச. தமிழன் அவர்கள், முதலாசான் கண். தமிழன்பன், ஆகியோர் இரங்கலுரையாற்றினர். வை தமிழ்க் குமரன் வரவேற்க, சி. பொற்செல்வன் நன்றி நவின்றார். நிகழ்ச்சி முடிவில் இருமணித்துளி அமைதிகாத்து நெட்டுயிர்ப்பு விடப்பட்டது.

25) உ. த. க குடந்தை :

குடந்தை நகரக்கிளை உலகத் தமிழ்க் கழகச் சார்பாக **8-2-81** மாலை யானையடி நகராட்சித் தொடக்கப் பள்ளியில் பாவாணர் புகழஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. அதன்முன் திரு. வ. தமிழ் மாணிக்கனார் அவர்கள் தலைமையில் ஓர் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. இரங்கல் நிகழ்ச்சிக்கு திரு. கு. வே. பாலசுப்பிரமணியன் க. மு. தலைமை தாங்கினார். திருவாளர்கள் வே. மு. பொதியவெற்பன், கீதாலயன். அ. இரா. இராமசாமி, அரசு, முதலியோர் பாவாணர் பற்றி இரங்கல் பாக்கள் பாடினர். பின்னர் உரைவணக்கம் செய்யப் பெற்றது. அதற்கு திரு. கதிர் தமிழ்வாணன் தலைமை தாங்கினர். திருவாளர்கள், வி. சுந்தரம் உலக. சிவப்பிரகாசம், பா. மா. எழில் முதல்வன், குறள்மணி, சி. அரசிறைவன், சேது. இராமலிங்கம், இரா. சொக்கலிங்கம், பூசேகரப்பாண்டியன், வே. கிருட்டிணசாமி, இர. முருகேசன், வை. குணசீலன், வீர. வாலறிவன் ஆகியோர் இரங்கலுரை யாற்றினர். இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

26) ஆசிரியர் சங்கம், அவநாசி

அவநாசி, தாமசுபுர நடுவம், ஆசிரியர் சங்கச்சார்பில், பாவாணர் இரங்கல் கூட்டம் **24-1-81** காலை நடந்தது. திரு. அ. சாமிநாதன் தலைமை தாங்கினார். பாவாணர் மறைவிற்கு இரண்டு நிமையம் இரங்கல் தெரிவிக்கப் பெற்றது. பாவாணர் தமிழ்த் தொண்டு, அகர முதலிப் பணி ஆகியவை பற்றி, திருவாளர்கள் சண்முக வடிவேலு, க. க. ஆறுமுகம், தாமசு ஆகியோர் உரையாற்றினர். பாவாணரை இழந்து வாடும் தமிழ் அறிஞர்களுக்கும் குடும்பத்தார்க்கும் இரங்கல் தெரிவிக்கப் பட்டது.

27) தங்கவயல் தமிழ்ச் சங்கம் :

தங்கவயல் தமிழ்ச் சங்கத்தினர் தனித்தமிழ் ஞாயிறு பாவாணர் மறைவுக்கு இரங்கலும், கண்ணீர் வணக்கமும் தெரிவித்து, சிறிய துண்டறிக்கைகள் அடித்து நகர் முழுவதும் பரப்பினர். அதில், தனித்தமிழ்க் கப்பல் கரைசேரும் முன்பே கலங்கரை விளக்கத்தின்

www.thamizham.net - Free E book No 7507

ஒளிக்கதிர் மறைந்தது; உலகத் தமிழினத்தின் தலையாய மான மறவர் மறைந்தார் என்று தம் ஆற்றாமையை வெளியிட்டிருந்தனர்,

28) பாவாணர் இரங்கல் கூட்டம், செலாமா, பேராக், மலேசியா.

பாவாணர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து, பாவலர் திரு. அ. பு. திருமாலனார் அவர்கள் தலைமையேற்க, பாவாணர் அவர்களின் திருவுருவப் படம் திறக்கப் பெற்று, ம. தி. க. செலாமா கிளையின் செயலாளரும். தமிழ்ப் பள்ளியின் தலைமையாசிரியருமாகிய திரு. செ. சண்முகனார் அவர்களும், திரு. அ. பு. மணியம் அவர்களும், இடத்தோ ஆசி. உசேன் அவர்களும், மாணவர் இதழாகிய தமிழோசை ஆசிரியர் செல்வர். இரா. திருமால் வளவன் அவர்களும் இரங்கல் உரை ஆற்றினர். இறுதியில் பாவலர் அ. பு. திருமாலன் ஓர் இரங்கற்பாப்பாட, நிகழ்ச்சி நிறைவுற்றது.

தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956)

19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : **சென்னை-5**
2. கால முறை : **திங்கள் ஒருமுறை**
3. அச்சிடுவோர் பெயர் : **திருவாட்டி, மா. தாமரை.**
   இனம் : **தமிழர்.**
   முகவரி : **தென்மொழி அச்சகம், சென்னை-5.**
4. வெளியிடுவோர் பெயர் : **திரு. பெருஞ்சித்திரனார்,**
   இனம் : **தமிழர்.**
   முகவரி : **தென்மொழி அச்சகம், சென்னை-5.**
5. ஆசிரியர் பெயர், முகவரி : **திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5.**
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். } **திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5.**

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்த வரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்,

1—3—1981,
சென்னை-5.

—பெருஞ்சித்திரனார்
(ஒப்பம்.)

www.thamizham.net - Free E book No 7507

தென்மொழி வகுத்த பாவாணர் பொருட்கொடைத் திட்டம்!

அறிவுச் செல்வத்தைத் தவிரப் பிறிதொன்றையும் பொருட்டாக மதியாதவர் பாவாணர். தம் 22-ஆம் அகவை முதல் உயர்பள்ளித் தமிழாசிரியராகவும், பன்னீராண்டுக் காலம் சேலங் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், ஈராண்டுக் காலம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திரவிட மொழியியல் துறை வாசகராகவும் (Reader in Dravidian philology) பணியாற்றினாராயினும், அவர் வருவாயெல்லாம் தம் ஆராய்ச்சிக்குத் தேவையான பொத்தகங்கள் வாங்குவதிலும் அவற்றைப் பேணிக் காக்க உயரிய இருப்புநிலைப் பேழைகள் வாங்குவதிலுமே செலவானது. அவர் எய்ப்பில் வைப் பாகப் பொருள் சேர்த்துக் கொள்ளவில்லை. இந்நிலையில் சற்றும் எதிர்பாரா வண்ணம் அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின் றும் வெளியேற நேர்ந்தது. சிறுவருவாயும் நின்று விட்ட நிலையில் இருந்த இந்தக் காலக் கட்டமே பாவாணர் வாழ்க்கையில் கொடிய வறுமை சூழ்ந்த காலமாகும்.

1959-ஆம் ஆண்டுத் தொடங்கிய **தென்மொழியும்** பொருள் முடையால் இடையறவு பட்டு மீண்டும் அப்பொழுதுதான் வெளி வரத் தொடங்கியிருந்தது. ஆயினும் **பாவலரேறு பெருஞ்சித் திரனார்,** பாவாணரின் வறிய நிலையையும் அதனால் அவர்தம் அரிய ஆய்வுப்பணி செம்மையுற நடைபெற வியலாமையையும் கண்டு, மனம்நொந்து, தி. பி. 1994 நளியில் (1963 நவம்பர்) **'பாவாணர் பொருட்கொடைத்திட்டம்'** என்னும் பெயரில் ஒரு திட்டம் வகுத்துத் தென்மொழியில் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

பாவாணர்க்குக் குறைந்த பக்கம் 15 ஆயிரம் உருவாயேனும் திரட்டித் தரும் பொருட்டு அன்பர்களுக்கு வேண்டுகோளாக விடப் பட்ட அவ்வறிக்கையின் பயனாக அன்பர்கள் பெயரும் தொகையும் தென்மொழியில் வெளியிடப்பட்டு வந்தன.

தமிழ்நலம் ஒன்றே கருதிய தூய தொண்டுள்ளத்தோடு தொடங் கப்பட்ட இத்திட்டத்தின்மீது சிறுமதியாளர் சிலர் மாசு கற்பிக்கத் தொடங்கினர். உலகியலறியாப் பாவாணரும் அவர்கள் கூற்றை நம்புவாராயினர். ஆகவே உருவா 2210. 54 மட்டுமே திரண்டிருந்த நிலையில் தொடங்கப்பட்ட எட்டாவது மாதத்திலேயே முடிக்கப் பட்டு அத்தொகை பாவாணரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னும் அன்பர்கள் சிலர் தொடர்ந்து விடுத்தனர். அத்தொகையும் பாவாணர்க்கு விடுக்கப்பட்டது. அதன்பின் பணம் விடுக்க விரும் பும் அன்பர்கள் பாவாணர்க்கே விடுக்குமாறு ஆற்றுப் படுத்தப் பெற்றனர். இத்திட்டத்தால் பாவாணர்க்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை ஏறத்தாழ உருவா மூவாயிரம் ஆகும்.

— இறை.

www.thamizham.net - Free E book No 7507

முதல் உ.. த க. மாநாட்டில் உரை.



தனித்தமிழ் மறவர் பொன்னம்பலனுர்க்குப் பாவாணர் பொன்னுடை போர்த்துகிறா

ஆசிரியரும் மாணவரும்

'எதிர்பாராத வகையில் உங்க
விட்டுப் பிரிந்து நான் செல்கின்றேன்
தமிழ்மொழியை மீட்டுத் தமிழினத்தை
முன்னேறச் செய்வீர்கள் என்ற நம்பி
கை எனக்குண்டு. என்மேல் அன்
காட்டிய தமிழ் உள்ளங்களுக்கு நன்றி

www.thamizham.net - Free E book No 7507

1967-இல் மதுரையில் நடந்த பாவாணரின் மணிவிழாவின் பொழுது முன்னாள் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா பாவாணர் அவர்களை வாழ்த்திய வரிகள்
(அண்ணாவின் கையெழுத்து மடல்)

OFFICE OF THE CHIEF MINISTER
FORT ST. GEORGE, MADRAS

திரு. தேவநேயப் பாவாணரின்
மணிவிழா நடைபெறுவது குறித்து பெரு
மகிழ்ச்சி கொள்கிறேன்.

பாவாணர், தமிழ்
மொழிக்கும் நாட்டுக்கும்
கிடைத்துள்ள [illegible]
[illegible]
உயர்ந்தவர்.

அவருடைய புலமை,
தெளிவும் துணிவும் மிக்கது.
தமிழ் மொழியின்

2

OFFICE OF THE CHIEF MINISTER
FORT ST. GEORGE, MADRAS

[illegible]
[illegible]
[illegible]
பெருமைக்குரியது, [illegible]
பற்று கொண்ட எவருக்கும்
பெருமிதம் ஏற்படுத்தக்
கூடியது.

[illegible]
[illegible]
[illegible], தமிழ் [illegible]

3

OFFICE OF THE CHIEF MINISTER
FORT ST. GEORGE, MADRAS

[illegible]
[illegible]
[illegible]
[illegible], பாவாணரின் புலமை
[illegible]

பாவாணர் போன்றோர்
பல்லாண்டு வாழ்ந்து
[illegible] தமிழ் மொழிக்
காகத் தொண்டாற்றிட
வேண்டும் என்று வேண்டி,

OFFICE OF THE CHIEF MINISTER
FORT ST. GEORGE, MADRAS

கோரி, அவ்விதமாக
நடைபெறும் மணிவிழா
நிகழ்ச்சியின் வெற்றிக்கு
என் நல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறேன்.

[illegible]
[illegible] தெரிவித்
துக் கொள்கிறேன். வாழ்க
பாவாணர்! வெல்க தமிழ்!

அண்ணாதுரை
[illegible]

www.thamizham.net - Free E book No 7507

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)
மேற்படி அறிக்கை வழிக் கூறுகையில், அவர் ஆற்றிய அளப்பரும் வினையில் ஒரு சிறு கூறுதானும், ஆற்றியிராத இவர்கள், அவ்வினையைத் தீண்டி (!) நிறைவேற்றும் தகுதி தங்களுக்குண்டு என்று பாவாணரை நன்கு படித்திராத பிறரிடம் நெஞ்சாரப் பொய்யுரைப்பது நமக்கு மிகவும் வியப்பாக உள்ளது.

7. மேலும், இக்கால் தம்மை மொழி நூலாசிரியர்கள் என்றும், பன்மொழிப் புலவர்கள் என்றும், கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வாருமோ, 'பாவாணர் தம்மைப் பயிற்றுவித்திருக்கின்றார்' என்னும் அரிய தகுதிச் சான்றுரையை, [பாவாணர் மதுரை உலகத் தமிழ் மாட்டிற்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் — மிகவும் பரபரப்பான அவ் வேளையில் தம்மிடம் மட்டுமே (பாரதக் கதையுள் கண்ணன் இருதிறப் படைகளும் அலைமோதிக் கொண்டு எதிரெதிர் நிற்கும்படி வீரமுட்டமிட்டிருந்த இக்கட்டான அவ்வேளையில், பகவத் கீதை என்னும் மிகப் பெரிய நூல் கருத்துகளையே எடுத்துக் கிளத்தியதாகப் புளுகுவது போல்)] கூறியதாக ஆங்காங்கு கூறியும், அறியாதார் இதழ்களில் எழுதியும், தம்மை அளவிறந்து மதித்துக் கொள்வாருமோ, பிறர் வேறு எவருமோ, இதுவரை, பாவாணர் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாக வெளியிட்டுக் காட்டிய அரிய மொழியாராய்ச்சி, சொல்லாராய்ச்சி நூல்கள்போல் ஒன்றுதானும் எழுதி வெளியிட்டுத் தம் சொற்பிறப்பியலாய்வுத் திறனை மெய்ப்படுத்திக் காட்டவில்லை மொழியாராய்ச்சி என்ற பெயரில் ஓரிருவர் இன்றுகாறும் வெளியிட்டுள்ள ஓரிரு சிற்சிறு நூல்களும் வெறும் கழக இலக்கியச் சொல்லாட்சிகளைப் பொருள் வேறுபாட்டுடன் எடுத்துக் காட்டும் நூல்களே தவிர, சொற்பிறப்பியல் என்னும் ஆய்வின் கீழ் அடங்கும் நூல்களல்ல என்பதை, இத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு, பாவாணரையறிந்தார் எவரும் எளிதின் உணர்வர்

8. பன்மொழிப் புலமை வேறு; மொழிநூலாராய்ச்சி வேறு. பன்மொழிப் புலமை மொழிநூலாய்வுக்கு வேண்டப்பெறும் தகுதிகளுள் ஒன்றே தவிர, அதுவே முழுத்தகுதியாகாது. (இது பற்றிப் பாவாணரின் தெளிவான கருத்துகளை இவ்விதழின் வேறு பக்கங்களில் காண்க.) இனி, பாவாணரை விட பல மொழிகள் பேசவும் எழுதவும் கற்றவர்கள் அன்றும் இன்றும் பலரிருந்தும், அவர்களும் கூட, பாவாணர் செய்த மொழியாராய்ச்சி நூல் போல் எதுவும் இதுவரை எழுதாதிருப்பது ஒன்றே நம் கூற்றை வலியுறுத்தப் போதுமான சான்றாகும். இனி, பன்மொழிப் புலமை போல், இலக்கிய இலக்கணப் புலமையும் கூட, மொழியாய்வுத் தகுதிக்கான ஒரு கூறே தவிர, அதுவும் அதற்கு முழுத் தகுதியைத் தந்து விடாது. 'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்' என்னும் தொல்லுரையையும் தெள்ளுரையையும் இவ்

www.thamizham.net - Free E book No 7507

விடுத்துப் பெரிதும் ஓர்ந்து உணரவேண்டுகிறோம். எனவேதாம் பாவாணர் தம் தகுதிக்கு நுண்ணறிவு சான்ற தம் பிறப்பையும் ஓர் இணைவாக்கிக் கூறினார். இதுபோல், இதுவரை (திருமந்திர நூலாசிரியர் தவிர) வேறு எவரும் தாம் பிறவி யெடுத்தது இதற்கே என்று துணிந்தும் உணர்ந்தும் கூறிற்றிலர் என்பதை அறிதல் வேண்டும்.

9 இனி, சொற்பிறப்பியல் அகரமுதலியன்றி, வெறும் சொல்லகர முதலியைக் கூட தொகுப்பதற்கு எவரும் தகுதியில்லை என்பதும் பாவாணர் கருத்தாகும். (இக்கருத்துக் கியைய இதுவரை தமிழ்க் கென வெளிவந்துள்ள (பல்கலைக் கழக அகராதி உட்பட) ஏழெட்டுப் பேரகர முதலிகளுள், தமிழ் மொழியின் உண்மையான வடிவங் காட்டுவதும், தமிழ்மொழிக்கு ஆக்கமளிப்பதும், தமிழ் மொழிக்கண் உள்ள அத்தனைச் சொற்களையும் இயன்றளவேனும் உள்ளடக்கியது மாக ஒன்றுதானும் இல்லாமலிருப்பதை அறிகையில், மிகச்சரியான, உண்மையான தமிழகரமுதலியைத் தொகுப்பது கூட எவ்வளவு அரிய செயல் என்று அறிதல் வேண்டும். இப் பணியைக் கூட பாவாணர் ஒருவர்தாம் செய்தற்குத் திறமும் பயிற்சியும் பெற்றிருந் தார் என்பது அவருடைய கருத்தாகும். (வேறுமொழி அகரமுதலிகள் வேறு; தமிழ் அகரமுதலி வேறு என்பதைத் தூய தமிழறிஞர்கள் நன்கு அறிவர்; இனி, தமிழ் எழுத்துகளில் இயல்வதால் எல்லாமும் தமிழாகி விடாது 'தினத்தந்தி'யையும், தென்மொழியையும், நோக்கி இவ் வேறுபாடறிக)

10. 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு' என்னும் நூலில், பாவாணர்,

10-1. "ஒரு சில பேராசிரியர் தமக்கென ஆராய்ச்சியின்றி, மேலை மொழி நூலாசிரியர் எழுதியவற்றை மட்டும் படித்துக்கொண்டு, சில பழந்தமிழ்ச் செய்யுட்களையோ நூற்பாக்களையோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பட்டம் பெற்ற துணையானே, தாமும் மொழி நூல் அதிகாரிகளெனத் தருக்கி .... குழறி வருவதாகக் கேள்வி. இதற்கு அறியாமையும் அழுக்காறும் தன்னலமும் தமிழ்ப் பற்றின்மையுமே காரணம்" (பக். 26—27) — என்றும்,

10-2. "கல்வி வேறு, ஆராய்ச்சி வேறு என்பதையும், என் கல்விப் பரப்பையும் ஆராய்ச்சியாழ்வையும் அவர் அறிந்திலர். அவர் உண் மையில் என்போன்று ஆராய்ந்தவராயின், சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் இல்லாச் சொற்களையும், இல்லாப் பொருள்களை யும், உள்ள பிழைகளையும் எடுத்தெழுதுவாராக; அறை கூவி அழைக்கின்றேன். என்னைத்தவிர வேறெவரும் இப் பணியைச் செய்ய வியலாது ....." — (ஷை நூல், பக் 45, 46) — என்றும், கூறியிருப்பதை உற்று நோக்குக. (பாவாணர் கூற்று அறிவியல் படிநிலை வளர்ச்சிக்கு முற்றும் பொருந்தாதெனினும், அப் பணிக்குத்

www.thamizham.net - Free E book No 7507

தேவையான அறிவாழத்தையும், கடின உழைப்பையும், கல்விப் பரப்பையும் அது நன்கு புலப்படுத்துவதாகும்)

11. மேலும், பாவாணரிடம் எமக்குக் கடந்த முப்பத்தைந்தாண்டுகளாகத் தொடர்புண்டு. அக்காலத்தில், பாவாணர் போலும் மொழி நூலாய்விலும் சொல்லாய்விலும் அவரையொப்ப வேறொருவரை யாம் இதுவரை கண்டிலோம். இனி, அவருக்கெனத் தென்மொழி வழி நாம் உழைத்ததும், அவரை உலகுக் கெடுத்துக் காட்டுவதையே நம் வாழ்நாள் பணியாக இதுவரைக் கொண்டதும், அவர் அத்துறையில் கொண்ட முழுத் தகுதி நோக்கியே யல்லாமல் வெறும் ஆசிரியப் பற்றாலோ, அறியாமையாலோ அன்று என்பதை அன்பர்கள் உணர்தல் வேண்டும். இன்னும். அவரிடம் மாணுக்கராக இருந்த அம் முப்பத்தைந்தாண்டுக் காலத்திலும் கூட, அவரின் ஆராய்ச்சி வன்மையையும், அவரெழுதிய நூல்களை முழுவதும் ஒருவாறு கற்றதன் வழி, அவரின் மொழிநூல் நுண் மாண் நுழை புலத்தை முற்றும் நுணுகியறியவும், ஒரோவொருகால் அவர் இடறலையும், சறுக்கல்களையும், அவர் வழியும், மெய்யறிவு நோக்காலும் உய்த்துணரவுமே நாம் அறிந்துளதாகக் கூறிப் பெருமைப் படுகின்றோமே யன்றி, ஒரு சார்பிலேனும் அவரைப்போலும் மொழியாய்வோ, சொல்லாய்வோ செய்வியலும் என்று கூறியோ, எழுதியோ தருக்கினோம் அல்லோம்.

12. மொழியாராய்ச்சி செய்ய அவர்க்கொரு தகுதியுண்டென்பது உண்மை போல், அம் மொழியாராய்ச்சியாளரைக் கண்டு கொள்ள நமக்கும் ஒருவாறு மொழியறிவுத் தகுதியும், மெய்யறிவுத் தகுதியும் உண்டென்பதும் உண்மை. இல்லெனில், அவரையும் கூட, அவர் காலப் பேராசியர் பலரும் நன்கு உணராமலும், போற்றாமலும், ஒருவாறு உணர்ந்த வழி, அவர்க்கு மாறுபட்டும் வந்த நிலையில், நாம் அவரை நன்கு கண்டு கொண்டிருக்கவும், அதன்வழி அவர் அறிவை வெளியுலகுக்கு அறிமுகப் படுத்தியிருக்கவும், சிலகால் அவர்க்கு வந்த எதிர்ப்பை முறியடித்துப் போராடவும் இயலாமல் போயிருக்கும். அவர் பற்றிக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நாம் தென்மொழி வழி எழுதிக் குவித்த அளவும், நூற்றுக்கணக்கான மேடைகளில் அவர் சொல்லாய்வுக் கருத்துகளை மொழிப்புலனற்ற விழிப்பிலா மாந்தர்க்கு நாம் விளக்கிக் காட்டி முழக்கிய அளவும், வேறு எவரும் எழுதவும் உரைக்கவும் செய்திலர் என்பது வெள்ளிடைமலை!

13. மேலும், பாவாணர் துறையில் ஒரு சில ஆண்டுகள் ஒருவர் சொற்றெகுப்பு வகையிலோ, அலுவலக முறையிலோ அவர்க்குத் துணையாக இருந்து விடுவதாலோ, அல்லது அவருடைய நூல்களுள் சிலவற்றையோ பலவற்றையோ மேற்போக்காகப் படித்த வகையாலோ மட்டும், மொழியாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியும் முற்று

www.thamizham.net - Free E book No 7507

மாக அமைந்து விடா. அஃதோர் இயற்கைத் தோய்வு; உலகியல் கலவா உள்ளுணர்வு வெளிப்பாடு. உலகியல் கலப்பின் அவ் வுள்ளுணர்வு சாம்பும் என்றறிக.

14. இனி, பாவாணருடன் அறிவியல் முறையினும் வாழ்வியல் வழியினும் என்றும் இடைப்படுத தொடர்பு கொண்டிருந்த யாம், அவரின் இறுதி நான்கைந்து மாதக் காலத்தில் மட்டும், எம் இருவர்க்குள் ஏற்பட்ட ஓரிரு கருத்து வேறுபாடுகளாலும், அவர் குடும்பத்தினர் ஓரிருவரால் அவர் திசைதிருப்பப் பெற்று விலைமதிக்க முடியா அவருடைய அறிவு உலகியலில் சென்று ஊனறி உழன்றதனாலும், அவர் பொருட்டு நாம் கொண்ட கடந்தகாலப் பேருழைப்பை யெண்ணி இடர்ப்பட்டு வருந்தி, அவர்பால் சிறிது நெருக்கமில்லா திருந்தோம். அவ்வாறு இருப்பினும் அவர் இயக்கங்களை அன்றாடும் கண்காணித்தே வந்தோம். அதுவரை பாவாணர் அவர் துறையில் பணியாற்றும் ஓரிருவரைப் பற்றி அவர்களின் தகுதியின்மைகளைத் தவிர, தகுதி நிலைகளை எம்மிடம் என்றும் எவ்வழியும் சுட்டியதில்லை. இந்நிலையில் பாவாணர் தம் இறுதி வெளியூர்ச் செலவின் பொழுது, திடுமென, எளிதாக, ஒருவர்பற்றி, அதுவும் அவரிடமே, வெறும் வாயளவில், மொழியாய்வுத் தகுதிச் சான்று கூறிவிட்டார் என்பது, புனைந்துரையும் பொய்யுரையுமாகும். யாமறிந்த வகையில், சொற் பிறப்பியல் செய்யும் ஓரளவு தகுதியுடையவராகக்கூட எங்கும் எவரையும் எம்மிடம் பாவாணர் கூறியதில்லை. அவ்வாறு கூறினும், சரியான அடிப்படையில்லாமல் நாம் எதனையும் எவ்வழியும் நம்பி விட மாட்டோம் என்பது அவருக்குத் தெரியும். அதற்குச் சான்றாக இரு நிகழ்ச்சிகளை இங்குக் குறிப்பது, இவ்வகையில் எமக்கும் அவருக்கு முள்ள உணர்வுத் தொடர்பை நன்கு புலப்படுத்திக் காட்டும் என்று கருதுகின்றோம்.

14-1. ஒருகால், பாவாணர் அவரிடம் மிக நெருக்கமாகப் பழகியவரும், அன்பு வைத்திருப்பவரும், அவர் மொழிநூற் கொள்கைகளுக்கு ஆதரவு தந்தவருமாகிய பேராசிரியர் ஒருவரது கட்டுரை யொன்றை நமக்கனுப்பி, அதனைத் தென்மொழியில் வெளியிடுமாறு பரித்துரைத் திருந்தார். அக்கட்டுரையின் தகுதியின்மை நோக்கி அதனை வெளியிடற் கியலாதென்று திருப்பிப் பாவாணர்க்கே அனுப்பி வைத்தோம். இதுபோல் வேறொரு புலவர் கட்டுரையும் அவ்வாறே திருப்பப் பெற்றது.

14-2. மற்றொருகால், யாம் சிங்கை சென்று திரும்பிய பொழுது, இவர் புதிதாகச் சொற்பிறப்பியல் அகரமுதலித் துறை இயக்குநராக அமர்த்தம் பெற்ற அரசுப் பதிவியால், தாம் மேற்கொண்டு உ. த. க. தலைவராக விருக்க வியலாமை கூறி, எம்மை அத்தலைமைப் பொறுப் பேற்கக் கேட்க, யாம் மறுத்துரைப்பவும், பின் அவர்க்கு வேறு வகையில் துணையாக விருந்தவரும், பின்னர் அவர் துறையில் பணி

www.thamizham.net - Free E book No 7507

அமர்த்தும் பெற்றவருமாகிய ஒருவரை அதற்குத் தலைவராக அமர்த்தி விடக் கருத்துக் கேட்டதற்கு, யாம் அதற்கும் மறுப்புத் தெரிவித்து, 'அவர் (பாவாணர்) உள்ளவரை மொழியமைப்பாகிய அக்கழகத் தலைமைப் பொறுப்புக்கு, அவரையன்றி (பாவாணரை யன்றி) வேறொருவர் தலைமை தாங்குதல் சாலவும் சாலாது, ஏற்கவும் இயலாது. என்று கூறியதும், பின்னர் பாவாணர் எம் கருத்தையே ஒப்புக் கொண்டதும் ஆகிய இவ்விரு நிகழ்ச்சிகளும் கருதத் தக்கன.

14-3- இனி, பாவாணரையே கூட, தென்மொழி வழி, செ. சொ. பி திட்ட அறிவிப்பின் பொழுது சொற்பிறப்பியல் அகரமுதலியொழுங் கும், எவையேனும் சில சொற்களுக்குச் சொற்பிறப்பியல் நெறி முறைப்படி விளக்கமும் எழுதித் தந்து, மக்களுக்கும், திட்டம் வகுக்க விரும்பிய எமக்கும், தம் தகுதிநிலையைக் காட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டதன் அடிப்படையில். அவர் அதனையும், பின் அவரை, இஞ்சி, பதி, பொறு என்னும் நான்கு சொற்களுக்கு விளக்கமும் எழுதித்தந்ததும், பின்னர் அவற்றைத் தென்மொழியில் நாம் வெளியிட்டதும் நிகழ்ந்தன. (பார்க்க: தென்மொழி சுவடி 8, ஓலை 11, 12 ; சுவடி 9, ஓலைகள் 1, 2) .

14-4 இந்நிகழ்ச்சிகள் வழி, மொழி நூற் பேரறிஞரும், எம் பெறு தற்கரிய ஆசிரியரும் ஆகிய அவரையே கூட, கருத்தளவானும் வினையளவானும். யாம் எப்பொழுதும் எந்நிலையிலும் எடுத்த எடுப் பிலேயே நம்பி விடுவதில்லை என்பது தெளிவாகும். இனி, பாவாணர்க் கும் யாம் அவ்வகையிலேயே ஆட்பட்டிருந்தோம். இதனை, எங்கள் இருவரையும் நெருங்கியறிந்த அன்பர்கள் நன்கு உணர்வர். கடந்த காலங்களில் யாங்கள் இருவரும் அறக் கலந்து ஒன்றித் தேர்ந்த கருத்துகளே, அல்லது வினைகளே, புறத்து வெளிப் போந்து, பொதுச் செயல்களாக மலர்ந்து, பலவகை மறுமலர்ச்சிக்கும் அடிப்படைகளாய் அமைந்தன என்பது அன்பர்கள் அறியத் தக்கது.

14-5. உண்மைநிலை இவ்வாறிருக்கையில், அவர் ஓடுகிற ஓட்டத்தில் 'உம்மைப் பயிற்றியிருக்கிறேன்' என்று கூறியதாகக் குறிப்பிடப் பெறுவது உண்மையாயின், அது தகுதியுரையாக இருக்க வழியில்லை; ஏதோ ஒருவகையில் பாராட்டுரையாக இருந்திருக்கலாம். முதறிஞர் ஒருவர், அவர் இறப்ப மதிக்கும் தமிழ் மொழிக்குக் கண்ணும் கருத்து மாகிய ஒரு நூல் எழுதும் தகுதியை, ஒரே நொடியில் ஒருவர்க்கு அளித்து விட்டார் என்பதும் அதைப் பிறர் நம்ப வேண்டும் என்று எதிர்பார்ப்பதும், தம்மையும் பிறரையும் ஏமாற்றிக் கொள்ளும் தொல்லது ஏமாறும் வேலையாகவே இருத்தல் முடியும். ஒருவர்க்குத் தகுதி என்பது, ஏதோ ஒரு நிலையில், ஒருவர் (அவர் எத்தகையராகவே னும் இருக்கட்டும்) வாயினால் கூறுவதாலோ மறுப்பதாலோ ஏற்பட்டு விடுவதோ, தவிர்ந்தது விடுவதோ அன்று. வெறும் வாய்வழிப்

www.thamizham.net - Free E book No 7507

புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒருவர்க்குப் பெருமையையோ சிறுமை யையோ, அதுவும் திரிபுணர்வு மிக்க இக்காலத்தில், ஏற்படுத்திக் கொடுத்து விட முடியாது. வீண் விளம்பர வெற்றுரைகளும் உண் மைப் புசழாகாது. 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம் கருமமே கட்டளைக் கல்' என்பது மூதறிஞரின் வாய்மொழி

15. எனவே, இறுதியாக, சொற்பிறப்பியல் தகுதி தமக்குண்டு என்று தம்மை இறட மதிப்பார் எவரேனும் இருந்தால், அவர் பாவாணர் எழுதிக் காட்டிய அவரை, இஞ்சி, பதி, பொறு ஆகிய சொற்களுக்கான பொருள்கள் போல், ஓர் ஐந்து அல்லது பத்து தகு நிலைச் சொற்களுக்கேனும், அவர் வழி நின்று ஆய்வு செய்து தம் திறனை இத்துறை அறிஞர்க்கு வெளிப்படுத்திக் காட்டட்டும். அவ்வாறின்றி, 'மலை தூக்கி மாதேவன்' போல் — 'எனக்கு ஆறு மாதம் சோறு போடுங்கள்; மலையைத் தூக்கிக் காட்டுகிறேன்' என்பதும், ஆறுமாதம் கழித்து மலையைத் தூக்கித் தலையில் வையுங் கள், தூக்குகிறேன்' என்பதுமாகக் கூறப்பெறும் கதை போல்-அது. பொதுமக்களையும் அறிஞர்களையும் ஓரிரண்டு அதிகாரிகளையும் அவர் வழி அரசையும் ஏமாற்றத் துணியும் ஒரு வலக்காரமே ஆகும். ஒரு கால், அத்தகையார் கூற்றை, ஆய்வற்ற நிலையில், ஒருசிறு காலமே நிலைப்புறும் இக்கால் உள்ள அரசு ஒப்புக் கொண்டு, தாறுமாறுகச் செயல் பட்டாலும், என்றும் நிலைக்கும் அறிஞருலகம் அதனை என்றுமே ஒப்பாது என்பதை எல்லாரும் நினைவிற் கொள்ளுக.

16. இனி, பாவாணரோடு, சொற்பிறப்பியலறிவே அடியோடு போய் விட்டதென்று எவரும் கருதிவிட வேண்டா. அது **பாவாணரி லிருந்துதான் தொடங்குகிறது** என்றும், இனிமேல்தான் அது வளர்ச்சியுறும் என்றும், எதிர்காலத்தில் அது நல்ல படிநிலை வளர்ச்சி பெற்று உறுதியாக மலர்ந்து மணம் பரப்பும் என்றும், அதுவன்றி, நம் தேவைக்கென இன்றே அதைத் திடுமென மலரச் செய்து விட வியலாது - அது கூடவும் கூடாது - என்றும் அவ்வழிக் கவலும் அறிஞர்கள் உணர்ந்து கொள்க.

17. தம் பிறவிப் பேற்றாலும், தம் ஐம்பதாண்டுக்கால இடைவிடாத் தவ முயற்சியாலும், பாவாணர் என்னும் மொழிநூல் முனைவன் (முனிவன்) தாம் அரிதின் மூழ்கி, அறிவுப் புலன் விளர்ந்து கண்ட சொற்பிறப்பியல் ஆய்வுண்மைகளை, அவருடன் ஒன்றியுணர்ந்தன்று, அவர் துறையில் ஒதுங்கியிருந்து, ஓர் ஆருண்டளவில் தாம் அறிந்து கொண்டதாக எவர் கூறினும் அஃது எள்ளி நகையாடத் தக்கது என்க.

17–1. இனி, ஒருகால் எவரேனும் ஒருவர், பாவாணருடன் ஏதோ ஒரு வகையில் ஏதோ ஓர் இடைவெளியில், நெருங்கிப் பழகியிருந்த காரணியத்தால், தம் தகுதிநிலையைத் தாறுமாறுக உயர்த்திக் காட்ட

www.thamizham.net - Free E book No 7507

வும், அதையே நம்பித் தமிழ் வளர்ச்சிப் போக்கில் கட்டா முட்டியாகச் செயல் படும் — மொழிப்புலன் முட்டுற்று நிற்கும் - இவ் விழிப்பிலா அரசும், எவரோ ஓரிரண்டு நடைபயில் அதிகார நாயகர்களின் பரிந்துரைச் சாய்கால் வழி, சொற்பிறப்பியல் எனும் ஒப்பிறப்பியல் துறைக்கு, ஏதோ ஒப்புக்குச் சப்பாணியாக அமர்த்தப் பெற்றாலும், அமர்த்தப் பெறும் அவர், தலைவீங்கி வெடித்து விடாமல், அப்பணியினது கடுமையும், ஆழ அகற்சியும் கருதுவதுடன், ஒண்மையுடையம் யாம் என்னும் செருக்கு நீக்கித் தம் இயல்பான மொழியறிவை இறப்ப மதியாமல், அப்பணிப் பொறுப்பை ஏற்காது அமைந்து, தமக் கேற்பது வேண்டிச் செய்தலே சால்புடைமை என்றறிந்து அப் பொறுப்பினைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

17-2. தமிழுக்கு ஆக்கம் சேர்க்கும் முயற்சியே சொற்பிறப்பியல் துறை. இழப்பும் இழிவும் அதில் தலைகாட்டி விடுதல் கூடாது. ஏதங் கொண்டு ஊதியம் போக்கும் நிலையில் நாம் இறங்கி விடுதல் மொழிக்கே கேடுபயப்பதாகும். காலத்தால் பொறுத்துக் கருத்தம் வளர்ந்து செய்யத்தகும் இந்நிலையைச், சடுத்தமும் விரைவும்; இடைத் தொய்வும், தன்னலத் தேவையும் கருதி, இனறே செய்து கெடுத்து விடல் கூடாது.

18. அடுத்து, சொற்பிறப்பியல் அகரமுதலி முயற்சி இடைநின்றால், எதிரிகள் தமிழ்மொழி பற்றி இளக்காரமாக எண்ணவும் மகிழவும் செய்வார்கள் என்றும் கருத்து கூறப் பெற்று வருகிறது. ஆயிர மாயிரம் ஆண்டுகளாய் இல்லாத ஒரு முயற்சி இப்பொழுது தான் தொடங்கப் பெற்று, எதிர்பாரா வகையில், இயற்கையாகவே இடை நின்றது, எள்ளத் தகுந்ததும் இழிவும் ஆகாது. அதைத் தம் முற்றி முதிராத முளையறிவால் தொட்டுத் துலங்காமல் செய்வதும், அதை குறையான வெளிப்பாடுந்தாம், எதிரிகள் மட்டுமன்று, நமக்கு நாமே எள்ளவும் இழிக்கவும் பழிக்கவும் தகுந்ததாகும் என்பதுடன், இதுவரை பாவாணர் போன்ற பேரறிஞர்களால் தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் பெருமையை அழிப்பதும் ஆகும் என்று அறிஞர்கள் கருதிக் கொள்ளுதல் வேண்டும்.

19. பாவாணர் போதிய மொழித் துறைத் தகுதியற்றோரெல்லாம் அல்லது தகுதி நோக்கித் தம்மை நன்கு வளர்த்துக் கொள்ளாதா ரெல்லாம், மொழியாராய்ச்சியும், சொல்லாராய்ச்சியும் செய்யத் துணிவது கண்டு, அடிக்கடி ஓர் ஆங்கிலப் பொன்மொழியைச் சுட்டுவது வழக்கம். அப் பொன்மொழி இது :

'Fools rush in, where angels fear to tread' — Pope.

'தேவதைகள் கால்வைக்கவும் அஞ்சுமிடத்தில், முட்டாள்கள் விரைந்து நுழைவார்கள்'

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

www.thamizham.net - Free E book No 7507

செய்திகள்

1) திருக்குறள் பேரவை, செஞ்சி :

செஞ்சி, திருக்குறள் பேரவையினர் நடத்திய இலக்கியப் பெரு விழா, கடந்த சனவரி 16 17, 18 ஆகிய மூன்று நாட்களிலும் மிகவும் சிறப்பாக, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. ம. பொ. சி, ஔவை நடராசன், சந்திரகாந்தன், தா. சச்சிதானந்தம் முதலிய பேரறிஞர் பலர் கலந்து கொண்டு, திருக்குறள் விழா, சிலப்பதிகார விழா, காப்பிய விழா ஆகிய மூவிழாக்களையும் சிறப்புற நடத்தினர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவிருந்த நிலை, பாவாணர் மறைவால் தவிர்ந்து போனது குறிப்பிடத் தக்கது.

2) சங்க-தமிழ்ச் செல்வன் - பாப்பா நீடு வாழ்க !

நெல்லை மாவட்டம், திருக்குறுங்குடியில், கடந்த 18-1-81 அன்று, நெடுநாளைய தென்மொழியன்பர் **சங்க-தமிழ்ச்செல்வன்** என்ற சங்க-வள்ளிமணாளனுக்கும், **பாப்பா** என்ற கோமதிக்கும், பேரா. **ஆதி முருகவேள்** அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. திருவாளர்கள், பேரா. **பா. வளனரசு** க. மு, கூட்டுறவுத் துணைப் பதிவாளர் **இரா. சந்திரசேகரன்** க. மு, **மு. ச. மங்கலமுடையார்**, சைவநெறி இதழாசிரியர் **பெ. காசி விசுவநாதன்**, ஆதி. சீனிவாசன், **தேசமணி** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சோ. சத்தி அவர்கள் நன்றி கூறினார். இறை வணக்கம் சங்க. சண்முகசுந்தரம் பாடினார். திருமண அன்பளிப்பாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு 51-உம் தென்மொழி இயக்க வளர்ச்சிக்கு உரு. 100 உம் மணமகனால் தரப்பெற்றது. பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடைபெறவிருந்த இத்திருமணம், பாவாணர் மறைவால் தவிர்ந்து போனது குறிக்கத் தக்கது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

20. அரசும், அறிஞர்களும், அன்பர்களும் இவ்வகையில் மிகவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டுகிறோம். அதுவன்றி, இந்நிலையில் விரைவுப் படுவதும், ஒருவரை இறப்ப மதிப்பதும் பாவாணரையும் அவர் அறிவையும் நன்கு விளங்கிக் கொள்ளாத பேதைமையும், அவரை இழிவு படுத்துவதும ஆகும் என்க.

ஆய்விலா தாரும் அறிவுடையார் ஆய்ந்தார்முன்
வாய்திறவா துள்ள விடத்து.

— பாவாணர்- (செ. ப. க. கு. அ. சீ. கே-பக் : 27)

— **பெருஞ்சித்திரன்**

www.thamizham.net - Free E book No 7507

3) திருவள்ளுவர் விழா — புதுச்சேரி.

சென்ற 25-1-81 இல், புதுச்சேரி குறள் நெறி மன்றத்தினர் நடத்திய திருவள்ளுவர் விழா புதுச்சேரி திருவள்ளுவர் அரங்கத்தில் (புதுவை நகரமன்றம்) சிறப்புற நடைபெற்றது. அன்று காலையில் புலவர் அரிமதி. தென்னகன் தலைமையில் வரவேற்பு நிகழ்ச்சியும் பாமாலை யரங்கமும் நடைபெற்றன. திருவாளர்கள் மு. ஆ. சண்முகம், சி. பி. திருநாவுக்கரசு, துரை சுப்பிரமணியம் முதலியோர் கலந்து கொண்டனர். மாண்புமிகு தெ இராமச் சந்திரன் (முதலமைச்சர், புதுவை) விழாத் தொடக்கவுரையும், மாண்புமிகு பெருமாள்ராசா (புதுவை, பொதுப் பணித்துறை அமைச்சர்) வாழ்த்துரையும் ஆற்றினர். முற்பகலில் திருவள்ளுவர்க்கு வரவேற்பு விழாப் பாட்டரங்கம் நடைபெற்றது புலவர் தி. நா அறிவுஒளி தலைவராக அமர்ந்து, பெரியாராக நின்று திருவள்ளுவரை வரவேற்று வாழ்த்திப் பாடினார். பாவலர் தமிழழவேள் பாரதியாராக நின்று வள்ளுவரை வரவேற்றுப் பாடினார். பாவலர் இரா. திருமாவளவன், புலவர். நா. நல்லியக்கோடன் ஆகியோர் பாரதிதாசனாராகவும், அண்ணாவாகவும் நின்று திருவள்ளுவரை வரவேற்றுப் பாடினர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் விழா நாயகர் திருவள்ளுவராக இருந்து வரவேற்புக்கு நன்றியுரை கூறியும், மறைந்த மொழிஞாயிறு பாவாணர்க்கு நினைவுரை நிகழ்த்தியும் அமைந்தார் மாலை 5 மணியளவில் நடைபெற்ற கருத்தரங்கில் வேளாண்துறை அமைச்சர் மாண்புமிகு சிவக்குமார் புலவர் இரா. திருமுருகன், எம் எம். வரதராசலு, முகமது ஆரிப்மியான், பேரா. அ. பசுபதி, பாவலர் க. தமிழமல்லன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா இறுதியில் பேரா. மா. நன்னன் (சென்னை, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்), சிவ. கண்ணப்பர்க்கு பாராட்டுரை வழங்கினார்.

4) பாவாணர் இரங்கல் — மாநிலக்கல்லூரி, சென்னை :

கடந்த 30-1-81 அன்று பிற்பகல், சென்னை, மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பாக, பாவாணர் இரங்கல் கூட்டம் பா. மெ. சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சட்டமன்றப் பேரவைத் தலைவர் மாண்புமிகு க. இராசாராம் மேலவைத் துணைத் தலைவர் மாண்புமிகு புலமைப் பித்தன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் புலவர் இரா. மதிவாணன் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர்.

5) தமிழ் முன்னேற்றக் கழக முதல் மாநாடு — சென்னை.

தமிழ் முன்னேற்றக் கழகத்தின் முதல் மாநில மாநாடு, பிப்ரவரி 6, 7, 8, 9 ஆகிய நான்கு நாட்கள், சென்னை, நடுவண் நூலகக் கட்டிடத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மாநில அமைப்பாளர் பெருமாவலர்கோ, வா. மு. சேதுராமன் அவர்கள் முன்னின்று அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்புற நடைபெறச் செய்தார். மாநாட்டின் இரண்டாம் நாள் பிற்பகல் நிகழ்ச்சியில், தனித்தமிழ்

www.thamizham.net - Free E book No 7507

தழைக்க என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையேற்று ஓர் அரிய உணர்வுரையாற்றினார். சேரர் கொற்ற அமைப்பாளர் தென்மொழி **மறை. நித்தலின்பனார்** தொடக்கவுரையாற்றினார். தொடர்ந்து மலேசிய **அடிகள் இராமதாசர், ந. அரணமுறுவல்,** பேரா. **இரா. சண்முகம்** ஆகியோர் உரையாற்றினர். திரு. அ.ந. **கோபாலன்** தொடக்கவுரையாற்றினார்.

6) சொல்லாக்க மன்றம், சென்னை :

கடந்த 7-2-81 மாலை, சென்னை, சொல்லாக்க மன்றச் சார்பில், மாவட்ட நடுவண் நூலகக்கட்டடத்தில் பாவாணர் இரங்கல் நிகழ்ச்சி நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர்கள் **இராம. வீரப்பன், செ. அரங்கநாயகம்** ஆகியோர் கலந்து கொண்டனர். ஆட்சி மொழிக் காவலர் **கீ. இராமலிங்கனார்,** பேரா. **மதிவாணன், பாவலரேறு பெருஞ்சித்திரனார்,** பேரா. **மதிவாணன்** ஆகியோர் கலந்து கொண்டு இரங்கலுரையாற்றினர். இறுதியில் திரு. **மா. பூங்குன்றன்** தீர்மானத்தைப் படித்து, நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிக்குப் பாவாணர் குடும்பத்தினர் வந்து கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

7) இலக்கிய வள்ர்ச்சிக் கழகம், நீடாமங்கலம்:

நீடாமங்கலம், இலக்கிய வளர்ச்சிக் கழகத்தினர் நடத்திய முதலாண்டு விழா. கடந்த கும்பம் 3, 4, 5 (பிப்ரவரி 14 ,15, 16) ஆகிய நாட்களில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மூன்று நாட்களிலும் அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இரண்டாம் நாள் நடைபெற்ற மாலை நிகழ்ச்சியில் புலவர், த. ச. தமிழனார் தலைமையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாவாணர்

பாவாணர் மேல் சூளுரை

உலகத் தமிழரை ஒன்று கூட்டுவேன் ! — அவர்
உளங்களில் தமிழெனும் யாழை மீட்டுவேன் ! — அவர்க்
கொளிதரும் தமிழ்வர லாறு காட்டுவேன் !
உலகத் தாய்மொழி தமிழென நாட்டுவேன் !
உண்மைப் பழப்பெரும் புகழை ஈட்டுவேன் !
உரங் காட்டுவேன் ! — பகை ஓட்டுவேன் !
உடல் வாட்டுவேன் — உயிர் நீட்டுவேன் !
உரைத்தேன் சூள் ! — என
உரைத்தேன் சூள் ! — என்
ஒருதமிழ் ஆசான் பாவாணர் மேல்
உரைத்தேன் சூள் ! — வலிதாய்
உரைத்தேன் சூள் !

— **பெருஞ்சித்திரன்.**

இரங்கலுரையாற்றினர். தொடர்ந்து வழக்காடு மன்றமும், மறுநாள் சிறுகதையரங்கம், பாட்டரங்கம், ஆகியனவும் நடைபெற்றன. இறுதியில் இலக்கிய வளர்ச்சிக் கழகத்தினர் நடித்த "நால்வர்' நாடகமும் நடைபெற்றது.

8) சென்னைத் தொலைக் காட்சியில் பாவாணர் இரங்கலுரை.

கடந்த 19-2-81, சென்னைத் தொலைக் காட்சியில் இரவு 8-15 மணிக்கு வண்ணக் களஞ்சியத்தில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் எனனும் தலைப்பில் ஓர் இரங்கல் நிகழ்ச்சி ஒளிபரப்பப் பெற்றது. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பேரா. வீர பாண்டியன் வினவிய பாவாணர் பற்றிய வினாக்களுக்கு விடை யளித்து, அரிய பல கருத்துகளை வெளிப் படுத்தினர். நிகழ்ச்சி அனைவராலும் பாராட்டி வரவேற்கப் பெற்றது.

9) திருக்குறள் பேரவை, செஞ்சி.

பாவாணர் மறைவால், கடந்த 16-1-81 இல் செஞ்சி நகர-மக்கள் இழந்த பாவலரேறு நிகழ்ச்சி வாய்ப்பை, ஈடு செய்யும் பொருட்டு, செஞ்சியில், சென்ற 21-2-81 அன்று மாலை, திருக்குறள் பேரவை நிகழ்ச்சி மீண்டும் நடைபெற்றது. புலவர் திரு. ந. நட ராசன் வரவேற்புரை யாற்றினர் புலவர் திரு தெ. வ. அனந்த ராமன் அறிக்கை படித்தார். புலவர். ந குப்பு அவர்கள் தலைமை யில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'திருவள்ளுவர் வழியில்' என்னும் தலைப்பில் அரியதோர் இலக்கிய ஆய்வுரை நிகழ்த்தினர். அனைவரும் பெருமித முற்று மகிழுமாறு அவ்வுரை இருந்தது. திரு. இரா. பரசுராமன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. நிகழ்ச்சிக்குப் பின்புலமாக விருந்த பண்டுவர். திரு. பாலதண்டா யுதம், புலவர். திரு. நயப்பு அறிவுடை நம்பி, திரு. இரா. இராம லிங்கம் ஆகியோர் முயற்சியால், நிகழ்ச்சிக்குப்பின் பத்துப்பேர் தென் மொழி உறுப்பினர்களானார்கள்.

10) மறைமலையடிகள் மன்றம், தேசுமுகிப் பேட்டை :

திருக்கழுக்குன்றம், தேசுமுகிப்பேட்டை, மறைமலையடிகள் மன்றத்தினரால், சென்ற 22-2-81-இல், பாவாணர் இரங்கல் கூட்டம் நிகழ்ந்தது. நிகழ்ச்சிக்கு திரு. ந. மாணிக்கம் தலைமை தாங்கினர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாவாணர் வாழ்வியல், தமிழ்ப் பணி பற்றியும், திரு. இரா, மதிவாணன் க. மு. அவர்கள், பாவாணர் மொழி பாய்வு பற்றியும் சொற்பொழிவாற்றினர் நிகழ்ச்சி மிகவும் பயனுடையதாக விருந்தது. இரவு பம்பாய், ரோகாவைச் சேர்ந்த தென்மொழியன்பர் திரு. வி. இறையழகன் சார்பில் ஒரு விருந்தும் தென்மொழி வளர்ச்சிக்கு உரு : 25/- நன்கொடையும் தரப் பெற்றன.

www.thamizham.net - Free E book No 7507

28-2-81-அம் நாள் வரை நன்கொடை வரவுகள்

1.	23-12-80	இர. இடேவிட்சன், செயசந்திரா செயலர், ஊற்றங்கரை தமிழ்ச் சங்கம்	10-00
2.	29-12-80	இரா. பெருமாள், மலேசியா	80-00
3.	29-12-80	நாரண. திருவிடச்செல்வன், மலேசியா	50-00
4.	30-12-80	வி காந்தி, வெங்காலூர்	4-00
5.	2-1-81	இரணியன், கோவை	10-00
6.	2-1-81	க கண்ணன் கரடிப்பட்டி	29-00
7.	6-1-81	இர. காசிநாதன். க. இராசேந்திரன், மா. அரங்கராசன், கி. சோமசுந்தரம், ப. சாம்பசிவம் மேகாலயா	25-00
8.	2-2-81	க. வேங்கடேசன், 'மூலிகைமணி' ஆசிரியர் சென்னை.	50-00
9.	4-2-81	இரணியன், கோவை	10-00
10.	10-2-81	இர. காசிநாதன் க. இராசேந்திரன், மா. அரங்கநாதன், கி. சோமசுந்தரம், ப. சாம்பசிவம் மேகாலயா	25-00
11.	12-2-81	தே. செல்வராசு, புதுவை-7	5-00
12.	17-2-81	ஏ. பி. திருமாலன், மலேசியா	31-25
13.	26-2-81	கல்லை- அருட்செல்வன் —பூங்கோதை சுள்ளெறும்பு ஆண்மகவு ஆலமர் செல்வன் பிறந்ததன் நினைவாக	20-00
14.	26-2-81	வீ. இறையழகன், ரோகா, பம்பாய்	25-00
15.	25-2-81	பாலகங்காதரனார், கிராடிப்பட்டி திருச்சி	103-00

0 நன்கொடை நல்கிய தூய தமிழ் நெஞ்சங்கட்கு நன்றி.

0 குழந்தை ஆலமர் செல்வன் நீடூழி வாழ தென்மொழியின் உளமார்ந்த வாழ்த்துகள்!

தமிழ்ச்சிட்டு — ஓர் அறிவிப்பு

தென்மொழி பாவாணர் நினைவிதழால் இம்மாதத் தமிழ்ச்சிட்டு வெளிவரவில்லை. அடுத்த மாத இதழுடன் சேர்ந்து வரும். அன்பர்கள் பொறுத்துக் கொள்க. — அமைச்சர்.

தென்மொழி இயக்க அமைப்பு மாநாடு விரைவில் சென்னையில் நடைபெறும். முழுவிளக்கம் பின்னர்! அன்பர்கள் அணியமாகுக! —அமைப்பாளர்

www.thamizham.net - Free E book No 7507

பாவாணர் கையறுநிலை

பாவாணர் என்றே பெயர்சொல்லி வையகத்தார்
நாவாரப் போற்று தமிழ் நாயகமே — 'சாவேனே'
என்றுரைத்து விட்டகன்றாய் என்செய்வேங் கையற்று
நின்றழுவ தல்லால் நினைந்து ! 1

வீறு நடையும் விளங்கு முகப்பொலிவும்
ஏறு மடங்கலெனும் ஏக்கழுத்தும் — மாறின்றி
ஊடுருவிப் பார்க்கும் ஒளிவிழியுங் கைவீச்சும்
நாடுமால் என்கண் நயந்து ! 2

குப்பாய மேனி குலுங்கு நகையெழிலை
எப்போது காண்பேன் இனியுலகில் — அப்பாவோ
துஞ்சினாய் என்னுந் துயரப் பெருநெருப்பு
நெஞ்சை வெதுப்புமால் நீடு ! 3

கல்விக் கழகு கசடில் மொழியென்னுஞ்
சொல்லுக் கிலக்கியமாந் தோன்றலே — சொல்லின்
தொகையறிந்த தூய்மையோய் தொல்தமிழை மீட்கும்
வகையறியேம் வாழ்வும் வறிது ! 4

வேருக்கு முன்முளையும் வித்தும் நுணித்தாய்ந்து
பாருக்குள் முந்தியது பைந்தமிழே என்றறைந்தாய்
அஞ்சொல்நுண் தேர்ச்சி அறிஞநீ ஒய்வுபெறத்
துஞ்சினாய் கொல்லோ துணிந்து ! 5

கடல்கொண்ட தென்குமரி நீணிலமே மாந்தன்
உடல்கொண்ட தென்றபே ருண்மை — திடமாய்
அடித்தடித்துச் சொல்லினையே அண்ணால்நின் போல
முடித்தெடுத்துச் சொன்னார் எவர் ! 6

மறைமலையின் மெய்ப்புகழைப் பன்மடங்காய் மேலும்
நிறைவுறவே நீட்டி வளர்த்தாய் — முறைதிரியா
வக்கணையை நின்வாய் வழங்கும் உவமைகளை
எக்கால் நுகர்வேம் இனி ! 7

கூவாய் இளங்குயிலே கோதில்சீர்ப் பாவாணன்
நாவாய்ப் பயின்றதமிழ் நல்லிசையை — ஆவா
தனியே இருந்தொருநாள் பாடிக்காண் பித்தான்
இனிய குரலில் எமக்கு ! 8

வண்ணக் கிளியேயெம் வாட்டந் தவிர்ப்பாயோ
அண்ணல் பழகுதமிழ்க் (கு) அங்காந்தேம் — எண்ணிலாச்
சீர்த்திமிகு பாவாணன் செந்நாப் பயின்றதமிழ்
நேர்த்தியுடன் நீபேசிக் காட்டு ! 9

—புலவர். இறைக்குருவனார்

(அட்டை 2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்தமிழ் மேலென்றே உண்மை எடுத்துரைப்போன்
செந்தமிழன் ! செந்நெறி பயன்மழை ! — நந்தமிழின்
கீழறுப்போன் கீழோனே ! தேவநே யர்வாழ்க !
வாழிய செந்தமிழ் மாண்பு.

(குயில்-22-8-60)

www.thamizham.net - Free E book No 7507

பாவாணரின் கையெழுத்து

மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் மிகவும் நுண்மையான அறிவினர் ஆகையால், அவர் கையெழுத்தும் மிக நுண்மையாகவே இருக்கும். ஒரு பெரிய முழுத்தாளில் எழுதுவதை ஓர் அஞ்சலட்டையில் அடங்கும்படி எழுதிவிடுவார். எழுத்துகளை இணைத்து இணைத்து எழுதினாலும் கையெழுத்து மிக அழகாக இருக்கும். எழுதி எழுதிப் பண்பட்ட கையெழுத்தாக (Cultured Handwriting) அது இருக்கும். மாதிரிக்காக அவர் பாவலரேற்றிற்கு எழுதிய இரு மடல்களின் இரு சிறு பகுதிகள் இங்கு வெளியிடப் பெறுகின்றன. அவற்றில் பாவாணர் அவர் தலைமாணாக்கர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்க்குப், "**பல்லாயிரம் மாணவர் என்னிடம் பயின்றனர். இறுதியில் தமிழ்ப்பற்றும் தமிழாசிரியன் மாட்டன்பும் உள்ளவனாக நீ ஒருவன் தான் தேறினாய்;** ..... நீயும் நின்குடும்பமும் தமிழ் தழைக்குமாறு இறைவனருளால் நீடு வாழ்க" என்று ஒருகால் ஒரு மடலிலும், வேறொரு சூழ் நிலையில் இன்னொரு மடலில் "**நாடு முழுதும் 35 ஆண்டுகளாய்ப் பல்லாயிரம் மாணவர்க்குக் கற்பித்தேன். அவருள் நீ ஒருவனே தமிழனும் தமிழ்த் தொண்டனுமானாய்.** என் அறியாமையால் ..... குற்றத்தை உன்மேலேற்றி உன்னைப் புண்படுத்தினேன், நீ அதையும் பொறுத்துக் கொண்டு, நன்றல்லதை மறந்து நன்றையே நினைத்தாய். என் மனைவியார் நோய் முற்றிய காலத்தும் இயன்றவரை பொருளுதவினாய். அதனால் உன்னை நோக்கியே என் எதிர்காலத் தமிழ்த் தொண்டும் நிகழவிருக்கின்றது." என்றும் எழுதியிருப்பதை அன்பர்கள் கண்ணுறுவார்களாக. இவ்விரு மடல்களும் தி. பி. 1994 (கி. பி. 1963)-ஆம் ஆண்டளவில் எழுதப் பெற்றன.



www.thamizham.net - Free E book No 7507